அறிவுத் தேடல்

வர்த்தகப்பிரிவு

க.பொ.த. (உ/த) - வர்த்தகப்பிரிவு சார்ந்த மாதாந்த சஞ்சிகை

பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் இலங்கையின் முதல் மாதாந்த வணிகஞ்சி

Rs. 105/=

The MCQ Quiz Bank

Cover Image | larry ellison

அறிவு பதிப்பகம்

28 இதழ்

2012 ஒக்டோபர்

ISSN-2012-6336

Maximum Retail Price Rs. 105/=

ISSN - 2012 - 6336

2012 - 6336

இவ்விதழில் உள்ளே...

வணிகக்கல்வித் தேடல்

உற்பத்தி அபிவிருத்தி

- பேராசிரியர் ஜகத் பண்டாரநாயக்க

ஆசிரியர் தேடகள்

பொருளியல் தேடல்

VICEGUIDE

பொருளாதார வளர்ச்சி

- கலாநிதி மு. கணேசமூர்த்தி

VICEGUIDE

பொருளியலுக்கான அறிமுகம்

- கலாநிதி ந. ரவீந்திரதுரை

மாற்றல் வருமானம்

- சிரேஷ்ட விரிவுரையாளர் காமினி வீரசிங்க

ECON BITZ

கணக்கீட்டுத் தேடல்

கணக்கீட்டு நோக்காளல

- சிரேஷ்ட விரிவுரையாளர் தயானந்த அம்பாங்கொட

- சிரேஷ்ட விரிவுரையாளர் அனில் பீனாந்து

ஆசிரியர் தேடகள்

ec way

Current Affairs Cafe

www.arivuththedal.com

CMA ACCA CIMA Chartered Institute of Management Accountants NORTHSHORE

உயர்தர வணிக கற்கையின் தேசிய ஊடகம்

Register with CMA for a Professional Qualification in Management Accounting with Pending A/L results

Students with such results can sit for the Foundation Level Examination in May 2013

For any further details:
Tel. : 2506391, 2507087
email : info@cma-srilanka.org
web : www.cma-srilanka.org

Why choose CMA?

- Cost effective
- International Recognition
- Completion of all stages within 3 to 4 years
- Degree Pathway
- MBA at the PIM (Univ. of Sri J'pura)
- Recognized by CGA Canada, CPA Australia, ACCA UK.

INSTITUTE OF CERTIFIED MANAGEMENT ACCOUNTANTS OF SRI LANKA CMA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையில் முதன் முறையாக
உயர்தர மாணவர்களுக்காக
முழுமையான வழிகாட்டல்
இணையத்தளம் உதயமாகிறது...

www.arivuththedal.com

- மூத்த ஆசிரியர்களின் ஆக்கங்களை பெற்றுக்கொள்ள.
- உங்கள் துறைபற்றி தெரிந்துக்கொள்ள.
- நடைமுறை விடயங்களில் தெளிவினை பெற்றுக்கொள்ள.

இணையத்தினூடான கற்கையில்
இன்றே இணையுங்கள்....

நேரலையில் பல்தேர்வு வினாக்களை
பயிற்சி செய்வதற்கான வாய்ப்பு
டிசம்பர் மாதம் முதல் உங்களுக்கு கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. Sajeevan (09)

Editorial

இதழாசிரியர்
பா. பானுசந்தர்
0719 494 227

பிரதம பதிப்பாசிரியர்
ச. சிவபாஸ்கரன்
0777 747 245

திட்ட ஆலோசகர்
இரா. பிரவிந்த

பதிப்பகம்
அறிவுப்பதிப்பகம்
இல.3, சென். கில்டாஸ் ஒழுங்கை,
கொழும்பு - 03.
0114 515 253

கணனி வடிவமைப்பு
M. சுகந்த
0773 914 995

புத்தக வடிவமைப்பு
ADAH CREATIVE
17/1, Singhe Rd, Mabola, Wattala
web : www.adahcreative.com
Shan : 0773 926 306
Suga : 0773 914 995

அச்சகம்
வீமாஸ் அச்சகம்
இல. 82, ஸ்ரீ ரட்ணஜோதி
மாவத்தை, கொழும்பு - 13.
தொ.இல. 0112 431 588

இலங்கையின் கல்வி வரலாற்றில்
முதன் முதலில் இணையத்தளத்தில்
மீட்டல் செய்யும் வாய்ப்பு
அறிவுத்தேடலினால்
உதயமாகின்றது.

www.arivuththedal.com

க.பொ.த உயர்தர பரீட்சைக்கு வர்த்தகப்பிரிவில் தோற்றுகின்ற மாணவர்களுக்கு 3 ஆண்டுகளாக மாதாந்த சஞ்சிகையூடாக அறிவுத் தேடல் வழிகாட்டல்களை வழங்கியது. இப்பணியின் மற்றுமொரு பரிணாமம் தற்போது உதயமாகியுள்ளது. இன்றளவில் இணையத்தளம் என்பது எல்லா விடயங்களிலும் ஆக்கிரமித்துள்ளது எனக்கூறின் மிகையல்ல. குறிப்பாக இன்றைய மாணவர் சமுதாயம் இணையத் தளங்களிலே பல மணி நேரத்தை செலவழிப்பது உண்மை. இந் நிலமை உண்மையில் மாணவரை தமது உயர்தர கற்கையில் நேரம் செலவிடுவதை தடுத்து விட்டதா? என சற்று சிந்தித்தால் பெரும்பாலும் "ஆம்" என்ற விடையே எழுகின்றது. சமூக வலைத்தாக்கங்களிலும், பொழுதுபோக்கு இணையங்களிலும் மாணவ சமூகம் மட்டுமல்ல, எல்லா வயது சமூகமும் தம்மை உட்படுத்திக் கொண்டுள்ளது. இது சில நன்மைகளை எமக்கு தந்தாலும், பல பிரச்சினைகளை தந்துவிட செய்கின்றது. குறிப்பாக உயர்தர பரீட்சையில் சிறப்பாக நேரத்தை முகாமை செய்ய வேண்டிய மாணவர்களில் பலர் இன்று Facebook என்ற அரசனுக்கு அடிமையாகி இருக்கின்றனர். இது சரியா? தவறா? என்பதற்கு அப்பால் இதனால் எமது பெறுமதியான நேரம் வீணாகின்றது என்பதை உணர வேண்டும். இத்தகைய சூழ்நிலையிலேயே அறிவுத்தேடல் தமது இணையத்தளத்தையும் மாணவருக்கு வழங்க வேண்டும் என்று முனைப்புடன் உங்கள் கற்கைகளுக்கு உதவும் கரமாக தமது இணையத் தளத்தை உருவாக்கியுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டதைப்போன்று மாணவர் இணையத்தளத்தையும் தமது கற்றலுக்காக பயன்படுத்த வேண்டும் என்பதே எமது எளிமையான இலக்காகும். எமது இணையத்தளம் முற்று முதலாக ஒரு சுயகற்றல் தளமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தற்போது உங்கள் கணணித்துறையில் எமது இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதனூடாக எமது தனித்துவத்தை நீங்கள் உணரலாம்.

இணையம் கல்விக்காக

இதழாசிரியர்,
பா.பானுசந்தர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உற்பத்தி அபிவிருத்தி

பேராசிரியர் ஜகத்பண்டார நாயக்க
Visiting Professor
Scholl of Business Studies
Algonquin College - Canada

முகாமையாளர்களுக்கு முக்கியமானதும் அதே நேரத்தில் கடினமானதுமான கருமம் உற்பத்தி (பொருள் அல்லது சேவை) தொடர்பான உபாய மார்க்கத்தை விருத்தி செய்தலே ஆகும். உற்பத்தியை விருத்தி செய்து அதனை சந்தைக்கு வழங்குவதற்கு சில மாதங்களோ அல்லது வருடமோ செல்லலாம். இது குறுங்காலத்தில் மேற்கொள்ள முடியாத ஒன்றாகும். உற்பத்தி தொடர்பான தீர்மானம் ஏதேனும் ஒரு விடயத்தால் தவறாக அமையுமானால் நிறுவனமே முழுவதுமாக தோல்வியடைய வேண்டிய நிலை உருவாகும். ஆகவே உற்பத்தி அபிவிருத்தி தொடர்பிலே கீழ்வரும் படிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

01. புதிய எண்ணங்களை உருவாக்குதல் (Generating New Ideas)

உற்பத்தி தொடர்பான புதிய எண்ணங்களை பல்வேறு மூலங்களினூடாக வெளிப்பட முடியும். அதாவது வாடிக்கையாளர்கள் மூலமாக, விற்பனை ஊழியர்களின் மூலமாக, சந்தை ஆராய்ச்சியாளர்கள் மூலமாக, போட்டியாளர்கள் மூலமாக புதிய எண்ணங்கள் பெறப்படமுடியும். புதிய உற்பத்தி தொடர்பில் மட்டுமல்ல ஏற்கனவே இருக்கின்ற உற்பத்தியையும் மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் புதிய எண்ணங்கள் பெறப்படமுடியும்.

02. உற்பத்தி எண்ணத்தை விருத்தி செய்தலும், வெளிப்படுத்தலும் (Develop & Screen Product Concept)

பெறப்பட்ட புதிய எண்ணத்தை மேலும் விரிவுப்படுத்தி அதனை பிரயோக ரீதியிலான உற்பத்தி எண்ணமாக மாற்றுதல் வேண்டும். இதற்கென புதிய எண்ணங்களை சிறப்பாக முகாமையாளர்கள் பரிசீலிக்க வேண்டும். இவ்வாறான பரிசீலினை மூலமாகவே சந்தைக்கு தேவையான வெற்றிகரமான உற்பத்தியை இனங்காண முடியும்.

03. சந்தை உபாய வழிகளை செய்தல்.

தெரிவு செய்யப்பட்ட உற்பத்தி தொடர்பில் முதல்நிலை திட்டமொன்றை சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள் உருவாக்குதல் வேண்டும். இச்சந்தையின் இலக்கு வாடிக்கையாளர்கள் (Pontential Customer), மாற்று விலை, விநியோக வழிமுறை, மேம்படுத்தல் வழிகள் என்பவற்றை விருத்தி செய்தல் வேண்டும்.

04. வணிக இலக்குகளை இணங்காணுதல் (Analiyze Business Potential)

உற்பத்தி எது? அதனை கொள்வனவு செய்வோர் யார் என்பன பற்றி தெளிவாக அடையாளப் படுத்திய பின் நிதி முகாமையாளர்களால் மேற்கொள்ளப்படவேண்டிய கருமம் இதுவாகும். இங்கு திட்டமிட்டப்பட்ட உற்பத்தியை மேற்கொள்ள ஏற்படும் கிரயத்தை கணிப்பிட்டு அவ்வுற்பத்தி மூலம் பெறுகின்ற வருமானத்துடன் ஒப்பு நோக்குதல் வேண்டும். இங்கு இவ் ஒப்பீடு அனுகூலமானதாக காணப்படின் முன்னோக்கி செல்ல முடியும். இல்லையெனில் இதனை மேலும் சிறப்பாக்குவதற்கான வழிமுறைகள் கண்டறிதல் வேண்டும்.

05. உற்பத்தி வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி (Design & Develop the Product)

நிதிரீதியாக குறித்த உற்பத்தி அனுகூலமானதாக காணப்படுமாயின், அடுத்த படிமுறையாக உற்பத்தி வடிவமைப்பு தொடர்பான கருமங்களை மேற்கொள்ளுதலை குறிப்பிடலாம். உற்பத்தியின் வடிவத்துக்கு ஏற்றவகையில் சில மாதங்களோ அல்லது சில வருடங்களோ எடுக்கலாம். வேகமாக மேற் கொண்டால் போட்டிகளை சிறப்பாக எதிர்கொள்ள முடியும்.

06. சந்தையை பரிசீலித்தல் (Test Market)

முதலில் பாரியளவில் உற்பத்தியை மேற்கொள்ளக்கூடாது. பாரிய முதலீட்டை மேற்கொண்டு பாரியளவில் உற்பத்தியை மேற்கொள்ளாது, குறைந்தளவில் அதாவது மாதிரி (Sample) அளவில் உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்குதல் வேண்டும். இவ்வாறு மேற்கொள்வதனூடாக உற்பத்தி தொடர்பில் நுகர்வோரின் நிலைப்பாட்டை அறிய முடியும். இந் நிலைப்பாட்டை, கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

07. விற்பனைக்கென சந்தைக்கு வழங்குதல் (Commercialize)

உற்பத்தியை மேற்கொள்ளுதல் சாதகமானது என கண்டறிந்த பின்னர் பாரியளவில் சந்தைக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உற்பத்தியை வழங்க முடியும். இதன் மூலம் வெற்றிகரமான சந்தையினை பெறமுடியும். எவ்வாறெனினும் இங்கு குறிப்பிட்ட 07 படிமுறைகளும் நிச்சயம் வெற்றியளிக்கும் என கூற முடியாது. பிரதிகூலங்களை குறைத்துக் கொள்வதற்கு இப்படிமுறைகள் வழிவகுக்கும்.

உற்பத்தி வகைகள்

உற்பத்தியை அடிப்படையில், 'கட்புலனாகும், கட்புலனாகதவை' என வகைப்படுத்த முடியும். இவற்றில் கட்புலனாகுபவை பொருட்கள் எனவும் கட்புலனாகதவை சேவைகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

எவ்வாறெனினும் இவ்வகைப்பாட்டுக்குள் தெளிவாக சில உற்பத்திகளை உள்ளடக்க முடியாது. உதாரணமாக நாம் கணனியொன்றை கொள்வனவு செய்வதாக கருத்திற் கொள்ளுங்கள். கணனியினை கொள்வனவு செய்யும்போது கணனிசார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களையும் கட்டாயமாக கொள்வனவு செய்தல் வேண்டும். (MS Dos, Windows, Excel, etc). அது மட்டுமின்றி விற்பனைக்கு பிந்திய (After sale service) பாதுகாப்பு திட்டங்கள் (Protection Plan) போன்றவற்றையும் கொள்வனவு செய்தல் வேண்டும். ஆகவே இவ்வுதாரணம் மூலம் ஒரு உற்பத்தியினை கொள்வனவு செய்யும் போது கட்புலனாகும் கட்புலனாகாத இரண்டும் காணப்படுவதை காணலாம். கீழ்வரும் அட்டவணை மூலம் உற்பத்தி வரிசையானது பொருட்கள் சேவைகளின் இடைத்தொடர்பை காட்டுகின்றது.

உற்பத்தி வரிசை (Product Continues)



இவ்வட்டவணையின் படி காப்புறுதி மற்றும் ஆலோசனை சேவை (Consultancy) என்பன ஆலோசனை சேவையாக கருதப்படுவதோடு, பாண், பாதணி என்பன கட்புலனாகுபவை என்பன பொருட்களாகும். உடனடி உணவுகள் (Fast Food) பொருட்கள் சேவைகள் ஆகிய இருவகுதிகளுக்குள்ளும் உள்ளடங்கும். காரணம், இவற்றில் கட்புலனாகும், கட்புலனாகாத இரண்டு பண்புகளும் உள்ளடங்கி யிருத்தலே ஆகும். உடனடி உணவுகள் கட்புலனாகுபவை. அவற்றை உருவாக்குதல், சந்தைப்படுத்தல் என்பன கட்புலனாகாதவை என்பதனால் சேவைகளாகும்.

கட்புலனாகாத உற்பத்திகளில் விஷேட பண்புகளை கண்டுகொள்ள முடியும். இவற்றை சந்தைக்கு வழங்கும் போதான கட்புலனாகாத்தன்மை ஒரு பண்பாகும். சேவைகளை வழங்கும் போது கட்புலனாகும் பொருட்களும் இணைந்து வழங்கப்பட முடியும். சேவைகளின் மற்றுமொரு பண்பு இவற்றை சேமிக்க முடியாமை ஆகும். நபர்களுக்கு தேவையான போது சேவைகளை சேமித்து வைத்து வழங்க முடியாது. சேவைகள் என்பது காயத்தோடு தொடர்புடையதாகும்.

(Time Senstive) நபர்களுக்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் வழங்கப்படல் வேண்டும். முற்கூட்டியோ, கால தாமதமாகவோ சேவையினை வழங்க முடியாது. சினிமா கொட்டகையொன்றில் ஆசனமொன்று விற்பனை செய்யப்படாதிருப்பின் வருமானம் வீழ்ச்சியடையும். விமான மொன்று பயணிக்க தொடங்கியப் பிறகு விற்பனை செய்யப்படாத ஆசனங்களின் வருமானம் வீழ்ச்சியடையும். இவ்விற்பனை செய்யப்படாத ஆசனங்களை மீண்டும் விற்பனை செய்ய முடியாது. சேவைகளின் இயல்பு இதுவே ஆகும். எனினும் கட்புலனாகும் பொருட்களை களஞ்சியப்படுத்தி பின்பு விற்பனை செய்ய முடியும்.

பயன்பாட்டின் அடிப்படையில் பொருட்களை வகைப்படுத்த முடியும். அதாவது உற்பத்தியை பயன்பாட்டின் நோக்கத்தின் அடிப்படையில் நுகர்விற்காகவா? அல்லது வணிக நடவடிக்கைக்காகவா? இங்கு இறுதி நுகர்வு நோக்கில் கொள்வனவு செய்வோர் குறைந்தளவிலேயே பொருட்களை கொள்வனவு செய்வர். ஆயினும் வணிக நோக்கிலான கொள்வனவு செய்வோர் பாரியளவில் கொள்வனவு செய்வர்.

01. நுகர்வோர் உற்பத்திகள் (Consumer Products)
02. வணிக உற்பத்திகள் (Business Products or Organizational Products)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நுகர்வு உற்பத்திகள் கீழ்வரும் 04 வகைகளாக பிரிக்க முடியும்

01. வசதி உற்பத்திகள் (Convenience Products)
உதாரணம்: அரிசி, மா, சீனி, பற்பசை, ஆடைகளின் சலவை சேவை.
02. கடை உற்பத்திகள் (Shopping Products)
உதாரணம்: குளிர்சாதனப்பெட்டி, கணனி, இசைக்கருவி, உயர்கல்வி பாடநெறிகள்.
03. சிறப்பு உற்பத்திகள் (Speciality Products)
உதாரணம்: Rolex கைக்கடிகாரம், தளபாடங்கள், TV
04. நாடப்பெறா உற்பத்தி (Unsought Products)
உதாரணம்: ஆயுள் காப்புறுதி, புதிய உற்பத்திகள்.

வணிக உற்பத்திகள்

வணிக உற்பத்திகளை இரண்டு பிரிவுகளாக வகுக்க முடியும்.
01. கூடிய பெறுமதியற்ற உருப்படிகள் (Inexpensive Items)
02. மூலதன உருப்படிகள் (Capital Items)

கூடிய பெறுமதியற்ற பண்டங்கள்
இவை சாதாரணமாக விலை குறைந்த பண்டங்களாக காணப்படும். வியாபார நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் பேனைகள், கடதாசி, அச்சிடல் மை (Printing Ink) போன்றவற்றை குறிப்பிட முடியும்.

மூலதன உருப்படிகள்
விலை கூடிய அதே போல நீண்டகாலம் பயன்படுத்தக்கூடிய பண்டங்களைக் குறிக்கும். வியாபார நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் தளபாடங்கள், அச்சிடல் இயந்திரம், கணனி என்பன இதற்கான உதாரணங்களாகும்.

மூலதன உருப்படிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.
01. மூலப்பொருட்கள் → உ+ம் → இரும்பு, எரிபொருள்
02. உதிரிப்பாகங்கள் → உ+ம் → இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும்
03. விநியோகம் → உ+ம் → எழுது கருவி, மின்குமிழ்
04. பொருத்துதல் → உ+ம் → உற்பத்தி பொதி
05. உபகரணங்கள் → உ+ம் → தொலைபேசி, தொலைநகல் உபகரணம்
06. வணிக சேவைகள் → உ+ம் → சந்தைப்படுத்தல், ஆலோசனை.



உற்பத்தியொன்றின் வாழ்க்கை வட்டம் (Product Life Cycle) (PLC)

உற்பத்தியை எவ்வாறு வகைப்படுத்திய போதிலும், சில உற்பத்திகள் நீடிய காலம் நிலைத்திருக்கும். சில குறுங்காலம் வரையிலேயே நிலைத்திருக்கும். இங்கு உற்பத்தியொன்றின் விற்பனை மற்றும் இலாப அளவுகளை 04 கட்டங்களாக பிரிக்க முடியும்.

அவையாவன
01. அறிமுக கட்டம் (Introduction)
02. வளர்ச்சி கட்டம் (Growth)
03. முதிர்ச்சிக் கட்டம் (Maturity)
04. வீழ்ச்சிக் கட்டம் (Decline)

இவ்வாறு உற்பத்தி ஒவ்வொரு கட்டத்திற்கு பிரவேசிக்கும் போது பல்வேறு சந்தைப்படுத்தல் உபாயங்களை பயன்படுத்தல் வேண்டும். உற்பத்தியை வகுப்பு அடிப்படையிலும் (Class), உற்பத்தி இயல்பு அடிப்படையிலும் (Form) உற்பத்தியை வியாபாரக்குறி அடிப்படையிலும் தெளிவு படுத்த முடியும்.

வகுப்பு மற்றும் உற்பத்தி இயல்பு கொண்ட உற்பத்திகள் நீண்ட வாழ்கை வட்டத்தை கொண்டிருக்கும். வியாபாரக்குறி அடிப்படையிலான உற்பத்திகளின் வாழ்வுக்காலம் குறைவாகும். குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் உற்பத்தி தங்கியிருத்தலானது பின்வரும் காரணங்களினால் தீர்மானிக்கப்படுகின்றது.

+ வாடிக்கையாளர்களின் தேவை, அவரின் பொருளாதார நிலைமை.
+ உற்பத்தியின் பண்பு.
+ சந்தைப்படுத்தல் தந்திரோபாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே போல புதிய உற்பத்திகள் அதிகரித்தல், தொழில்நுட்ப மாற்றம், உலக மயமாக்கம், போட்டியாளர் நடவடிக்கை என்பன வாழ்க்கை வட்டத்தை விரைவாக மாற்றும்.

கீழ்வரும் அட்டவணையானது - Hybrid Car, iPod, DVD, VCD ஆகிய நான்கு உற்பத்தித் தொடர்பிலான வாழ்க்கை வட்டத்தை காட்டுகின்றது.



அறிமுக கட்டம்

இது PLC இன் முதலாவது கட்டமாகும். இக்காலப்பகுதியில் புதிய உற்பத்தியை சந்தைக்கு வழங்கி, கேள்வியை அதிகரிப்பதற்கான மேம்படுத்தல் இடம்பெறும். உற்பத்தி தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு தகவல் வழங்கப்படும். விநியோக வழிமுறை தீர்மானிக்கப்படும். இலாபம் குறைவாகவே காணப்படும். வெற்றிக்காக பாரிய முதலீட்டை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

வளர்ச்சி கட்டம்

PLC இன் இரண்டாவது கட்டம் இதுவாகும். இக்கட்டத்தில் வேகமாக விற்பனை அதிகரிக்கும். இக்கட்டத்திலேயே போட்டியாளர்களும் பிரவேசிப்பர். விநியோக வரி, விநியோக தளங்கள் என்பன அதிகரிக்கும். சந்தையை மையப்படுத்துவதற்கு போட்டியாளர்கள் போட்டியிடுவர். மேம்படுத்தல் தொடர்பில் செலவீட்டினை மேற்கொள்ள வேண்டும். அதே போல போட்டி விலையொன்றை பேண வேண்டும். இலாபம், விற்பனை என்பன இக்கட்டத்தில் அதிகரித்து காணப்படும்.

முதிர்ச்சி கட்டம்

உற்பத்தி நீண்டகாலம் காணப்படும் கட்டம் இதுவே ஆகும். இக்கட்டத்தில் விற்பனை நிலையாக காணப்படும். ஆயினும் சற்று வீழ்ச்சியடையும். போட்டி அதிகமாக காணப்படும். உற்பத்தியின் சந்தை பங்கை அதிகரிக்க முடியாது. அது உச்ச அளவில் காணப்படும். மேம்படுத்தல் செலவு நிறுவப்படும். புதிய உற்பத்தி அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். இதற்கான முதலீட்டை மேற்கொள்ளுதல் வேண்டும். சில நிறுவனங்கள் தமது உற்பத்தியை இக்கட்டத்தில் நவீன படுத்துவார். இவ்வாறு மேற்கொள்வதனூடாக முதிர்ச்சி கட்டத்தின் காலத்தை அதிகரித்துக் கொள்ளலாம். நவீனமய படுத்தலில் உற்பத்தியில் தரம் (Quality) மற்றும் செயற்திறன் (Performance) என்பன அதிகரிக்கப்படும்.

வீழ்ச்சி கட்டம்

சாதாரணமாக முதிர்ச்சி கட்டம் நீண்டதாயினும் உற்பத்தி நிறுவனங்கள் வீழ்ச்சி கட்டத்தை அடைய வேண்டிய நிலை காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் விற்பனை இலாபம் என்பன வீழ்ச்சியடையும்.

இதற்கான காரணங்கள்

01. சனத்தொகை காரணிகளில் ஏற்படும் மாற்றம்
02. சுவை மாற்றம்
03. போட்டி
04. உயர் தொழில்நுட்பங்களின் வருகை

இக்கட்டத்தில் நிறுவனமானது உற்பத்தியை தொடர்ந்தும் மேற்கொள்வதா? இல்லையா? என்பதை தீர்மானித்தல் வேண்டும். இங்கு இவ்வாறு உற்பத்தியை தொடர்ந்தும் மேற்கொள்வதாயின் பின்வரும் காரணிகளை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

✦ உற்பத்தியை தொடர்ந்தும் பேணும் போது மேலதிக கிரயம் ஏற்படாதிருத்தல் வேண்டும்.

உற்பத்தியொன்றின் அடையாளங்கள் (Product Identities)

ஒரு உற்பத்தி தொடர்பில் அடையாளப்படுத்தல் அல்லது வேறுபடுத்தல் சந்தைப்படுத்தல் உபாய மொன்றாகும். இது தொடர்பில் பெரும்பாலும் வியாபார குறி அடையாளமே (Brand Identity) பயன்படுத்தப்படுகின்றது. போட்டியாளர்களிலிருந்து வேறுபடுத்தக்கூடிய சிறந்த பெயரை உற்பத்திக்கு சூட்டுதல் வேண்டும். அது மட்டுமின்றி வேறுபாட்டற்கென பொதி (Package) மற்றும் Label என்பன பயன்படுகின்றன.

வியாபாரக் குறியிடல் (Branding)

இங்கு பெயரையோ அல்லது ஒரு இலட்சினையோ பயன்படுத்த முடியும். வியாபாரக் குறியில் வாசிக்க கூடியவாறான பகுதி வியாபாரக் குறிப்பெயர் எனப்படும். இங்கு பெயருக்கு பதிலாக இலட்சினைகளையும் பயன்படுத்துவர். (Brand Mark or Symbol) சரியாக வியாபாரக்குறியொன்றை தெரிவு செய்தல் வணிக வெற்றிக்கு பெரிதும் உதவும். ஆகவே வாடிக்கையாளர்களுக்கு பரிச்சமான வகையில் வியாபாரக் குறியை உருவாக்கி அவற்றை பாதுகாத்து கொள்ள வணிகர்கள் முயற்சிப்பர். ஆகவே இவற்றை சட்ட ரீதியாக பதிவு செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது.

உற்பத்தியாளர்கள், சில்லறை வியாபாரிகள், மொத்த வியாபாரிகள் போன்ற எத்தகைய வணிகங்களை மேற்கொள்வோரும். வியாபாரக்குறியை உரிமையாக்கி கொள்ளலாம். தேசியரீதியாக காணப்படும் குறிகள் தேசிய வியாபாரக்குறிகள் எனவும் (National Brand) தனிப்பட்ட நபர்களின் உரிமையாக இருப்பவை (Private Brand) எனவும் அழைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தேடல்

S.K.சோதிலிங்கம்
B.B.A(Hon) Dip.in.Edu
சீரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர்
றோயல் கல்லூரி கொழும்பு 07

2014ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சிறப்புக் கட்டுரை.

நுகர்வோரின் உரிமைகளும், பொறுப்புக்களும் (Rights & Responsibilities of Consumer)

நுகர்வோரால் பொருட்களும், சேவைகளும் கொள்வனவு செய்யபடபடுகின்ற போது கொடுக்கப்படுகின்ற விலைக்கு பெறப்படுகின்ற பயனும், திருப்தியும் உச்சமாகவும், நியாயமாகவும் இருப்பதனை உறுதி படுத்திக் கொள்வதே நுகர்வோர் பாதுகாப்பு என அழைக்கப்படுகிறது. இந் நுகர்வோர் பாதுகாப்பு என்பது மூன்று பிரதான வழிகளில் கிடைக்கின்றது.

01. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்புடைய சட்டங்களின் மூலம்.
02. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான நிறுவனங்களின் மூலம்.
03. சுய பாதுகாப்பின் மூலம்.

சுய பாதுகாப்பு என்பது நுகர்வோர் தமக்குத் தாமே பாதுகாத்துக் கொள்வதாகும். இதன் பொருட்டு நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான நுகர்வோர் உரிமைகளையும், கடமைகள், பொறுப்புக்களையும் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

நுகர்வோர் உரிமைகள் (Consumer Rights)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் கெனடி அவர்களும், சர்வதேச நுகர்வோர் ஒழுங்கமைப்பாளர் (IOCU) மூலமாகவும் நுகர்வோர் உரிமைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- பாதுகாப்பு பெறும் உரிமை.
- தகவல் பெறும் உரிமை.
- தேர்வு செய்யும் உரிமை.
- கவனமீர்க்கும் உரிமை.
- நட்ட ஈடு பெறக்கூடிய உரிமை.
- சுகாதாரமான சூழலில் வாழக்கூடிய உரிமை.
- நுகர்வோர் கல்வியினைப் பெறக்கூடிய உரிமை.
- அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் உரிமை.

பாதுகாப்பு பெறும் உரிமை -

நுகர்வோர் தமது உடலையும், உள்ளத்தையும், உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய உரிமையாகும். அதாவது நுகர்வின் மூலம் தனக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களிலிருந்து தம்மை பாதுகாக்க முடியும் என்பதாகும்.

தகவல் பெறும் உரிமை -

நுகர்வோர் சிறந்த நுகர்வுச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு தனக்கு தேவையான, பொருத்தமான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தேர்வு செய்யும் உரிமை -

சந்தையில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட போட்டி உற்பத்திப் பொருட்கள், சேவைகளிலிருந்து தனக்கு விருப்பமானதை தெரிவு செய்யும் உரிமையாகும்.

கவனமீர்க்கும் உரிமை -

நுகர்வின் போது குறித்த பொருட்கள் சேவைகளின் மூலம் தனக்கு ஏற்பட்டிருக்க கூடிய பாதிப்புக்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரக் கூடிய உரிமையாகும்.

நட்ட ஈடு பெறக் கூடிய உரிமை -

நுகர்வின் போது குறித்த பொருட்கள் சேவைகளின் மூலமாக தனக்கு ஏற்பட்டுள்ள உடல், உள ரீதியான இழப்புகளுக்கு சட்டப்படி நட்ட ஈடு பெறக்கூடிய உரிமையாகும்.

சுகாதாரமான சூழலில் வாழக் கூடிய உரிமை -

நுகர்வோர் தமக்கும், தமது எதிர்கால சந்ததியாளருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சுத்தமான, ஆரோக்கியமான சூழலில் வாழ்வினை அமைத்துக்கொள்ளக் கூடிய உரிமையாகும்.

நுகர்வோர் கல்வியினைப் பெறக்கூடிய உரிமை -

ஒவ்வொரு நுகர்வோரும் நுகர்வுத் தொழிற்பாடு தொடர்பான பொருத்தமான கல்வி அறிவினைப் பெறவும், பிரயோகிக்கவும் கூடிய உரிமையாகும்.

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உரிமை -

ஒவ்வொரு நுகர்வோரும் உணவு, நீர், உடை, உறைவிடம், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு போன்ற அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய உரிமையுடையவராகும்.

நுகர்வோர் பொறுப்புக்கள் (Consumer Responsibilities)

சர்வதேச நுகர்வோர் ஒழுங்கமைப்பின் மூலமாக ஐந்து வகையான நுகர்வோர் கடமைகளும் பொறுப்புகளும் கீழ்வருமாறு முன்வைக்கப்படுகிறது.

01. விழிப்புணர்வுடன் செயற்படுதல்
02. செயற்பாட்டு ரீதியாக பங்களிப்புச் செய்தல்
03. சமூகம் தொடர்பான விழிப்புணர்வு கொள்ளுதல்
04. சூழல் பற்றிய அக்கறையுடன் செயற்படுதல்
05. ஏனையோருடன் ஒன்றிணைந்து செயற்படுதல்



விழிப்புணர்வுடன் செயற்படுதல்

ஒவ்வொரு நுகர்வோரும் தமது நுகர்வு நடவடிக்கையினை மேற்கொள்ளும் போது பொருள், சந்தை, போட்டி என்பவை தொடர்பாக அறிந்து நுகர்வுச் செயற்பாட்டினை அறிவு பூர்வமாக மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

செயற்பாட்டு பங்களிப்பு நுகர்வுச் சந்தை

நுகர்வோர் தமது நுகர்வுசார்ந்த உரிமைகளை முழுமையாக அறிந்து கொள்வதுடன் அதனை தமது நுகர்வுச் செயற்பாடுகளின் போது பிரயோகிக்கவும் வேண்டும் என்பதாகும்.

சமூக அக்கறை கொள்ளுதல்

நுகர்வோர் ஒவ்வொருவரும் நுகர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற போது அதன் மூலமாக சமூகத்திற்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக்கொள்ளும் வகையில் செயற்பட வேண்டும் என்பதாகும்.

சூழல் விழிப்புணர்வு கொள்ளுதல்

ஒவ்வொரு நுகர்வோரும் தமது நுகர்வுச் செயற்பாடுகளின் மூலமாக சூழலுக்கும், இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் செயற்பட வேண்டும் என்பதாகும்.

ஏனையோருடன் ஒன்றிணைந்து செயற்படுதல்

நுகர்வோர் தமது நலன்களை பாதுகாத்துக் கொள்ளும் வகையிலும், உரிமைகளை உறுதிப் படுத்திக்கொள்வதற்காகவும் ஓரமைப்பின் கீழ் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதாகும்.

இலங்கை போன்ற கலப்புப் பொருளாதார நாடுகளில் நுகர்வோரின் இறைமை பாதிக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் அதிகம், அத்துடன் திறந்த பொருளாதாரக் கொள்கை, தனியார் மயமாக்கம், உலக மயமாக்கம் என்பவற்றினால் ஏற்படும் போட்டி நிலைமை காரணமாக நுகர்வோர் நலன் மிகவும் கேள்விக்குறியாகியுள்ள நிலைமையும் காணப்படுவதன் காரணமாக நுகர்வோர் பாதுகாப்பு என்பது மிகவும் அவசியமாக அமைகிறது.

இலங்கையில் முதன் முறையாக
உயர்தர மாணவர்களுக்காக
முழுமையான வழிகாட்டல்
இணையத்தளம் உதயமாகிறது...
www.arivuththedal.com

உயர்தரக் கற்கையின் பின் பல்கலைக்கழகப் பட்டம் ஒன்றினையும் தொழில்சார் தகைமை யொன்றினையும் பெற்றுக்கொள்வது எவ்வாறு?

ACCA

க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் நீங்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகுவீர்கள் எனில் பல்கலைக்கழகத்தில் மூன்று அல்லது நான்கு வருடக் கற்கை நெறியினை பூர்த்திசெய்வதோடு இது முகாமைத்துவம் தொடர்பான ஏதேனும் கற்கை நெறியாக அமையலாம்.

கணக்கீடு, வணிக முகாமைத்துவம், சுற்றுலா முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், முயற்சியாண்மை முகாமைத்துவம், வணிகத் தகவல் தொழில்நுட்பம், நிதி முகாமைத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் ஏதேனும் ஒரு பட்டத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கு ஈடான தொழில்சார் கற்கைநெறியினை தெரிவுசெய்யும் போது ACCA பற்றிச் சிந்தித்துள்ளீர்களா? ACCA தகமையானது ஐக்கிய இராஜ்ஜியத்தில் பட்டயம் பெற்ற கணக்கீட்டு நிறுவனத்தினூடாக வழங்கப்படுகின்றது. இதுவரை உலகளாவிய ரீதியில் 404 000 மாணவர்கள் ACCAயினைத் தமது தொழில்சார் கற்கையாக தெரிவு செய்துள்ளனர்.

இக்கற்கை நெறியின் விசேடம் யாதெனில், இக்கற்கை நெறியின் முதற்பகுதியைப் பூர்த்தி செய்வதுடன், இரண்டாவது பகுதியைப் பயிலும் போதே ஐக்கிய இராஜ்ஜியத்தின் Oxford brookes பல்கலைக்கழகத்தில் BSc Applied Accounting Hons பட்டத்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கையில் பல்கலைக்கழக அனுமதியைப்பெற்ற, பெற்றிராத மாணவர்கள் தம்மை ஒரு சிறந்த கணக்காய்வாளராக ஆக்கிக்கொள்ள ACCA சிறந்த பாடநெறி ஆகும்.

ACCA இலங்கை -
இல 424, R.A.D மெல் மாவத்தை, கொழும்பு 03.
T.P : 011 2301920, 011 2301923

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.K.சோதிலிங்கம்
B.B.A(Hon) Dip.In.Edu
சீரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர்
றோயல் கல்லூரி கொழும்பு 07

The MCQ

01. முயற்சியாண்மையின் நவீன போக்குகளாக அக முயற்சியாண்மை, பெண்கள் முயற்சியாண்மை, சமூக முயற்சியாண்மை என்பன காணப்படுகிறது. கீழ்வரும் உதாரணங்களில் சமூக முயற்சியாண்மை எனக் கருதக் கூடியது எவை?

A- யாழினி பெண்கள் நலன்கருதி அழகூட்டல் நிலையம் ஒன்றினை வெள்ளவத்தையில் ஆரம்பித்துள்ளார்.
B- Dr ஜெயா கிளிநொச்சியில் வறிய மக்களுக்காக இலவச வைத்தியசாலையொன்றினை நடாத்துகிறார்
C- வைத்தியர் குகன் யாழ்ப்பாணத்தில் கால் ஊனமுற்றோருக்காக அலுமினியத்தில் தயாரிக்கும் பொய்க்கால் தொழிற்சாலை ஒன்றினை ஆரம்பித்துள்ளார்
D- சிவா என்பவர் பச்சைத் தாவரச் சாற்றிலிருந்து எரிபொருளைப் பெற்று இயங்கக் கூடிய வாகன மொன்றினை உருவாக்கியுள்ளார்

☐ (1) A, B ☐ (2) A, D ☐ (3) B, C ☐ (4) C, D ☐ (5) B, D

02. ஒரு சிறந்த முயற்சியாளராவதற்கு முயற்சியாண்மைப் பண்புகளும், திறன்களும், அவசியமாகும். கீழுள்ள விடயங்களை பண்புகள் "A" எனவும், திறன்களும் "B" எனவும் அடையாளப்படுத்துக?

1 - பேரார்வம்
2 - விடாமுயற்சி
3 - செல்வாக்குச் செலுத்தல்
4 - பிரச்சினை தீர்த்தல்
5 - தன்னம்பிக்கை
6 - ஊக்கப்படுத்தல்

☐ (1) A - 1, 2, 3 B - 4, 5, 6
☐ (2) A - 2, 4, 6 B - 1, 3, 5
☐ (3) A - 1, 2, 5 B - 3, 4, 6
☐ (4) A - 4, 5, 6 B - 1, 2, 3
☐ (5) A - 1, 4, 5 B - 2, 3, 6

03. இலங்கை மத்திய வங்கியின் வகைப்படுத்தலின்படி நிதித்துறை நிறுவனங்களை பின்வருமாறு A,B,C என வகைப்படுத்தலாம்.

A - உரிமம் பெற்ற வணிக வங்கிகள்
B - உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள்
C - பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள்

கீழ்வரும் பணிகளை மிகச் சரியாகக் சுட்டிக்காட்டும் தொகுதியினைத் தெரிவு செய்க.

1 - நிலையானவைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்
2 - பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்குதல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

3 - சேமிப்புக்களையும், முதலீடுகளையும் அதிகரிக்கச் செய்தல்
4 - அந்நிய செலவாணிக் கணக்குகளை ஏற்றுக் கொள்ளல்
5 - வாடகைக் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
6 - காசோலை நடவடிக்கைகளை அனுமதித்தல்

☐	(1)	A - 1, 2	B - 3, 4	C - 5, 6
☐	(2)	A - 2, 4	B - 5, 6	C - 1, 3
☐	(3)	A - 5, 6	B - 4, 3	C - 2, 1
☐	(4)	A - 1, 3	B - 2, 5	C - 4, 6
☐	(5)	A - 4, 6	B - 2, 3	C - 1, 5

04. கீழே அட்டவனையில் பகுதி "அ" விற்கு மிகவும் பொருத்தம் கூடிய விடயத்தினை பகுதி "ஆ" விலிருந்து எடுத்து இணைக்கும் சரியான தொகுதி எது?

பகுதி "அ"	பகுதி "ஆ"
A - Lanka Settle	1 - S.M.S. வங்கிச் சேவை
B - கொள்கை வட்டி வீதம்	2 - முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை
C - Tele banking	3 - அதே நேர மொத்த தீர்ப்பனவு முறை
D - E-Bond Trading	4 - நேர்மாற்று மீள்கொள்வனவுச் சந்தை

☐	(1)	A - 1	B - 2	C - 3	D - 4
☐	(2)	A - 2	B - 4	C - 1	D - 3
☐	(3)	A - 3	B - 2	C - 4	D - 1
☐	(4)	A - 4	B - 3	C - 2	D - 1
☐	(5)	A - 3	B - 4	C - 1	D - 2

05. கீழே இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புடைய சில விடயங்கள் தரப்பட்டுள்ளது. அவற்றுள் தவறானது என நீர் கருதுவது யாது?

☐ (1) பொதுப்படுகடன் முகாமைத்துவத்தினை மேற்கொள்ளுதல்.
☐ (2) பதினோராவது நாணயத்தாள் வெளியீடு நடனக்கலைஞர்களை கௌரவப்படுத்தியுள்ளது.
☐ (3) தீர்ப்பனவு நடவடிக்கைகளை கண்காணிக்கிறது.
☐ (4) அரசாங்கத்தின் வங்கியாகவும் தொழிற்படுகிறது.
☐ (5) வங்கிப் பணத்தினை வைப்பாக ஏற்றுக்கொள்கின்றது.

06. உரிமம் பெற்ற வணிக வங்கியொன்றில் கணக்கு வைத்திருக்கும் ஒரு வாடிக்கையாளனுக்கு வழங்கப்படும் இலத்திரனியல் வங்கிச்சேவை என கீழ்வருவனவற்றுள் கருதக்கூடிய தொகுதி எது?

A - தொலைபேசி வங்கிச் சேவை (Tele banking)
B - பிரதி விம்பத் தீர்ப்பனவு (Imaging Clearing)
C - நிலையியல் கட்டளை வசதி (Standing order)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

D - குறுந்தகவல் வங்கிச் சேவை (SMS Banking)
E - கிளை வலையமைப்பு சேவை (Inter Btanch Network)
F - காசாளர் இயந்திர வசதிகள் (ATM)

☐ (1) A, B, C ☐ (2) B, C, D ☐ (3) C, D, E
☐ (4) A, D, F ☐ (5) C, E, F

07. A. வங்கி வாடிக்கையாளரொருவரால் அவரது கணக்கில் வைப்பிலிடப்பட்ட காசோலைகளில் மறுக்கப்படக் கூடியதல்லாத வகை எது?

☐ (1) சிதைந்த காசோலை
☐ (2) நாட்பட்ட காசோலை
☐ (3) பிற் திகதியிடப்பட்ட காசோலை
☐ (4) ரத்துச் செய்யப்பட்ட காசோலை
☐ (5) நிறுத்தல் கட்டளையிடப்பட்ட காசோலை

B. குறுக்குக்கோடிட்ட பின்வரும் காசோலை வகைகளில் கைமாற்ற முடியாத வகைக் காசோலையாக அமைவது எது?

☐ (1) "பெறுவோன் கணக்கில் மட்டும்" என்பது.
☐ (2) "கைமாற்றதகாதது" என்பது.
☐ (3) பொது முறைக் குறுக்குக் கோடிடப்பட்டது.
☐ (4) சிறப்பு முறைக் குறுக்குக் கோடிடப்பட்டது.
☐ (5) திறந்த காசோலை என்பது.

08. கீழ்வரும் காப்புறுதி ஒப்பந்த வகைகளில் பொறுப்புக் காப்புறுதி எனக்கருதக்கூடியவை எவை?

A - வழிப்பணக் காப்புறுதி
B - 3ம் நபர் மோட்டார் வாகனக் காப்புறுதி
C - மிதக்கும் கடலபாய காப்புறுதி
D - பிணைப் பொறுப்புக் காப்புறுதி
E - தொழிலாளர் விபத்துக் காப்புறுதி

☐ (1) A, B ☐ (2) C, D ☐ (3) A, C
☐ (4) D, E ☐ (5) A, E

09. A. காப்புறுதி செய்ய முடியாத அபாயமென்பது காலம், இடம், என்பவற்றில் தங்கியுள்ளது. பின்வருவனவற்றில் எது காப்புறுதி செய்ய முடியாத அபாயமாக கருத முடியும்?

A - முகாமையின் தவறுகள்
B - சுனாமி விபத்துக்கள்
C - நுகர்வோர் சுவை மாற்றம்
D - இயந்திர தீ அபாயம்
E - பெறுமானத் தேய்வு
F - குண்டு வெடிப்பு அபாயம்

☐ (1) A, B, C ☐ (2) B, C, D ☐ (3) C, D, E
☐ (4) A, C, E ☐ (5) D, E, F

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

B. மோட்டார் வாகனங்கள் தொடர்பாக சட்ட ரீதியான கட்டாயக் காப்புறுதியின் கீழ் உள்ளடக்கப்படக்கூடிய தரப்பினர்களாக அமைவது?

☐ (1) மோட்டார் வாகனமும், பயணிகளும்
☐ (2) பயணிகளும், பாதசாரிகளும்
☐ (3) பொதுமக்களும், பொதுச் சொத்துக்களும்
☐ (4) பயணிகளும், சரக்குகளும்
☐ (5) மோட்டார் வாகனமும், பொது மக்களும்

10. A. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் போக்குவரத்தினுடைய, பங்களிப்பு இன்றியமையாததாகும். இதனை விருத்தி செய்வதற்கு மிகவும் கவனம் செலுத்தப்படவேண்டிய காரணிகளாக எவை கருதப்படலாம்?

☐ (1) நேரம், தூரம், கிரயம்
☐ (2) விரைவு, சொகுசு, செலவு, இயலளவு
☐ (3) தரை, கடல், ஆகாயம்
☐ (4) மார்க்கம், சாதனம், சக்தி, தரிப்பிடம்
☐ (5) பாதுகாப்பு, சட்டங்கள், ஊக்குவிப்புக்கள்

B. வீதிப்போக்குவரத்து தொடர்பான சமூகக் கிரயத்தினைக் குறைப்பதற்காக மேற் கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளில் தவறானது எது?

A - Emmision Test (Green Test) B - Fitness Certificate
C - 3rd Party Insurance D - தலைக்கவசம் அணிதல்
E - சீட் பெல்ற் அணிதல்

☐ (1) A, B ☐ (2) C, D ☐ (3) A, E
☐ (4) D, E ☐ (5) A, D

11. A. வினைத்திறன் வாய்ந்த தொடர்பாடலின் மீது பல்வேறுபட்ட தடைகள் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. கீழே தரப்பட்டவற்றுள் நபர் சார் தடைகளாக கருதப்படக் கூடியவை எவை?

A - தொழில் நுட்பக் கோளாறு B - இரைச்சலும் சத்தமும்
C - மொழியறிவின்மை D - கால நிலை மாற்றங்கள்
E - உடல் நலக் குறைவு F - கலாச்சார கட்டுப்பாடுகள்

☐ (1) A, B, C ☐ (2) B, C, D ☐ (3) C, E, F
☐ (5) C, D, F ☐ (4) B, D, F

B. நபரொருவர் சிந்தித்து எழுதியுள்ள ஒரு கவிதையின் சாராம்சத்தினை இன்னொருவர் வாசித்து விளங்கி விமர்சிப்பது எவ்வாறு கருதப்படும்,

☐ (1) பின்னூட்டல்
☐ (2) குறி முறைப்படுத்தல்
☐ (3) குறி முறை நீக்கம்
☐ (4) தரவு செய்முறைப்படுத்தல்
☐ (5) ஆவணப்படுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. உள்நாட்டு, சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் சிலவும், அவற்றுடன் தொடர்புடைய காரணிகள் சிலவும் பகுதி "அ" பகுதி "ஆ" விலும் தரப்பட்டுள்ளது. சரியான தொடர்பினைக் காட்டும் தொகுதி எது?

பகுதி "அ"	பகுதி "ஆ"
A - உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்	1 - நிதியாற்றலை உறுதி செய்தல்
B - எதிர்க் கணியப் பட்டியல்	2 - பொருள் மீதான உரிமையினை வெளிப்படுத்தல்
C - நாணயக் கடிதம்	3 - உள்ளூர் உற்பத்திகளை பாதுகாத்தல்
D - சுமைச்சீட்டு	4 - தீர்வைகளில் சலுகை பெறுதல்

☐ (1) A - 1 B - 2 C - 3 D - 4
☐ (2) A - 2 B - 4 C - 1 D - 3
☐ (3) A - 3 B - 1 C - 4 D - 2
☐ (4) A - 4 B - 3 C - 1 D - 2
☐ (5) A - 4 B - 2 C - 1 D - 3

13. உள்நாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய நடுவர்கள் A,B,C,D, எனவும், அவர்களுடன் தொடர்புடைய பண்புகள் 1,2,3,4, எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சரியான தொடர்பினைக் காண்க?

A - சில்லறை வியாபாரி
B - நம்பிக்கை உறுதி முகவர்
C - தரகர்
D - காரணிகர்

1 - பொருளின் உரிமையினை பெற்றுக்கொள்வதில்லை
2 - நட்ட அச்சத்தினை வணிகரின் மீது சுமத்தமுடியும்
3 - வியாபார நட்டங்களை பொறுப்பேற்றுக் கொள்வார்
4 - சொந்த இலாபத்திற்காக பணியாற்றுகிறார்

☐ (1) A - 1 B - 2 C - 3 D - 4
☐ (2) A - 2 B - 4 C - 1 D - 3
☐ (3) A - 3 B - 1 C - 4 D - 2
☐ (4) A - 4 B - 3 C - 2 D - 1
☐ (5) A - 4 B - 3 C - 1 D - 2

14. கீழ்வரும் விடயங்களில் சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புபடாதது எது?

☐ (1) சுங்கப் பதிவேடுகள்
☐ (2) வர்த்தகத்திணைக்களம்
☐ (3) வலய வியாபார சந்தைகள்
☐ (4) பலபக்க வியாபாரம்
☐ (5) குவித்தல்

15. A. கீழே தரப்பட்ட விடயத் தொகுதியில் தவறான கூற்றுக்கள் எவை?

A - மிக அதிக நாடுகள் - ஜரோப்பிய யூனியன்
B - GSP+ அனுகூலம் - ஜரோப்பிய ஒன்றியம்
C - சர்வதேச வர்த்தக அபிவிருத்தி - WTO
D - மிகக் குறைந்த நாடுகள் - NAFTA
E - பல்நார் ஒப்பந்தம் - சீனா
F - இலங்கையும் அமெரிக்காவும் - CEPA

☐ (1) A, B ☐ (2) C, D ☐ (3) E, F ☐ (4) A, C ☐ (5) D, E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B. கீழ்வருவனவற்றுள் சர்வதேச வர்த்தக ரீதியான கட்டுப்பாடு எனக் கருதக்கூடியவை எவை?

A	-	ஏற்றுமதி அனுமதிப்பங்கு	D	-	சகாயவரி முறை
B	-	தீர்வை முன்னுரிமை	E	-	இறக்குமதித் தீர்வை
C	-	சுங்கக் கட்டணம்	F	-	இரட்டை வரிக் குறைப்பு

☐ (1) A, B, C ☐ (2) D, E, F ☐ (3) B, E, F
☐ (4) A, C, E ☐ (5) B, D, F

சிரேஷ்ட்ட வணிகக்கல்வி ஆசிரியர் S. K. சோதிலிங்கம் அவர்களின் இதழ் 27ன் MCQ தொகுப்புக்கான விடைகள்

(1) 5 (2) 5 (3) 4 (4) A-4, B-3 (5) 2 (6) 5 (7) A-4, B-5 (8) A-4, B-4
(9) 5 (10) 4 (11) 4 (12) 4 (13) 1 (14) 4 (15) 5

WCMT CAMPUS SRI LANKA

University of Bolton,
Academic Centre Sri Lanka
No. 54, Galle Road, Mount Lavinia
Tel : 0112 727 106
Email : info@wcmtedu.net
Web : www.wcmtedu.net
Hotline : 0777 727 106

இலங்கையில் சர்வதேச பல்கலைக்கழகங்களில் பயிலக்கூடிய மற்றுமொரு வாய்ப்பு உதயமாகிறது. WCMT கல்லூரியானது BTEC HND பாடநெறியினை கட்டிட பொறியியல், இயந்திர பொறியியல், மின் னியல், மின் பொருளியல் ஆகிய துறைகளுக்காக பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வண்ணம் தமது முழு நேர வகுப்புக்களை ஜூன் 30 ம் திகதியும் பகுதி நேர வகுப்புக்களை ஜூ*30 ம் திகதியும் ஆரம்பிக்கவுள்ளது. இந்த இரு வருட BTEC HND இனை பெறுவதனூடாக WCMT கல்லூரினூடாக ஐக்கிய இராச்சியத்தின் University of Bolton பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டத்தை பெறக்கூடிய வாய்ப்பு கிட்டுகின்றது.

Bolton பல்கலைக்கழகமானது ஐக்கிய இராச்சியத்தில் 15 வருடங்களுக்கு மேலதிகமாக சர்வதேச ரீதியான சிறந்த மாணவர் தொகுதியை உருவாக்குவதோடு சிறந்த மனித வளங்களை உலகிற்கு வழங்குகின்றது. இப் பல்கலைக்கழகமானது பிரித்தானிய தர நிறுவனத்தினால் (Quality Assurance Agency) உயரிய வகையில் அங்கீகரிக்கப்படுவதோடு, இதன் தனித்துவமான கற்பித்தல் முறை, அதாவது அனைத்து நாடுகளிலும் ஒரே விதமான, நேரடியான விரிவுரைகளை நடாத்தி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் கிளைக் கல்லூரிகள் ஐக்கிய அரபு இராச்சியத்திலும், Manchester நகரிலும் அமைந்துள்ளது. மேலும் மாணவர்களுக்கான இலத்திரனியல் மயமான நூலக வசதியினை வழங்கி எண்ணற்ற நூல்களை பெறும் வாய்ப்பினைப் ஏற்படுத்துகின்றது.

WCMT கல்லூரியானது இலங்கை முதலீட்டு சபையின் (BIO) அங்கீகாரத்தை பெற்றுள்ள ஒரு அமைப்பாக அதேவேளை சர்வதேச தரம் வாய்ந்த மனித வளங்களை உருவாக்கும் KES நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். WCMT கல்லூரியானது Bolton பல்கலைக்கழகத்தின் இலங்கையின் பிரதிநிதியாக செயற்படுவதோடு, Bolton பல்கலைக்கழகத்தின் ரேடியான கட்டணங்களுக்குச் சமமான வகையில் குறைந்த கட்டணத்தில் பயிலக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்துகின்றது.

WCMT கல்லூரியில் பொறியியல் தொடர்பாக பரந்த பாடநெறிகள் காணப்படுவதோடு சர்வதேச ரீதியான பாடத்தினை இலகுவாக பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. பட்டய பொறியியலாளர் தகமைக்கானதாகவே (Chartered Engineer) கட்டட பொறியியல் பாட நெறியில் புவியியல், நிலப்பரப்பு, ஆய்வு, செயற்திட்டம் தயாரித்தல், நில அளவை ஆகிய பாடப்பரப்புக்களை உள்ளடக்குகின்றது. மின்சாரம் தொடர்பான பொறியியல் டிப்ளோமாவில் வலுச்சக்தி மூலங்கள், சக்திக்கான முறைகள் போன்ற விடயங்களை உள்ளடக்குவதோடு இயந்திரப் பொறியியல் டிப்ளோமாவில் இயக்கவியல், வேப்பவியல் நிகழ்ச்சித்திட்டம் போன்ற பாடப்பரப்புக்கள் உள்ளடக்கப்படுகின்றது.

எமது கல்லூரியில் நவீன ரீதியில் தற்கால பொறியயல்துறை உபகரணங்களையும், மென்பாகத்தினையும் (Soft wares) கருவிகளையும் கொண்ட வசதியான ஆய்வு கூட வசதிகளை பரித்தானிய தரத்தில் மாணவர் பெற முடியும். மேற்கூறிய பாட நெறிகளின் இறுதி 6 மாதகாலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த பயிற்சியினை பெற்றுக் கொள்ள பயிலுனராக பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய வாய்ப்புக் கிட்டும். ஒவ்வொரு பாடங்களும் நிறைவடையும் போது அதற்கான வேலைத்திட்டம் (Assignments) மற்றும் பரீட்சைகளை பிரித்தானிய தரத்திற்கேற்ற வகையில் மேற்கொள்ள வேண்டும். உங்களுக்குரிய தகமைச் சான்றிதழ் பிரித்தானிய முன்னணியான கல்வி நிறுவனமான Edexcel இனால் வழங்கப்படும். Edexcel உலகளாவிய ரீதியில் காணப்படும் பாரிய பரீட்சை பொறிமுறையாக காணப்படுவதோடு ஏறக்குறைய 4 மில்லியன் மாணவர்களை 112 நாடுகளில் கொண்டுள்ளது.

WCMT கல்லூரியானது தேசிய, சர்வதேச முன்னணி விரிவுரையாளர்கள் மாணவர்களின் திறனை மேம்படுத்தும் வகையிலான கற்றல் முறையினை பின்பற்றுவதோடு, தற்காலத்திற்குப் பொருத்தமான நடைமுறை அறிவினை வழங்கத்தக்க கற்றல் மூலங்கள் வழங்கப்படுகின்றது. மேலும் கல்லூரியானது குறிப்பான ஆய்வு கூட வசதி, நூலக வசதி மற்றும் முழுவதுமாக WI-FI வலையமைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இதனூடாக மாணவர்களின் தரமான சித்தியினை உறுதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது முகவரி :
இல : 54 காலி வீதி கல்கிஸ்ஸ (Mount lavinia)
எமது இணையத்தளம் : www.wcmtedu.net
அழையுங்கள் : 0777727106

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VICEGUIDE

சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி ந. கணேச மூர்த்தி
பொருளியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

பொருளாதார வளர்ச்சியை விளக்கப்பயன்படும் மற்றும் ஒரு கருவி மொத்த நிரம்பல் வளையியாகும். (Aggregali Supply Curve)

வரைபடம் 10



மொத்த நிரம்பல் வளையியின் வலப்புற நகர்வின் மூலம் AS_1 - AS_2 பொருளாதார வளர்ச்சியைக் காட்டலாம். இந் நிலையில் மெய் வெளியீட்டு மட்டம் Y_1 இலிருந்து Y_2 ஆக அதிகரித்துள்ளது. கோட்பாட்டடிப்படையில் Y_1 - Y_2 வரையிலான வெளியீட்டு மட்ட அதிகரிப்பே பொருளாதார வளர்ச்சியை காட்டும் பகுதியாகும். O - Y_1 வெளியீட்டு மட்டம் பொருளாதார வளர்ச்சியை காட்டும் பிரதேசமாக கருதப்படுவதில்லை.

உற்பத்தி இயல்தகவு வளையினை அடிப்படையாக கொண்டு பொருளாதார வளர்ச்சியை விளக்குவதிலும் சில நடைமுறை ரீதியான வரையறைகள் உள்ளன. உதாரணமாக உற்பத்தி இயல்தகவு வளையின் உட்புறமுள்ள குறைதொழில் மட்டப் புள்ளியொன்றில் இயங்கும் பொருளாதாரமொன்றில் ஏற்படும் விரிவாக்கம் பொருளாதார வளர்ச்சியாக கருதப்படுவதில்லை. மாறாக உற்பத்தி இயல்தகவு வினைத்திறன் மீதுள்ள ஒரு புள்ளியில் இயங்கும் பொருளாதாரமொன்றில் ஏற்படும் விரிவாக்கம் தொடர்பாகவே பொருளாதார வளர்ச்சி எண்ணக்கரு விளக்கப்படுகிறது.

வரைபடம் 11



வரைபடத்தில் AB எனக்கருதப்படும் உற்பத்தி இயல்தகவு வளையி ஆரம்பத்தில் இப்பொருளாதாரத்தின் சாத்திய வள உற்பத்தி சேர்க்கைகளை காட்டுகிறது. y என்பது அத்தகைய ஒரு நிறை தொழில் மட்ட உற்பத்தி புள்ளியாகும். x புள்ளியானது உற்பத்தி இயல்தகவு வளையில் உள்ளே அமைந்திருக்கும் ஒரு குறைதொழில் மட்டப் புள்ளியாகும். இப்புள்ளியில் காணப்படும் உற்பத்தி சேர்க்கை வெளியீடு செய்யப்படும் போது பொருளாதாரத்தின் மொத்த இயல்பையும் பயன்படுத்தப் படுவதில்லை. எனவே x புள்ளியில் மிகை இயலளவுப் பயன்பாடு காணப்படுகிறது. பொருளாதார மந்தல்களின் போது பொருளாதாரங்களின் உற்பத்தி மட்டங்கள் அவற்றின் சாத்திய வளங்களை விட அதாவது இயலளவு மட்டத்தை விடக்குறைவாகவே இருக்கும். அதே போல எல்லா பொருளாதாரங்களும் எப்போதுமே நிறைதொழில் மட்டத்தில் பூரண இயலளவில் இயங்கும் எனக் கூறமுடியாது. பெரும்பாலான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் தமது இயலளவை விட குறைந்த மட்டங்களிலேயே இயங்குகின்றன. எனவே அவற்றின் உற்பத்தி மட்டங்கள் வரைபடத்தில் x போன்ற தொரு புள்ளியிலேயே இடம்பெறக்கூடும். எனவே அவ்வாறானதொரு பொருளாதாரம் விரிவாக்கமடைந்து x இலிருந்து y புள்ளியை நோக்கி நகர்வதை கோட்பாட்டடிப்படையில் பொருளாதார வளர்ச்சி எனக் கூறமுடியாது. காரணம் பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதாரத்தின் இயலளவில் அல்லது சாத்தியத்தின் வள உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பென வரைவிலக்கணப்படுத்தப்படுவதாகும்.

x இலிருந்து y புள்ளியை நோக்கி நகரும் போது பொருளாதாரத்தில் பயன்படுத்தப்படாதிருந்த மிகை இயலளவு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுகிறதேயன்றி பொருளாதாரத்தின் இயலளவில் புதிதாக அதிகரிப்பு ஏற்படுவதில்லை. எனவே பொருளாதாரத்தின் இயலளவில் விரிவாக்கம் ஏற்படாத படியினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நகர்வு பொருளாதார வளர்ச்சியாக கருதப்படுவதில்லை. மாறாக y புள்ளியிலிருந்து z புள்ளியை நோக்கிய நகர்வு பொருளாதார வளர்ச்சியை காட்டுகிறது. y என்ற ஒரு நிறை தொழில் மட்ட புள்ளியிலிருந்து z என்ற நிறைதொழில் மட்டப்புள்ளியை நோக்கிய ஒரு நகர்வு பொருளாதார வளர்ச்சி எனப்படுகிறது. ஆகவே உற்பத்தி இயல்தகவு வளையியை பொருளாதார வளர்ச்சியை விளக்கல் பயன்படுத்தும் போதுள்ள வரையறைகள் பற்றிய அறிவு அத்தியாவசிமாகும். சுருங்கக் கூறின் ஒரு நிறை தொழில் மட்டப்புள்ளியிலிருந்து அதனை விட உயர்வான ஓர் சேர்க்கையை காட்டும் நிறைதொழில் மட்டப் புள்ளியை நோக்கி நகர்வதை பொருளாதார வளர்ச்சி எனலாம். இந்நிலையில் உற்பத்தி இயல்தகவு வளையி வலப்புறமாக நகர்வடையும் அல்லது சுழலும். மாறாக ஒரு குறை தொழில் மட்டப் புள்ளியிலிருந்து மற்றொரு குறைதொழில் மட்ட் புள்ளியை நோக்கியோ அல்லது ஒரு நிறைதொழில் மட்டப்புள்ளியை நோக்கியோ இடம் பெறும் நகர்வு பொருளாதார வளர்ச்சியாக கருதப்படுவதில்லை. இந் நிலையில் உற்பத்தி இயல்தகவு வளையியில் நகர்வோ அல்லது சுழற்சியோ ஏற்படாது.

நடைமுறையில் பொருளாதார வளர்ச்சியை நாம் அளவிடும்போது மெய் மொத்த உள்நாட்டு அல்லது தேசிய உற்பத்தியில் இரு காலப்பகுதிகளுக்கிடையிலான வேறுபாட்டின் மூலமே அளவிடுகிறோம். அதனை நூற்றுவீதமாக காட்டி பொருளாதார வளர்ச்சி என்கிறோம். இங்கே நாம் பொருளாதாரம் நிறை தொழில் மட்டத்தில் இயங்கியதோ அல்லது குறைதொழில் மட்டத்தில் இயங்கியதா என்றெல்லாம் கவலைப்படுவதில்லை. உதாரணமாக அண்மையில் மேற்குலக நாடுகளின் பொருளாதாரங்களில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவினால் அவற்றின் பொருளாதாரங்கள் அவற்றின் சாத்தியங்களை விட குறைவாகவே இயங்குகின்றன. அதாவது அவற்றின் உற்பத்தி இயல்தகவு வளையிகளின் உள்ளேயுள்ள புள்ளிகளில் இயங்குகின்றன. எனவே கோட்பாட்டடிப்படையில் அவை மீண்டும் அவற்றின் உற்பத்தி இயல்தகவு வளையிகளின் மீதுள்ள புள்ளிகளில் அதாவது நிறை தொழில் மட்டப் புள்ளிகளில் இயங்கும் வரை பொருளாதார வளர்ச்சி குறித்து பேச முடியாது. ஆனால் நடைமுறையில் ஒவ்வொரு காலாண்டு அடிப்படையிலும் அவற்றின் மெய் மொத்த உள்நாட்டு / தேசிய உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சி வீதங்கள் கணிப்பிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. அதனடிப்படையில் அவற்றின் பொருளாதாரங்களின் வளர்ச்சி வீதங்கள் குறித்து பேசப்படுகின்றன. உண்மையில் இவ்விரு வேறுபட்ட எண்ணக்கருக்களிடையே நிலவும் வேறுபாட்டை விளங்கிக்கொள்வது அவசியமாகும். இதற்கு உண்மை வெளியீடு மற்றும் சாத்திய வள வெளியீடு ஆகிய இரு எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

3.0 உண்மை வெளியீடு மற்றும் சாத்திய வள வெளியீடு

சாத்திய வள வெளியீடு என்பது நீடித்த அடிப்படையில் பணவீக்க அழுத்தங்கள் எதுவுமின்றி பெற்றுக்கொள்ளத்தக்க வெளியீட்டு மட்டமாகும். இச் சாத்திய வள வெளியீட்டில் ஏற்படும் விரிவாக்கமே நீண்டகால ரீதியில் ஏற்படும் வளர்ச்சியாகும். மெய் வெளியீடு என்பது உண்மையில் குறிப்பிட்ட ஒரு பொருளாதாரம் பெற்றுக் கொள்ளும் வெளியீட்டு மட்டமாகும். இதனையே மெய் உள்நாட்டு / தேசிய உற்பத்தி என்கிறோம். இதில் ஏற்படும் அதிகரிப்புகள் நூற்று வீதமே பொருளாதார வளர்ச்சி வீதமாகும்.

ஒரு நாட்டின் சாத்திய வள வெளியீட்டு மட்டமே அதனது இயலளவைக் காட்டும். ஒவ்வொரு வருடமும் அதன் இயலளவு அதிகரித்துச் செல்லவேண்டும். அவ் அதிகரிப்பு சீரானதாகவும் மெதுவானதாகவும் அமையும். ஆனால் மெய் வெளியீடு என்பது அடிக்கடி தளம்பல்களுக்கு உட்படும். பொருளாதாரம் குறுங்காலத்தில் செழிப்பு நோக்கி நகரும் போது மெய் வெளியீட்டு மட்டம் சாத்திய மட்டத்தை விட உயர்வாக காணப்படலாம். எனினும் நீண்டகாலத்திற்கு இது சாத்தியப்படாது. மேலதிக வேலை நேரங்களை Shift work பயன்படுத்துவதன் மூலம் இத்தகைய உயர் அதிகரிப்பொன்றை அடையலாம். இவ்வாறு மெய் வெளியீட்டில் ஏற்படும் அதிகரிப்பின் நூற்றுவீதம் பொருளாதார வளர்ச்சி வீதம் எனப்படுகிறது.

சுருங்கக்கூறின் பொருளாதார வளர்ச்சியானது நாடொன்றின் சாத்திய வள உற்பத்தி இயலுமையை அளவிடுகிறது. பொருளாதார வளர்ச்சி வீதமானது மெய்வெளியீட்டில் ஏற்படும் வளர்ச்சியை நூற்று வீதத்தில் அளவிடுகிறதெனலாம்.

4.0 சாத்திய வள வெளியீடும் உச்ச வெளியீடும்

இவ்விரு எண்ணக்கருக்களும் வேறுபட்டவையாகும். சாத்திய வளவெளியீடு என்பது பணவீக்க அழுத்தங்கள் அதிகரிக்காதவாறு நீடித்திருக்கத்தக்கவாறு பெறப்படக்கூடிய உச்ச வெளியீட்டும் இவ் வெளியீடானது ஒரு பொருளாதாரம் மொத்த அடிப்படையில் பெறக்கூடிய உச்ச வெளியீட்டு மட்டமன்று. குறுங்காலத்தில் உச்ச வெளியீடானது சாத்திய வள வெளியீட்டை விட உயர்வாகவோ குறைவாகவோ இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.0 யாவும் உள்ளடங்கிய பொருளாதார வளர்ச்சி அல்லது பரந்தளவிலான பொருளாதார வளர்ச்சி (Inclusive Growth)

பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் வியாபிக்கும் வண்ணம் சமச்சீரான நிலைத்திருக்கக் கூடியவாறான உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைவது பரந்தளவிலான பொருளாதார வளர்ச்சி எனப்படும். பொருளாதார வளர்ச்சி செயன்முறையில் நாட்டின் சகல பிரசைகளும் தமது பங்களிப்பை நல்கவும் வளர்ச்சியின் பிரதிபலன்களை அனுபவிக்கவும் இதன் மூலம் வாய்ப்பு ஏற்படும். சமூகத்தில் விலகி நிற்கும் எல்லை நிலை வகுப்பினரையும் உள்ளடக்கும் வண்ணம் இடம்பெறும் பொருளாதார வளர்ச்சியாக இதனைக் குறிப்பிடலாம்.

பரந்துபட்ட பொருளாதார வளர்ச்சியின் போது நாட்டில் நியாயமான வகையில் வருமான மீள் பங்கீடு இடம்பெறுவதுடன் அதற்கு ஒருபடி அப்பாற் சென்று பொருளாதாரத்தில் இயங்கும் நபர்கள் பொருளாதார நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்களிப்புச் செய்யக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும் தொழில் வாய்ப்புக்களை விரிவாக்கவும் மேம்படுத்தவும் அத்தியாவசியமானதொரு வியாபார சூழலை ஏற்படுத்துவதும் முக்கியமாகும்.

6.0 வறியவர்களுக்கு சார்பான வளர்ச்சி Pro Poor Growth

உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வறுமை துரிதமாக வீழ்ச்சியடைய பொதுவாக காரணமாகிறது. எனினும் வறியவர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையிலமைந்த பொருளாதார வளர்ச்சியே வறியவர்களுக்கு சார்பான வளர்ச்சி எனப்படுகிறது.

வறியவர்களுக்கு சார்பான வளர்ச்சி பற்றிய இருபேறு அணுகுமுறைகள் உள்ளன.

i. முழுமைரீதியான வரைவிலக்கணம்.

வறிய மக்களின் சராசரி வருமானங்களை விரைவாக அதிகரிக்கக்கூடிய வகையிலான வளர்ச்சி வறியவர்களுக்கு சார்பான வளர்ச்சியென இவ்வரைவிலக்கணம் காட்டுகிறது. அதாவது வறியவர்களின் முழு வறுமை எவ்வளவு விரைவாக வீழ்ச்சியடைகிறது என்பதை இவ்வரைவிலக்கணம் கருத்திற் கொள்கிறது. வறியவர்களுக்கு சார்பான வளர்ச்சி வேகம் அதிகரிக்கும் போது வருமான வறுமை துரிதமாக வீழ்ச்சியடையும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் வறியமக்களின் வருமானங்கள் துரிதமாக அதிகரிக்கும்போது வறுமையின் அகலமும் ஆழமும் துரிதமாக வீழ்ச்சியடையும்.

ii. சார்பு அடிப்படையிலான வரைவிலக்கணம்.

வறியவர்களுக்கு சார்பான வளர்ச்சி பற்றிய சார்புரீதியான வரைவிலக்கணம் வறியவர்களின் வருமானங்களில் ஏற்படும் மாற்றங்களோடு ஒப்பீடு செய்கிறது. இதன்படி மொத்த சனத்தொகையுடன் ஒப்பீடு செய்கையில் வறிய மக்களின் வருமானங்கள் துரிதமாக அதிகரிக்குமாயின் அவ்வளர்ச்சி வறியவர்களுக்கு சார்பான வளர்ச்சி எனப்படும்.

இவ்வரைவிலக்கணத்தின் படி வளர்ச்சியானது வறியவர்களுக்கு சார்புடையதாக அமைய வேண்டுமாயின் வருமானச் சமமின்மைகள் குறைவடைய வேண்டியது கட்டாயமானதாகும்.

(தொடரும்...)

நேரலையில் பல்தேர்வு வினாக்களை
பயிற்சி செய்வதற்கான வாய்ப்பு
டிசம்பர் மாதம் முதல் உங்களுக்கு கிட்டும்.
www.arivuththedal.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல் வருமானம்

சிரேஷ்ட விரிவுரையாளர்
காமினி வீரசிங்க
பொருளியல் துறை
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற வளங்கள், உற்பத்திக் காரணிகள் அல்லது உற்பத்தி வளங்கள் என அழைக்கப்படுகின்றன. உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகியவற்றின் உற்பத்தித் திறன் என்பது உற்பத்தி நடவடிக்கையின் போது குறிப்பிட்ட வளங்களைப் பயன்படுத்திப் பெறக்கூடிய வெளியீட்டு மட்டமாகும். இங்கு உள்ளீட்டினைப் பயன்படுத்தி பெறக்கூடிய வெளியீடுகள் அதிகரித்தல் அல்லது குறிப்பிட்ட வெளியீடுகளைப் பெறுவதற்கான உள்ளீடுகள் வீழ்ச்சியடைதல் உற்பத்தித் திறன் அதிகரிப்பு எனப்படும்.

உற்பத்தித் திறனைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

உற்பத்தித் திறன் = வெளியீடு / உள்ளீடு

இங்கு உள்ளீடுகளை பயன்படுத்துகின்ற வேகத்தை விட வெளியீடுகள் அதிகரிக்கும் வேகம் அதிகமாயின் அது உற்பத்தியில் வளர்ச்சியை ஏற்படுத்தும். இதுவே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

படம் 1.



உற்பத்தித் திறன் அதிகரிப்பினை ஏற்படுத்தும் காரணிகள் பின்வருமாறு

1. தொழில்நுட்ப விருத்தி
2. முகாமைத்துவ விருத்தி
3. மனித மூலதன விருத்தி

நாட்டில் ஆராய்ச்சி அபிவிருத்திக்கான செலவு புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதோடு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. இதன் காரணமாக உற்பத்திப் பொருளின் தரம் அதிகரிப்பதோடு உற்பத்தி செயன்முறையும் இலகுபடுத்தப்படும். இதனால் முன்னரை விட அதிகளவில் உற்பத்தியை மேற்கொள்ளலாம்.

உற்பத்தி செயன்முறையின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக வளங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் வழிநடத்தல் முகாமை எனப்படும். முகாமைத்துவத்தை மறுசீரமைப்பதன் மூலமாக உற்பத்தியை அதிகரிக்க முடிவதோடு உற்பத்திக் கிரயத்தைக் குறைத்து அதிகளவில் பண்டங்களை சந்தைப்படுத்தலாம்.

உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய வகையில் ஊழியரிடம் காணப்படுகின்ற அனுபவம், அறிவு, திறன் என்பனவற்றில் ஏற்படுகின்ற அதிகரிப்பு மனித மூலதனம் எனப்படுகின்றது. இது தொடர்பில் கல்வி, சுகாதாரம், போசாக்கு, தொழிற்பயிற்சி போன்ற காரணிகள் முக்கியம் பெறுகின்றன. இதனால் ஊழியரைக் கருத்தில் கொண்டு இத்துறைகளில் முதலீடு செய்யும் பொது மனித மூலதன விருத்தி ஏற்படும். MP ரொடரோ என்ற பொருளியல் அறிஞர் மனித மூலதனம் தொடர்பில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"The Term human capital refers to the education and Health levels of individuals or Labour force created as a result of education, training and health service that more them more productive" (Todara m.p. (2000), Economic Development)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணி வருமானம்.

காரணிச் சந்தையில் காரணி உரிமையாளர்கள் தமது காரணிகளை நிரம்பல் செய்வதன் ஊடாக பெற்றுக் கொள்கின்ற மொத்த வருமானம் காரணி வருமானம் எனப்படுகின்றது.

நிலம், உழைப்பு, மூலதனம் ஆகியவை தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்ற சந்தை காரணிச் சந்தை எனப்படும். இக்காரணிகளுக்கான கேள்வி மற்றும் நிரம்பல் காரணி விலையைத் தீர்மானிக்கும். இவ் விலையின் அடிப்படையிலேயே காரணி உரிமையாளர்களும் காரணிக்கு கேள்வி ஏற்படுத்துவோரும் தமது தீர்மானங்களை மேற்கொள்ளுவர். விலை அதிகரிக்கின்ற பட்சத்தில் நிரம்பலாளர்கள் அதிகளவில் உற்பத்திக் காரணிகளை நிரம்பல் செய்ய தயாராக இருப்பர். விலை குறைகின்ற பட்சத்தில் கேள்வியாளர்கள் அதிகளவில் உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வியை ஏற்படுத்துவர்.

காரணிச் சந்தையில் அனைத்து நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்படும் காரணிகளுக்கான கேள்வியை ஒன்றிணைத்து சந்தைக் கேள்விக் கோடு உருவாக்கப்படுவதோடு காரணிச் சந்தையில் அனைத்து நிரம்பலாளர்களின் நிரம்பல்களை ஒன்றிணைத்து நிரம்பல் கோடு உருவாக்கப்படுகின்றது. இக் கேள்விக் கோடும் நிரம்பல்க் கோடும் சந்திக்கின்ற இடத்தில் விலை தீர்மானிக்கப்படுகின்றது. இதனை கீழ் வரும் வரைபடம் காட்டுகின்றது.

படம் 2



SF = காரணி நிரம்பல் கோடு
DF = காரணி கேள்ளிக் கோடு

வரைபடத்தின் படி சந்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ள விலை OP ஆகும். இவ்விலையின் கீழ் OQ அளவில் நிரம்பல் இடம்பெறுவதோடு காரணி நிரம்பலாளர்களின் மொத்த வருமானம் OPEQ என்ற பரப்பில் காணப்படுகின்றது.

மொத்த வருமானத்தின் கீழ் பின்வரும் இரு வருமானங்கள் உள்ளடங்குகின்றன.

1. மாற்றல் வருமானம்
2. பொருளாதார வாடகை

மாற்றல் வருமானம்.

மாற்றல் வருமானம் என்பது ஒரு குறிப்பிட்ட உற்பத்திக் காரணியை வேலை வாய்ப்பில் மாற்றத்தை ஏற்படுத்தாது குறிப்பிட்ட பயன்பாட்டில் தொடர்ந்து வைத்திருப்பதற்கு அக் காரணி உரிமையாளர் எதிர்பார்க்கின்ற இழிவளவு விலை மாற்றல் வருமானமாகும். காரணி உரிமையாளருக்கு இத்தகைய வருமானம் ஒன்றினை பெறமுடியாத நிலையில் அவர் குறிப்பிட்ட உற்பத்தியிலிருந்து விலகி வேறு உற்பத்தியில் குறிப்பிட்ட வளத்தினை ஈடுபடுத்துவார். இதன்மூலம் மாற்றல் வருமானம் என்பது உற்பத்தி வளங்களின் அமைய செலவினை பிரதிபலிக்கின்றது என்பதனை அறிந்து கொள்ளலாம். இதனால் குறிப்பிட்ட உற்பத்தியில் ஒரு வளத்தினை தொடர்ந்து ஈடுபடுத்துவதற்கு அவ்வளத்தின் அமைய செலவினை ஈடுசெய்வதற்கான வருமானமேனும் கிடைத்தல் வேண்டும்.

உற்பத்தி காரணி ஒன்றில் நிரம்பல் வளையியானது நிரம்பலாளர் காரணியை நிரம்பல் செய்யும் போது எதிர்பார்க்கின்ற இழிவளவு தொகையை காட்டுகின்றது.

பொருளாதார வாடகை

பொருளாதார வாடகை என்பது ஒரு உற்பத்திக் காரணியை தொடர்ந்து அவ் உற்பத்தியில் வைத்திருப்பதற்கு தேவையான வருமானத்தை விட அதற்கு மேலதிகமாக கிடைக்கின்ற வருமானமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வரைபடம் இவ்விரு எண்ணக்கருக்களையும் தெளிவாக விளக்குகின்றது.

படம் 3



ஏதேனும் உற்பத்திக் காரணி ஒன்று தொடர்பிலான சமனிலையை வரைபடம் காட்டுகின்றது. வரைபடத்தின் படி சமனிலை விலை T ஆகும். சமனிலைத் தொகை Q ஆகும். இதன்படி உற்பத்தி தொடர்பில் பெறப்படும் மொத்த வருமானம் OPEQ ஆகும்.

காரணி ஒன்றின் மொத்த வருமானம் = மாற்றல் வருமானம் + பொருளாதார வாடகை

வரைபடத்தின்படி OQE முக்கோணமானது காரணி நிரம்பலாளர்கள் OQ அளவில் காரணிகளை நிரம்பல் செய்வதற்கு எதிர்பார்க்கின்ற மாற்றல் வருமானம் காட்டப்படுகின்றது. உற்பத்திக் காரணிகளின் ஒட்டுமொத்த வருமானத்தில் மாற்றல் வருமானத்திற்கு மேலதிகமாக பெறப்படுகின்ற பொருளாதார வாடகை OPE முக்கோணத்தால் காட்டப்படுகின்றது. இங்கு மொத்த வருமானத்தின் பொருளாதார வாடகையின் பங்கு எத்தகையது என்பதை உற்பத்திக் காரணியின் நெகிழ்ச்சி தீர்மானிக்கும். உற்பத்திக் காரணியின் நெகிழ்ச்சித் தன்மை குறைவடையக் குறைவடைய பொருளாதார வாடகையின் பெறுமதி அதிகரிக்கும். நிலம் போன்ற உற்பத்திக் காரணி பூச்சிய நெகிழ்ச்சியைக் கொண்டிருப்பதால் இவை உழைக்கின்ற ஒட்டுமொத்த வருமானமுமே பொருளாதார வாடகையாகவே காணப்படும். உற்பத்திக் காரணி ஒன்றின் நெகிழ்ச்சி பூரணமானதாகக் காணப்படின் அக் காரணி பெறும் பெறுமானம் மாற்றல் வருமானமாகவே காணப்படும். கீழ்வரும் வரைபடமானது காரணிகளின் நெகிழ்ச்சிக்கும் காரணி வருமானத்திற்கும் இடையிலான தொடர்பினைக் காட்டுகின்றது.

பூரண நெகிழ்ச்சி



நெகிழ்வுள்ள நிரம்பல்



பூச்சிய நெகிழ்ச்சி நிரம்பல்



அலகு நெகிழ்ச்சி



நெகிழ்வற்ற நிரம்பல்



மீட்டல் வினாக்கள்

1. குறிப்பிட்ட உற்பத்திக் காரணி ஒன்றின் ஒட்டுமொத்த வருமானம் மாற்றல் வருமானமாக அமைகின்ற சந்தர்ப்பத்தைக் குறிப்பிட்டு விளக்குக.
2. உற்பத்திக் காரணி ஒன்று பெறுகின்ற வருமானம் முழுவதுமே பொருளாதார வாடகையாக காணப்படுகின்ற சந்தர்ப்பத்தை வரைபடம் ஊடாக விளக்குக.
3. பொருளாதார வாடகை என்பது உற்பத்திக் காரணிகள் மட்டும் பெறக்கூடிய வருமானமாகும். இக் கூற்றை ஏற்றுக் கொள்வீரா? விளக்குக.

(வினாக்களுக்குரிய விடைகளை அடுத்து வரும் இதழில் எதிர்பாருங்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VICEGUIDE

சிரேஷ்ட்ட விரிவுரையாளர்
கலாநிதி ந. ரவீந்திரகுமரன்
பொருளியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

வரையறுக்கப்படாத தேவைகள்
Unlimited Wants

கற்பனையில் எமது தேவைகள் வரையறுக்கப்பட்டவையாக காணப்பட்ட போதும் உண்மையில் அவை வரையறையற்றவையாகும். எமக்கு உணவு, உடை, உறையுள், கல்வி, மற்றும் சுகாதார பராமரிப்பு போன்ற பல விடயங்கள் தேவைப்படுகின்றன. இவற்றுள் சில மிக முக்கியமாக தேவைப்படுவதனால் நாம் அவற்றினை **அத்தியவசிய** (Necessities) தேவைகள் என அழைக்கின்றோம். இவற்றினை தவிர ஏனைய பல பொருள்களும் எமது அன்றாட வாழ்க்கைக்கு தேவையானவையாகும். அந்த வகையில், மோட்டார் கார், புகையிரதம், மற்றும் விமானம் போன்ற போக்குவரத்து சாதனங்கள்; கணணி, புத்தகங்கள், மற்றும் காகிதாதிகள் போன்ற கல்வி கற்பதற்கு தேவையான பொருள்கள்; விளையாட்டு பொருள்கள், மற்றும் பொழுது போக்கு சாதனங்கள் என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.

எம்மிடம் கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்களை விட எமது தேவைகள் அதிகமாக காணப்படுவதால் நாம் தெரிவுகளை மேற்கொள்வது அவசியமாகும். எத்தகைய தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு நாம் எமது தேவைகளை வரிசைப்படுத்துதல் சிறந்தது. எம்மிடம் கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்களைக் கொண்டு மிக முக்கியமான தேவைகளை பூர்த்திசெய்ய நாம் முயற்சிக்க வேண்டும்.

உற்பத்திக்கான வரையறைகள் மற்றும் தெரிவு தொடர்பான அடிப்படை எண்ணக்கருவான சந்தர்ப்பச்செலவு என்பதனை கருத்தில் கொண்டு மக்கள் எவ்வாறு தமது தெரிவுகளை மேற்கொள்வர் என்பது பற்றி அடுத்துவரும் பகுதியில் நோக்குவோம்.

வளங்கள், உற்பத்திச் சாத்தியங்கள் மற்றும் சந்தர்ப்பச் செலவு
Resources, Production possibilities, and Opportunity Cost

எல்லா வேலை நாட்களினது ஒவ்வொரு நிமிடத்திலும் இலங்கையிலுள்ள தொழிற்சாலைகள், பண்ணைகள், அலுவலகங்கள், நிறுவனங்கள் மற்றும் கட்டடவாக்கம் மேற்கொள்ளப்படும் இடங்கள் என்பவற்றில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயரளவான பெறுமதியுடைய பல்வகைப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்கின்றனர். கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் மற்றும் சேவைகளின் தொகை என்பது எப்போதும் வறையறுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. இத்தகைய வரையறை என்பதனை ஒரு **உற்பத்தி சாத்திய வளையி** மூலம் விபரிக்க முடியும்.

உற்பத்திச் சாத்திய வளையி என்பது கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யத்தக்க பொருள்களினதும் சேவைகளினதும் சேர்க்கை மற்றும் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களினதும் சேவைகளினதும் சேர்க்கை என்பவற்றிற்கு இடையிலான எல்லையினை குறித்து நிற்கும் ஒரு வளையியாகும்.

உற்பத்தி சாத்திய வளையியினை ஒரு வரைபடத்தின் மூலம் விளக்குவதற்காக ஒரு குறிப்பட்ட நேரத்தில் இரண்டு பொருள்களின் உற்பத்தி மீதே கவனம் செலுத்தப்படுவதாக கருதுவோம். இரு பொருள்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தும் போது ஏனைய பொருள்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தித் தொகை நிலையானதாக இருப்பதாக கருதுகின்றோம். இரு பொருள்கள் தொடர்பாக உற்பத்தி சாத்திய வளையியினை வரைவதற்காக ஏனையவை மாறவில்லை என்ற எடுகோள் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. அதாவது தற்போது கவனம் செலுத்துகின்ற இரண்டு பொருள்களினதும் உற்பத்தி தவிர்ந்த ஏனைய அனைத்தும் மாறாது நிலையானதாக இருப்பதாக கருதி பொருளாதாரம் தொடர்பாக ஒரு மாதிரியை விளக்க முனைகின்றோம். அதிகளவான மாணவர்கள் கொள்வனவு செய்கின்ற குளிர்பானம் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் ஆகிய இரு பொருள்களினதும் உற்பத்தி சாத்திய வளையியினை நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உற்பத்தி சாத்திய வளையி
Production Possibility Frontier

குளிர்பானம் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் என்பவை தொடர்பான உற்பத்தி சாத்திய வளையியானது கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்களைப் பயன்படுத்தி இவ்விரு பொருள்களிலும் உற்பத்தி செய்யக்கூடிய வேறுபட்ட சேர்க்கைகளின் அதிஉச்ச எல்லையினை காட்டுகின்றது. அத்தகைய ஒரு உற்பத்தி சாத்திய வளையினை வரைபடம் 1 காட்டுகிறது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 1, கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யத்தக்க குளிர்பானம் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் என்பவற்றின் வேறுபட்ட உற்பத்தி சேர்க்கைகளின் உச்ச அளவினை காட்டுகின்றது. இவ் அட்டவணையில் தரப்பட்ட தரவுகளைக் கொண்டே வரைபடம் 1 வரையப்பட்டுள்ளது.

அட்டவணை 1: வேறுபட்ட உற்பத்தி சேர்க்கைகளின் அளவு

சாத்தியங்கள்	அப்பியாசப் புத்தகங்கள் (ஒரு மாதத்திற்கு ஆயிரம்)	குளிர்பானம் (ஒரு மாதத்திற்கு ஆயிரம் போத்தல்கள்)
a	0	150
b	10	140
c	20	120
d	30	90
e	40	50
f	50	0

வரைபடம் 1: உற்பத்திச் சாத்திய வளையி



மேலேயுள்ள வரைபடத்திலே அப்பியாசப் புத்தகங்களின் உற்பத்தி தொகை X அச்சிலும் குளிர்பான உற்பத்தி Y அச்சிலும் காட்டப்பட்டுள்ளது. உற்பத்தியின் சாத்திய எல்லையை உற்பத்திச் சாத்திய வளையி குறிப்பிட்டு காட்டுவதால் கொடுக்கப்பட்டுள்ள வளங்களைப் பயன்படுத்தி அவ்வளையிற்கு வெளிப்புறமாக எந்த ஒரு புள்ளியினையும் அடைந்துவிட முடியாது. ஆகவே, இத்தகைய புள்ளிகள் (உதாரணம் புள்ளி **h**) அடைந்து கொள்ளமுடியாத சாத்தியமற்ற புள்ளிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்களைப் பயன்படுத்தி தேவைகள் பூர்த்தி செய்து கொள்ள முடியாது என்பதனையே இவ்வாறு வெளிப்புறத்தில் காணப்படுகின்ற புள்ளிகள் விளக்கி நிற்கின்றன. கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்களைப் பயன்படுத்தி உற்பத்திச் சாத்திய வளையிற்கு உட்புறம் காணப்படுகின்ற எல்லாப்புள்ளிகள் மற்றும் அச்சாத்திய வளையியின் மீதுள்ள எல்லாப் புள்ளிகளிலும் உற்பத்தியை மேற்கொள்ளமுடியும். இத்தகைய புள்ளிகள் அடைந்து கொள்ளக்கூடிய சாத்தியமான புள்ளிகளாகும்.

குறிப்பிட்ட ஒரு மாதத்தில் 40 ஆயிரம் அப்பியாசப் புத்தகங்களும் 50 ஆயிரம் போத்தல் குளிர்பானமும் உற்பத்தி செய்யப்படுவதாக கருதுவோம். அட்டவணை 1 இல் **e** என்ற புள்ளியில் தரப்பட்டுள்ள தரவுகளை கொண்டு வரைபடம் 1 இல் **e** என்ற புள்ளி பெறப்பட்டுள்ளது. ஏனைய உற்பத்தி சாத்தியங்களையும் வரைபடம் 1 காட்டி நிற்கின்றது. உதாரணமாக அப்பியாசப் புத்தகங்கள் எதனையும் உற்பத்தி செய்யாது கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் அனைத்தையும் குளிர்பான உற்பத்திக்கு பயன்படுத்துவதாக கருதுவோமாயின் அதனை அட்டவணை மற்றும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **a** புள்ளி விளக்குகின்றது. குளிர்பானத்தில் 150 ஆயிரம் போத்தல்கள் உற்பத்தி செய்யப்படுவதனையும் அப்பியாசப் புத்தக உற்பத்தி பூச்சியமாக இருப்பதனையும் அப்புள்ளி குறிப்பிடுகின்றது.

மாறாக, குளிர்பான உற்பத்தியின் அளவை படிப்படியாக குறைக்க முற்படும் போது அதற்காக பயன்படுத்தப்பட்ட வளங்கள் படிப்படியாக அப்பியாசப் புத்தகங்களின் உற்பத்தி நோக்கி மாற்றப்படுகின்றன. கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் அனைத்தையும் அப்பியாசப் புத்தக உற்பத்திக்கு பயன்படுத்துவதாக கருதுவோமாயின் மொத்தமாக 50 ஆயிரம் புத்தகங்களை உற்பத்தி செய்ய முடியும். இத்தகைய ஒரு நிலைமை அட்டவணை 1 மற்றும் வரைபடம் 1 என்பவற்றில் **f** என்ற புள்ளி விளக்கி நிற்கின்றது.

உற்பத்தி வினைத்திறன்
Production Efficiency

ஏனைய சில பொருள்களின் உற்பத்தியில் குறைப்பினை ஏற்படுத்தாது குறித்த ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க முடியாதாயின் நாம் வினைத்திறனான உற்பத்தி மட்டத்தை அடைந்து விட்டோம் என்பது கருத்தாகும். வினைத்திறன் வாய்ந்த உற்பத்தி மட்டம் என்பது உற்பத்தி சாத்திய வளையியின் மீதுள்ள ஒவ்வொரு புள்ளியினாலும் காட்டப்படுகின்றது. உற்பத்தி சாத்திய வளையியின் உட்புறமாக **g** என்ற புள்ளியில் எமது உற்பத்தி மட்டம் காணப்படுமாயின் அதனை நாம் வினைத்திறனற்ற உற்பத்தி மட்டம் என்கின்றோம். கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் முழுமையாக பயன்படுத்தாமை மற்றும் அவ்வளங்கள் சிறந்த வகையில் ஒதுக்கீடு செய்யப்படாமை போன்ற காரணங்களினால் வினைத்திறனற்ற உற்பத்தி மட்டம் ஏற்படலாம்.

உற்பத்தி சாத்திய வளையியின் உட்புறமாக **g** போன்ற ஒரு புள்ளியில் உற்பத்தி இடம் பெறும் போது கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்களை மேலும் வினைத்திறனாக பயன்படுத்தி அதிகளவு குளிர்பானங்களையோ அல்லது அதிகளவான அப்பியாசப் புத்தகங்களையோ அல்லது இரு பொருளிலும் உயர்வான அளவினையோ உற்பத்தி செய்ய முடியும். ஆனால் உற்பத்தி சாத்திய வளையியின் மீதான ஏதாவதொரு புள்ளியில் உற்பத்தி இடம்பெறுமாயின் வளங்கள் வினைத்திறன் உடையதாக பயன்படுத்தி குறித்த ஒரு பொருள் உற்பத்தியை அதிகரக்க வேண்டுமாயின் ஏனைய பொருளின் உற்பத்தியில் குறைப்பினை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வணிகக்கல்வி பல்தேர்வு வினாக்கள்

2013ம் மாணவர்களை மையப்படுத்தி சிங்கள மொழி மூல வினாக்களின் இத்தொகுப்பு இடம்பெறுகின்றது.

தொகுப்பு :- பா. பானுசந்தர்

01. கீழ்வரும் x நிரலில் தேவைகள் A எனவும், விருப்பங்கள் B எனவும் குறிப்பிடப்படுவதோடு y நிரலில் அவை தொடர்பான பண்புகள் தரப்படுகின்றது.

x		y
A -	தேவைகள்	1. சமூக காரணிகளால் மாற்றமடையக்கூடியது
B -	விருப்பங்கள்	2. முதன்மையானது
		3. அத்தியாவசியமற்றது
		4. பல்லினத்தன்மையானது
		5. மனித பிறப்பின் போதே உருவாகுவது
		6. வரையறுக்கப்பட்டது.

தேவைகள் மற்றும் விருப்பங்களின் பண்புகளை சரியாக காட்டும் தொகுதி எது?

1) A - 2, 4, 6 B - 1, 3, 5 2) A - 1, 3, 6 B - 2, 4, 5
3) A - 2, 5, 6 B - 1, 3, 4 4) A - 1, 4, 6 B - 2, 3, 5
5) A - 1, 5, 6 B - 2, 3, 4

02. கீழ்வரும் கூற்றுக்களில் ஒன்றுடன் உடன்பட முடியாது, அதனை அடையாளம் காண்க.

1) நாடப்பெற பண்டங்களின் சிறப்பம்சம் யாதெனில் அவை அறிமுகஞ் செய்யும் போது மட்டுமே நாடப் பெறப்பண்டமாக காணப்படும்.
2) 1ம் நிலை, 2ம் நிலை, 3ம் நிலை உற்பத்தி என நேரில் உற்பத்தியினை வகைப்படுத்த முடியும்.
3) 1ம் நிலை, 2ம் நிலை, 3ம் நிலை உற்பத்திக்கிடையிலான தொடர்பே உற்பத்தி சங்கிலி எனப்படும்.
4) நிறுவனத்தின் செயற்பாடுகளை பல்வேறு பகுதிகளாக பிரிந்து ஒவ்வொரு பகுதிகளுக்கும் வேறு வேறாக ஊழியர்களை நியமித்தல் தொழில் சிறப்புத் தேர்ச்சி ஆகும்.
5) எந்தவொரு வணிகத்தினதும் அடிப்படை தேவைகளும் விருப்பங்களுமே ஆகும். விருப்பத்தினூடாக கேள்வி ஏற்படுவதோடு இதனை பூர்த்தி செய்ய உற்பத்தி வழங்கப்பட்டு சந்தை உருவாகின்றது.

03. கீழ்வருவன வணிகச் சூழல் தொடர்பான சில கூற்றுக்கள் ஆகும்.

A - பேரின பொருளாதார சூழல் காரணிகளுக்கிடையில் இடைத்தொடர்பு உண்டு
B - போட்டியாளர்கள், இணைப்பு பொருட்களை உற்பத்தி செய்வோர், நிறுவன கட்டமைப்பு என்பன அண்மிய சூழல் காரணிகளாகும்.
C - பேரினச்சூழல் காரணிகளையும், அண்மியச்சூழல் காரணிகளையும் இணைப்பின் அதனை நுண்சூழல் எனலாம்.
D - நிறுவனத்தினை தாக்கும் விஷேட நிறுவனங்கள் அல்லது குழுக்கள், அண்மியச் சூழல் என கூறமுடியும்
E - போட்டியாளர்கள், நிரம்பலாளர்கள் மற்றும் சந்தைக்கு பிரவேசிக்க எண்ணியுள்ள புதிய முதலீட்டாளர்கள் காரணமாக நிறுவனத்துக்கு அச்சுறுத்தலும் வாய்ப்புகளும் உண்டு.

மேலுள்ள கூற்றுக்களில் சரியான விடைகளை மட்டும் உள்ளடக்கும் தொகுதி எது?

1) B, D, E 2) A, D, E 3) B, C, E 4) B, C, D 5) A, C, E

04. வணிக விழுமிய கட்டமைப்பொன்றை உருவாக்கும்போது கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகளை மட்டும் கொண்ட தொகுதியை தெரிவு செய்க?

A போட்டியாளர்
B வாடிக்கையாளர்
C வெளிப்படையானத்தன்மை
D தேவை
E நிறுவன கலாசாரம்

1) A, B, E 2) B, C, E 3) A, B, C 4) A, C, D 5) B, D, E

05. அரசுக்கும் வணிகத்துக்குமிடையிலான அண்ணியோண்ய தொடர்பின் காரணமாக இரு தரப்பினரும் தமத நோக்கங்களை அடைந்து கொள்ளுகின்றனர். இதன் படி அரசின் நோக்கங்களை நிறைவேற்ற வணிகம் பங்களிக்க கூடிய வழியொன்றாக கருத முடியாதது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) வரி செலுத்தல்
2) சட்டதிட்டங்களை பின்பற்றுதல்
3) சூழல்சார் நடைமுறைகளை பின்பற்றுதல்
4) வரிச்சலுகைகளையும் அரச ஊக்குவித்தலையும் பெற்றுக்கொள்ளுதல்
5) வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தல்

06. கீழ்வருவது பொருளொன்றை கொள்வனவு செய்தல் தொடர்பில் உமது நண்பர் உமக்கு கூறிய கூற்று "நான் பொருள் கொள்வனவு செய்ய வணிக நிலையத்துக்கு சென்றால் அப்பொருட்கள் தொடர்பில் தரத்தை பெரிதும் கருத்தில் கொள்வதுண்டு. அதுமட்டுமின்றி சில வணிக நிலையங்களுக்குச் சென்று விலை ஒப்பீட்டையும் மேற்கொள்வதுண்டு."

மேற்கூரிய கூற்றினூடாக விளக்கப்படுவது.
1) செவிமடுக்கும் உரிமை
2) நுகர்வோர் கல்விக்கான உரிமை
3) விளம்பரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தல்
4) சமூக அக்கறை கொள்ளுதல்
5) அடிப்படை உரிமைகளை பூர்த்தி செய்வதற்கான உரிமை

07. உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனிகளின் பண்பொன்றாக கர்த முடியாதது எது?
1) பங்குகள் வெளிவிடப்படமாட்டாது
2) இழிவளவு பங்குதாரர் 2 என்பதோடு உச்ச எண்ணிக்கை வரையற்றவை
3) கம்பனியில் இலாபம் பகிரப்படும்
4) சேவை நோக்கில் ஆரம்பிக்கப்படுபவை
5) அமைப்பு அகவிதியில் ஒவ்வொரு பங்குதாரரும் கம்பனியின் முடிவடையும் போது செலுத்த வேண்டிய தொகையினை குறிப்பிட வேண்டும்.

08. பங்காளர்களின் வகைகளும் அவர்களின் பண்புகளும் கீழே தரப்படுகின்றன.

பங்காளர் வகை	பண்பு
1. தூங்கும் பங்காளர்	A - முகாமையில் ஈடுபடாததோடு பங்காளர் என பொதுமக்கள் அறிவர்.
2. அமைதி பங்காளர்	B - நிறுவனத்தின் மாறும் இலாபத்துக்கேற்றவாறு மாறும் வட்டியை பெறுவார்.
3. பெயரளவு பங்காளர்	C - முகாமையில் பங்கு கொள்வதோடு பங்காளர் என வெளிகாட்டிக் கொள்ளமாட்டார்
4. போலி பங்காளர்	D - தன்னுடைய நன்மதிப்பை நிறுவனத்தில் வியாபாரத்தின் இலாபத்தில் பங்குகொள்ளல்

பங்காளர்களின் பண்புகளை சரியாக காட்டும் தொகுதியை தெரிவு கொள்க?
1) 1C, 2A, 3D, 4B 2) 1A, 2C, 3D, 4B 3) 1A, 2C, 3B, 4D
4) 1C, 2D, 3A, 4B 5) 1A, 2D, 3B, 4C

09. கீழ்வருவனவற்றின் முயற்சியாண்மை திறன்களை வளர்த்துக்கொள்ளக்கூடிய வழியாக கொள்ளக்கூடியது எது?
1) சுயமதிப்பீடு 2) விளங்கி கொள்ளல் 3) நெகிழ்ச்சி தன்மை
4) தடையில்லாமல் செயற்படல் 5) சமூக பிரச்சினைகள்

10. கீழ்வருவன இலத்திரனியல் பணம் தொடர்பில் A,B,C என மூன்று விடயங்களாகும்.
A :- பணம் இலத்திரனியல் மயவதோடு, இச்சேவையை பெற தனியாக உதிரிப்பாகங்கள் மற்றும் வெளி நிறுவனமொன்றின் சேவையும் அவசியம்.
B :- தகவல்களை வாசிக்கத்தக்க வகையில் இலத்திரனியல் பகுதியை கொண்ட பணப்பையின் அளவில் அமைந்த கொடுப்பனவிற்காக பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் அட்டையாகும்.
C :- வணிக வங்கிகளின் வாடிக்கையாளருக்கு தாம் பெற்றுக்கொள்ளும் பல்வேறு சேவைகள் தொடர்பிலான கொடுப்பனவுகள் தமது கணக்கினூடாக செலுத்துதல்.

மேற்கூறியவற்றுள் A,B,C என்பனவற்றில் இலத்திரனியல் பணத்தை சரியாக காட்டும் தொகுதி எது?
1) முற்கொடுப்பனவு அட்டை / இலத்திரனியல் பணப்பை / நேர் வரவு ஒப்படைப்பு
2) டிகிட்டல் பணம் / இலத்திரனியல் பணப்பை / நேர்வரவு ஒப்படைப்பு
3) Paypal கணக்கு / ஸ்மாட் கார்ட் / வரவுத்தாள்
4) டிகிட்டல் பணம் / ஸ்மாட் கார்ட் / நேர்வரவு ஒப்படைப்பு
5) ஸ்மாட் கார்ட் / இலத்திரனியல் பணப்பை / நேர்வரவு ஒப்படைப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறிவுத் தேடல்

ImperialCollege
NURTURING TOMORROW'S LEADERS

www.arivuththedal.com

அறிவுத்தேடல் இணையத்தளத்தின் அறிமுகத்திற்காக
Imperial கல்லூரி வழங்கும் விஷேட இணைப்பு

The MCQ
QUIZ BOOK

அறிவுத்தேடல் சஞ்சிகைக்கென கணக்கீட்டு, வணிகக் கல்வியில்
அனுபவமிக்க ஆசிரியர்களான I. L. A. சலாம் மற்றும் K. K. அரஸ் ஆகியோரின்
வினாத்தொகுப்பு இம்முறை இலவச இணைப்பில் இடம்பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I.L.A. சலாம்
B.B.A (Spl)
சீரேஸ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
மட்டு அம்பாறை மற்றும் மலையகல்லை

ecway

01. சமீரவின் வணிகத்தில் கடன்பட்டோர் தொடர்பான பின்வரும் விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன

பெயர்	2011.4.1ல் மீதி	விற்பனை (VAT) இல்லாமல்	விற்பனைகளில் VAT	உட்திருப்பம் VAT இல்லாமல்	உட்திருப் பங்களில் VAT	பெற்ற பணம்	கொடுத்த கழிவு	அறவிட முடியாக்கடன்
சமன்	12000வரவு	40000	4800	5000	600	32000	3000	1000
நுவன்	8000வரவு	30000	3600	4000	480	24000	4000	-
திலக்	6000செலவு	20000	2400	6000	720	18000	2000	-
நயனா	17000வரவு	60000	7200	2000	240	36000	4000	2000
மொத்தம்	31000வரவு	150000	17800	17000	2040	110000	13000	3000

இவை தவிர சமனிடம் ரூபா 200 உம் நயனாவிடம் ரூபா 400உம் தண்ட வட்டியாக அறவிடப்படும்.

தேவையானவை

1. பொதுப்பேரேட்டில் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு
2. கடன்பட்டோர் பேரேட்டில் உரிய கடன்பட்டோர் கணக்குகள்

02. நலினின் வணிகத்தில் 2012மார்ச் 31ல் முடிவடைந்த வருடத்திற்குத் தயாரிக்பபட்ட வரைவு வருமானக் கூற்றில் இலாபம் ரூபா 682000 ஆக இருந்தது. எவ்வாறான போதிலும் கணக்குவைப்பின் போது பின்வரும் வழுக்கள் ஏற்பட்டு இருப்பதாக பின்னர் வெளிவந்துள்ளது

1. 2012.மார்ச் 31ல் இருந்த இருப்பின் கிரயம் ரூபா 80000ஆகும் அதன் தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூபா 90000ஆகும் தேறிய தேறக்கூடிய பெறுமதி வியாபாரக்கணக்கில் செலவுவைக்கப்பட்டு இருப்புக்கணக்கில் வரவு வைக்கப்பட்டது
2. உட்திருப்பம் ரூபா 20000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் செலவு வைக்கப்பட்டு இருந்தபோதும் அது உட்திருப்பக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருப்பது ரூபா 2000 எனவாகும்
3. பெறுமதிசேர் வரி 12%ஆக உள்ளடக்கப்பட்ட ரூபா 13440 கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது
4. பெற்ற கழிவு ரூபா 4000 கொடுத்தகழிவுக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இது கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. ரூபா 3000 வட்டி வருமானம் கணக்குகளில் பதிவிடப்படவில்லை
6. உரிமையாளர் இட்ட மூலதனம் ரூபா 20000 மூலதனக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. தொங்கல் கணக்கின் மீதி ஐந்தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தேவையானவை

1. வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புக்கள்.
2. சரியான இலாபத்தைக் கணிக்கும் கூற்று.
3. வழுக்கள் திருத்தப்பட்ட பின்னர் வணிகத்தின் தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட தாக்கம்.

03. (அ) ஒரு வணிகம் தொடர்பில் 2011.04.01ல் இருந்த இயந்திரங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு

இயந்திரம்	கொள்வனவுத் தகதி	கிரயம்	எஞ்சிய பெறுமானம்	பயனுடைய ஆயுட்காலம்
A	2005.04.01	700000	200000	05
B	2008.04.01	600000	200000	08
C	2009.10.01	900000	300000	06
D	2010.01.01	1000000	200000	10

2012 மாரச் 31ல் முடிவடைந்த வருடத்திற்குள்ளே இயந்திரங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் பின்வருமாறு

1. 2011.10.01ல் Bஇயந்திரம் ரூபா 520000த்துக்கு விற்பனை செய்யப்பட்டது
2. 2011.07.01ல் Cஇயந்திரம் ரூபா 200000 செலவில் நவீனப்படுத்தப்பட்டது. இந்த நவீனப்படுத்தலின் விளைவாக இதன் பயனுடைய ஆயுட்காலம்8 வருடங்களாகவும் எஞ்சியபெறுமானம் 400000ஆகவும் தீர்மானிக்கப்பட்டது
3. Dஇயந்திரத்தின் நியாயமான பெறுமதி புத்தகப் பெறுமதியில் இருந்து வேறுபட்டிருப்பதால் 2011.04.01ல் அது ரூபா 1150000த்துக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும் அதன் எஞ்சிய பெறுமானம் ரூபா 250000 எனவும் எஞ்சிய பயனுடைய ஆயுட்காலம் 8வருடங்கள்ள எனவும் தீர்மானிக்கப்பட்டது.
4. 2011.10.01இல் E இயந்திரம் ரூபா 500000த்துக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. அதன் பயனுடைய ஆயுட்காலம் 5 வருடங்கள் எனவும் எஞ்சிய பெறுமானம் ரூபா 100000 எனவும் தீர்மானிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானவை
2012மார்ச் 31ல் முடிவடைந்த வருடத்துக்கான
1. இயந்திரக்கணக்கு
2. இயந்திர தேய்மான ஏற்பாட்டுக்கணக்கு
3. இயந்திர அகற்றல் கணக்கு
4. 2012 மார்ச் 31ல் உள்ளபடியான ஐந்தொகையில் காட்வேண்டிய கொண்டுசெல் மீதி.

4. சூரியா கம்பனி 2012 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபமாக ரூ. 750000 ஐக் கொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து பின்வரும் வழுக்கள் வெளிப்படுத்தப்பட்டன.
   I. 2012 மார்ச் 31 இல் இருந்த சரக்கிருப்புக்கள் ரூ. 50000 இனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தன.
   II. கொள்வனவுத் திரும்பல் ரூ. 30000 கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவில் பதியப்பட்டதுடன். கொள்னவுத் திரும்பல் கணக்கில் ரூ.3000 மட்டுமே செலவில் பதியப்பட்டது.
   III. கொடுத்த கழிவு ரூ. 6000 ஆனது பெற்ற கழிவுக் கணக்கில் வரவில் பதியப்பட்டது.
   IV. பெறுமதி சேர்ப்பு வரி (VAT) ரூ. 1200 யும் உள்ளடக்கிய காசு விற்பனைத் தொகையான ரூ.11200 ஆனது விற்பனைக் கணக்கின் செலவில் பதியப்பட்டிருந்தது.
   V. வருடத்திற்கான வட்டிச் செலவினமானது ரூ.5000 இனால் குறைத்து எழுதப்பட்டிருந்தது.
   VI. 2012 மார்ச் 31 இலுள்ள இருப்புக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதியானது அதன் கிரயத்தைவிட ரூ.25000 இனால் குறைவாக இருந்தது. எனினும் இவ்வருடத்திற்கான இலாபத்தினை கணிக்கையில் இறுதி சரக்கிருப்பானது கிரயத்தில் பெறுமதியிடப்பட்டுள்ளது.

   வேண்டப்படுவது,
   (1) வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்.
   (2) வழுக்களைத் திருத்திய பின்னரான வருடத்திற்கான இலாபம்.
   (3) வழுக்களைத் திருத்திய பின்னர் தேறிய சொத்துக்களில் எழுந்த அதிகரிப்பு அல்லது குறைவு.

5. 2012 மார்ச் 31 இல் நிறுவனத்தின் வங்கிக் கூற்று செலவு மீதி ரூ.3000 ஐ காட்டியது. காசுப் புத்தகமீதி வங்கிக் கூற்று மீதியுடன் ஒப்பிடும் போது பின்வரும் தகவல்கள் தெரியவந்தன.
   i. வைப்புச் செய்யப்பட்ட காசோகைள் ரூ.80000 இன்னும் வசூலிக்கப்படவில்லை.
   ii. வழங்குனரொருவருக்கு வழங்கப்பட்ட ரூ.30000 இற்கான காசோலையொன்று வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.
   iii. வங்கிக் கூற்றின்படி வங்கிக் கட்டணங்கள் ரூ.500, வாடகைக்கான நிலையான கட்டளைக் கொடுப்பனவு ரூ.1500 ஆகியன காசுப்புத்தத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.
   iv. வங்கியினால் திருப்பியனுப்பிய ரூ.20000 பெறுமதியான காசோலை தொடர்பில் காசுப்புத்தகத்தில் எதுவித பதிவும் செய்யப்பட்டிருக்கவில்லை. இக்காசோலையானது கடன்பட்டோன் ஒருவரிடமிருந்து பெறப்பட்டு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

   வேண்டப்படுவது,
   (1) 2012 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று.
   (2) தேவையான சீராக்கங்களைச் செய்ய முன்னராக 2012 மார்ச் 31 இல் உள்ள காசுப்புத்தக மீதி.
   (3) மறுக்கப்பட்ட காசோலையைப் பதிவதற்கான நாட்குறிப்புப்பதிவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I.L.A. சலாம்
B.B.A (Spl)
சீரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
மட்டு அம்பாறை மற்றும் மாவனல்லை

01. 2012 மார்ச் 31ல் உள்ளபடியான ஐந்தொகையில் இதன் மீள்மதிப்பீட்டு தொகை ரூபா 30,000,000 எனப்பதியப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் பின்வருவனவற்றுள் எக்கணக்கீட்டு எண்ணக்கரு பின்பற்றப்படவில்லை?
1. அலகுசார் எண்ணக்கரு
2. தொடர்ந்து செல்
3. தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு
4. முக்கியத்துவ எண்ணக்கரு
5. வரலாற்றுக் கிரயம்
(.....)

02. வரை. அமறா கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் ஐயக்கடனுக்கான ஏற்பாடாக ரூபா 150,000 உள்ளடக்கப் பட்டிருந்தது. பின்வருவனவற்றுள் எக்கணக்கீட்டு எண்ணக்கரு இச்சீராக்கத்திற்கான கணக்கீட்டு அடிப்படையை வழங்குகின்றது.
1. வரலாற்றுக் கிரயம்
2. தேறல்
3. முன்னெச்சரிக்கை
4. முக்கியத்துவம்
5. மாறாத்தன்மை
(.....)

03. 2012 மார்ச் 31ல் உள்ளபடியான அமரசேன சகோதரர்களின் ஐந்தொகை, கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மீதிகளாக முறையே ரூபா 500,000 ஐயும், ரூபா 200,000 ஐயும் காட்டியது. மேலே கூறப்பட்ட கடன்பட்டோரையும் கடன்கொடுத்தோரையும் இனங்காண்பதற்கு எக்கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையாக அடிப்படையாக உள்ளது?
1. முக்கியத்துவம்
2. தோற்றத்திலும் கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு
3. முன்னெச்சரிக்கை
4. தொடர்ந்து செல்
5. அட்டுறு
(.....)

04. பின்வரும் கூற்றுக்களுள் எது / எவை செரியானது
(a) பண மதிப்பீடு குறிப்பிடுவது யாதெனில் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் விடயங்கள் ஆரம்ப காலத்தில் அவைகளின் வரலாற்றுக் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன.
(b) கணக்கீட்டு கொள்கைகளையும் அதன் மாற்றங்களையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவது பல்வேறு நிறுவனங்கள் தங்களுக்கிடையில் நிதிப்பெறுபேற்றை ஒப்பீடு செய்வதற்கு வசதியளிக்கின்றது.
(c) கொடுக்கல் வாங்கலொன்றின் சட்ட வடிவம் நிதிக்கூற்றுக்களில் எப்போதும் கட்டாயமாக பிரதிபலிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
1. (c) மாத்திரம்
2. (b) மாத்திரம்
3. (a), (b) மாத்திரம்
4. (a), (c) மாத்திரம்
5. எல்லாம்
(.....)

05. பின்வருவனவற்றுள் எது சொத்தொன்றின் இன்றியமையாத பண்பாகும்?
1. வரையறுக்கட்ட பயன்தரு ஆயுட்காலத்தை கொண்டிருத்தல்
2. உருவகத்தன்மை
3. எதிர்கால கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் நிகழ்வுகளிலும் இருந்து எழுதல்
4. எதிர்கால பொருளாதார நன்மைகளின் உள்ளடக்கம்
5. பொருளாதார நன்மைகள் மீதான கட்டுப்பாடு எப்போதும் சட்ட உரிமைத்துவத்திலிருந்து தோன்றுகின்றது
(.....)

06. நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும், நிகழ்வுகளையும் ஏனைய பகுதியினரின் சுதந்திரத்தை பேணும் வகையில் பதிவிடுவதற்கு அனுமதிக்கும் கணக்கீட்டு எண்ணக்கரு
1. தொடர்ந்து செல்
2. அலகுசார்
3. இணைத்தல்
4. முன்னெச்சரிக்கை
5. காலத்தன்மை
(.....)

07. 2011 டிசம்பர் 31 இலுள்ள நிறுவனமொன்றின் காசுப்புத்தக மீதி கீழே தரப்பட்டுள்ள 3 காரணங்களால் அதன் வங்கிக்கூற்று மீதியுடன் இணங்கவில்லை.
பக்கம் 2ஐ பார்க்க
(a) சமர்ப்பிக்கப்படாத காசோலை
(b) வசூலிக்கப்படாத காசோலை
(c) மறுக்கப்பட்ட காசோலை
2011 டிசம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்க கூற்றில் மேலே குறிப்பிடப்பட்டவற்றில் எந்த விடயம் / விடயங்கள் இடம்பெற முடியும்
1. (a) மாத்திரம்
2. (a), (b) ஆகியன
3. (a), (c) ஆகியன
4. (b), (c) ஆகியன
5. எல்லாம்
(.....)

- **கீழே தரப்பட்டுள்ள தகவல்களை பயன்படுத்தி 08ம், 09ம் வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு நிறுவனம் பொருள்களை ரூபா 25,000 இற்கு கடனுக்கு விற்பனை செய்தது. இது தொடர்பாக இவ்வாடிக்கையாளரிடமிருந்து ரூபா 22,500 பெறப்பட்டதுடன் மிகுதிப் பணத்தை பெறமுடியவில்லை.

08. மேலே கூறிய கொடுக்கல் வாங்கல்களை பதிவிடுவதற்கு தேவையான மூல ஆவணங்கள்
1. பட்டியல், பற்றுச்சீட்டு, வரவுத்தாள்
2. பட்டியல், பற்றுச்சீட்டு, நாட்குறிப்புக்கான பதிவு
3. பட்டியல், பற்றுச்சீட்டு, செலவுத்தாள்
4. பட்டியல், நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, வரவுத்தாள்
5. நாட்குறிப்புக்கான உறுதிச்சீட்டு, பற்றுச்சீட்டு, செலவுத்தாள்
(.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. மேலே கூறிய கொடுக்கல் வாங்கல்களை பதிவிடுவதற்கான முதன்மை பதிவேடுகள்
1. விற்பனை நாளேடு, காசேடு, விற்பனை திரும்பல் நாளேடு
2. விற்பனை நாளேடு, காசேடு, பொது நாட்குறிப்பு
3. விற்பனை நாளேடு, காசேடு
4. விற்பனை நாளேடு, பொது நாட்குறிப்பு
5. பொது நாட்குறிப்பு, காசேடு

(.....)

10. நிறுவனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட இயந்திரம் தொடர்பாக ஏற்பட்ட சில கிரயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
(a) இயந்திரத்தை நல்ல இயங்கு நிலையில் வைத்திருப்பதற்காக ஏற்பட்ட கிரயங்கள்
(b) இயந்திரத்தினை அமைக்க தீர்மானிக்கப்பட்ட இடத்திற்கு கொண்டு வருகை ஏற்பட்ட போக்குவரத்து நட்டஈட்டுக் கிரயங்கள்
(c) இயந்திரம் செயற்பாட்டு நிலையில் இருந்த வேளை உதிரிப்பாகங்களை மாற்றீடு செய்ததால் ஏற்பட்ட கிரயங்கள்
(d) இயந்திரத்தை பொருத்துவற்கு இதன் வேலைத்தளத்தை ஆயத்தப்படுத்தல் தொடர்பாக ஏற்பட்ட கிரயங்கள்

மேலே கூறப்பட்டவற்றுள் எக்கிரய விடயங்கள் இவ்வியந்திரக் கிரயமாக மூலதனமாக்கப்படல் வேண்டும்
1. (b), (c), (d) ஆகியன
2. (a), (b), (d) ஆகியன
3. (a), (c) ஆகியன
4. (b), (d) ஆகியன
5. (a), (c), (d) ஆகியன

(.....)

11. 2012 மார்ச் 31ல் சிறிதேவி வியாபாரத்தின் கடன்பட்போர் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதி ரூ. 13,600 ஆக காணப்பட்ட நிலையில் கடன்பட்டோர் பேரேடுகளின் தனிநபர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூ. 14,100 ஆக காணப்பட்டது.இவ்வேறுபாடு பிழையொன்றின் காரணமாக எழுந்ததாகும். பின்வருவனவற்றுள் எவ்விடயம் பின்வருவனவற்றுள் எவ்விடயம் இப்பிழையை மிகச்சிறப்பாக வெளிப்படுத்துகிறது?
1. அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ. 500 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் சரியாக பதிவிடப்பட்டும் கடனட்பட்டோர் பேரேடுகளில் பதிவிடப்படாமலும் காணப்பட்டது.
2. அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ. 500கடன்பட்டோர் பேரேட்டில் சரியாகப் பதியப்பட்டும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் பதிவடப்படாமலும் காணப்பட்டது.
3. கடன்பட்டோர் மீதி ரூ. 1000 கடன்பட்டோர் பட்டியலில் இரு முறை பதியப்பட்டிருந்தது.
4. கடன்பட்டோர் கணக்கொன்றின் செலவுமீதித் தொகை ரூ. 500 கடன்பட்டோர் பட்டியலில் ஒரு வரவு மீதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. ரூ. 1000 பெறுமதியான கடன் கொடுத்தோர் பேரேடுகளின் மீதியொன்று கடன்பட்டோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(.....)

12. இலங்கை கணக்கீட்ட நியமம் இல.18ன் படி ஆதனம், பொறி, உபகரணம் போன்ற சொத்தக்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு தொடர்பக பின்வரும் கூற்றுக்களில் எது சரியானதாகும்?
1. பெறுமான்தேய்வு என்பது சொத்தொன்றின் கிரயத்தை அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் ஒதுக்கடு செய்வதாகும்.
2 ஒரு காலத்திற்கான பெறுமானத்தேய்வு கட்டணமானது அச்சொத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்காலப் பொருளாதார நன்மைகளால் தீர்மானிக்கப்படும்
3. ஏனைய காரணங்கள் மாறாதிருக்கையில் சொத்தொன்றின் பயன் தரு ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றமானது காலமொன்றிற்கான பெநுமானத்தேய்வு கட்டணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தமாட்டாது
4. சொத்துகளைப்பழுதுபார்தும், பராமரித்தும் கொண்டுவரின் அச்சொத்தகளுக்கு பெறுமானத்தேய்விட வேண்டிய தேவை இல்லாததாக்குகின்றது.
5. சொத்துகளுக்ககுபெறுமானத் தேய்விடுவதற்கு பயன்படுத்தப்படும் முறையானது, அச்சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளை நுகரும் விதத்தினை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்.

(.....)

- **பின்வரும் தகவலைப் பயன்படுத்தி 13 தொடக்கம் 16 வரையான வினாக்களுக்கு விடை தருக.** பக்கம் 3ஐ பார்க்க

பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள்.

	A	B		A	B
மீ.வ 01.04.2011	60000	-	மீ.வ. 01.04.2011	-	50000
காசு	20000	-	வாடகை	-	60000
விற்பனைக் கிரயம்	-	35000	சம்பளம்	100000	120000
நடைமுறைக் கணக்கு வரவு வட்டி	5000	-	மூலதன வட்டி	40000	30000
மீ.செ. 31.03.2012	80000	25000	இலாபப்பங்கு	25000	25000
	165000	285000		165000	285000

பங்காளர்களின் மூலதனக்கணக்குகள்

	A	B		A	B
நன்மதிப்பு	30000	-	மீ.வ. 01.04.2011	1000000	750000
மீ.செ. 31.03.2012	970000	1030000	காசு	-	250000
			நன்மதிப்பு	-	30000
	1000000	1030000		1000000	1030000

13. 2011 ஏப்ரல் 01 பங்குடமையின் உரிமையாண்மைத் தொகை என்ன?
1. ரூ. 1,000,000
2. ரூ. 1,700,000
3. ரூ. 1,740,000
4. ரூ. 1,750,000
5. ரூ. 1,800,000

(.....)

14. 2012 மார்ச் 31ல் முடிவடைந்த வருடத்தில் பங்குடமையினால் உழைக்கப்பட்ட இலாபம் எவ்வளவு?
1. ரூ. 50,000
2. ரூ. 280,000
3. ரூ. 335,000
4. ரூ. 340,000
5. ரூ. 400,000

(.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. B யினுடைய நடைமுறைக்கணக்கில் வரவு வைக்கப்பட்ட ரூ.35,000 தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் எது இதனை மிகச்சிறப்பாக விபரிக்கிறது?
1. பொருட்களை கொள்வனவு செய்வதற்காக B இனால் பங்குடமையிலிருந்து எடுத்த காசு
2. B தனது சொந்த பொவனைக்காக சிறப்பு சந்தையொன்றில் வாங்கிய பொருட்களுக்கான பணத்தை பங்குடமை செலுத்தியமை
3. A. B யிற்கு பங்கடமையிலிருந்து எடுத்து அன்பளிப்பாக வழங்கிய பொருட்களின் கிரயம்
4. பங்குடமையிலிருந்து B எடுத்த பொருட்களின் கிரயம்
5. பங்குடமை சார்பாக B தனது சொந்தப்பணத்திலிருந்து மேற்கொண்ட செலவொன்று

(.....)

16. பங்காளர் Aயும் Bயும் தமது இலாபப்பகிர்வு விகித்ததை 1:1 என்ற நிலையிலிருந்து முறையேவருட முடிவில் 3:2 என மாற்றுவதற்கு பரஸ்பரம் உடன்படுவார்களாயின் பங்குடமையின் நன்மதிப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?
1. பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 300,000 என பங்காளர்கள் ஒத்துக் கொண்டனர்
2. பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 30,000 என பங்காளர்கள் ஒத்துக் கொண்டனர்
3. சொத்தொன்றாக பதிவிடப்பட்ட ரூ. 30,000 தொகையான பங்குடமையின் நன்மதிப்பு வருட முடிவில் புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டது.
4. பங்குடமையின் நன்மதிப்பை ரூ. 30,000 பெறுமதியில் ஒரு சொத்தாக இனங்காண்பதற்கு ஒத்துக்கொள்ளப்பட்டது.
5. பங்குடமையின் நன்மதிப்ப ரூ. 300,000 இனால் குறைவடைந்துள்ளது.

• **பின்வரும் தகவல்களைப்பயன்படுத்தி 16ஆம் 17ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

2012.06.01ல் கம்பனி ஒன்றின் ஆரம்ப சரக்கிருப்பாக ரூ. 5,000 (ஒவ்வொன்றும் ரூ. 25 படி 200 அலகுகள்) இருந்தது. இக் கம்பனியானது வழங்கப்படும் சரக்குகளுக்கு விலையிடுவதற்கு "முதல் வந்து முதல் செனறது" முறையினைப் பயன்படுத்துகின்றது 2012 யூன் மாதத்தில் பின்வரும் பெறுவனவுகளும் வழங்கள்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யூன் 05 பெறப்பட்டது	300 அலகுகள், ஒவ்வொன்றும் ரூ. 24 படி
யூன் 12 பெறப்பட்டது	200 அலகுகள், ஒவ்வொன்றும் ரூ. 28 படி
யூன் 30 வழங்கப்பட்டது	600 அலகுகள்

16. 2012 யூன் மாதத்திற்கான விற்பனை கிரயம்
1 ரூ. 12,800 2. ரூ. 15,000 3. ரூ. 15,300
4. ரூ. 27,800 5, ரூ. 28,100

(.....)

17. 2012 யூன் மாதத்தில் உள்ளவாறான சரக்கின் பெறுமதி
1. ரூ. 2400 2. ரூ. 2500 3. ரூ. 2800
4. ரூ. 17,500 5. ரூ. 17,800

(.....)

18. ஒரு வியாபாரத்தின் சொத்துக்களின் செயற்பாட்டு வினைத்திறனை அளவிடப்பயன்படுதும் மிகவும் பொருத்தமான விகிதம் பின்வருவனவற்றுள் எது?
1. தேறிய இலாப விகிதம் 2. சொத்துக்கள் புரள்வு விகிதம் 3. திரவ சோதனை விகிதம்
4. நடைமுறை விகிதம் 5. இணைப்பு விகிதம்

(.....)

19. பின்வரும் தகவல்களானது 201-03-31ல் உள்ளபடியான வரை. சங்கர் கம்பனியின் 3 வகையான சரக்கிருப்பின் மீதிகள் தொடர்பானவை

மூலப்பொருள் வகை	கிரயம் / அலகு (ரூ)	தேறியதேறக்கூடிய பெறுமதி / அலகு (ரூ)	மிகுதி (அலகுகள்)
X	20	30	1,000
Y	30	25	1,000
Z	50	40	1,000

சரக்குகளானது தொகுதி வாரியான அடிப்படையில் கிரயத்தினதும் தேறிய தேறக்கூடிய டிபறுமதியினதும் குறைவான தொகைகளில் மதிப்பிடப்படின் சங்கர் கம்பனியன்2012-03-31 ல் உள்ளபடியான ஐந்தொகையில் காணப்படும் மேற்படி சரக்குகளின் பெறுமதி எதுவாக இருக்கும்?
1. ரூ. 25,000 2. ரூ. 60,000 3. ரூ. 85,000
4. ரூ. 95,000 5. ரூ. 100,000

(.....)

• **20 தொடக்கம் 21 வரையான வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப்பயன்படுத்தி விடை தருக.**

(i) கம்பனியொன்றின் வருடாந்த அறிக்கையில் பிரசுரிக்கப்பட்ட ஐந்தொகையிலிருந்து பிரித்தெடுத்தவைகள்

	2012-03-31ல்உள்ளபடி (ரூ)	2011-03-31ல்உள்ளபடி (ரூ)
கூறப்பட்ட மூலதனம்	200,000,000	150,000,000
நிறுத்திவைத்த வருமானங்கள்	15,350,000	13,150,000
பொது ஒதுக்கம்	6,000,000	5,800,000
மொத்தப்பொறுப்புக்கள்	75,000,000	52,000,000

(ii) 201-03-31ல் முடிவடைந்த ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் ரூ. 350,000 ஆகும்
(iii) 2012-03-31ல் முடிவடைந்த ஆண்டிற்கானவருமான வரி ரூ. 800,000 ஆகும்

20. 2012-03-31ல் முடிவடைந்த ஆண்டிற.கான இலாபம்
1. ரூ. 1,400,000 2. ரூ. 1,950,000 3. ரூ. 2,200,000
4. ரூ. 2,400,000 5. ரூ. 2,750,000

(.....)

21. 2012-03-31ல் முடிவடைந்த ஆண்டில் உரிமையாண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு
1. ரூ. 2,200,000 2. ரூ. 2,750,000 3. ரூ. 50,000,000
4. ரூ. 52,200,000 5. ரூ. 52,400,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. 2012-03-31ல் உள்ளவாறான மொத்த சொத்துக்களின் பெறுமதி

1. ரூ. 146,350,000 2. ரூ. 200,000,000 3. ரூ. 221,350,000
4. ரூ. 275,000,000 5. ரூ. 296,350,000

(.....)

- 23ஆம் 24ஆம் வினாக்களுக்குரிய தகவல்கள்

கொடுக்கல் வாங்கல்	ஜனவரி		பெப்ரவரி	
	வங்கிக்கணக்கு	வங்கிக்கூற்று	வங்கிக்கணக்கு	வங்கிக்கூற்று
வைப்பு	92000	84000	105000	95000
செலுத்துகை	74000	60000	80000	75000
வங்கிக்கட்டணம்	-	2000	2000	2500
நேரடிவைப்பு	-	4000	4000	1800

23 ஜனவரி இறுதியில் உள்ள நிலைமையை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க

	வைப்புச் செய்யப்பட்டபோதும் வசூலாகாக் காசோலை	வழங்கப்பட்ட போதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை	ஜனவரி 31ல் வங்கிக்கூற்று மீதி
(1)	8000	14000	22000
(2)	8000	14000	26000
(3)	14000	8000	26000
(4)	14000	8000	22000
(5)	18000	24000	26000

(....)

24 பெப்ரவரி மாத இறுதியில் உள்ள நிலைமையை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க

	வைப்புச் செய்யப்பட்டபோதும் வசூலாகாக் காசோலை	வழங்கப்பட்ட போதும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலை	ஜனவரி 31ல் வங்கிக்கூற்று மீதி
(1)	10000	5000	45300
(2)	10000	5000	42700
(3)	18000	19000	42700
(4)	25000	20000	42700
(5)	18000	19000	26000

(....)

25 ஒரு வணிகம் பின்வரும் விபரங்களை உமக்குத் தந்துள்ளது

	2011.04.01	2012.03.31
அட்டுறு செலவு	5000	8000
முற்பணக்கொடுப்பனவு	11000	2000
கடன்பட்டோர்	20000	25000

காசு வங்கி மீதிகள் தவிர்ந்த வேறு நடைமுறைச் சொத்துக்களோ நடைமுறைப் பொறுப்புகளோ எதுவுமில்லை. வணிகம் அட்டுறு அடிப்படையில் கணித்த இலாபம் ரூபா 182000 காசு அடிப்படையில் இலாபம் என்ன?

(1) ரூபா 189000 இலாபம் (2) ரூபா 175000 இலாபம்
(3) ரூபா 171000 இலாபம் (4) ரூபா 183000 நட்டம்
(5) ரூபா 165000 இலாபம்

26 தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின்படி நிதிக் கூற்றுத் தயாரிக்கப்படவில்லையானால் அந்த நிதிக் கூற்று தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின்படி தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களை விட வேறுபடும் ஒரு நிலைமை

(1) காசு அடிப்படைக்குப் பதிலாக அட்டுறு அடிப்படையைப் பயன்படுத்தி நிதிக்கூற்றுத் தயாரித்தல்
(2) அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையைப் பயன்படுத்தி நிதிக்கூற்றுத் தயாரித்தல்
(3) கடன்பட்டோரிடமிருந்து காசு பெறப்பட்டால் மட்டும் வருமானம் இனங்காணப்படும்
(4) கடன்கொடுத்தோருக்கு காசு செலுத்தப்பட்டதெனில் மட்டும செலவு இனங்காளப்படும்
(5) எல்லாச் சொத்துக்களும் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுதல். (....)

27 பின்வருவன ஒரு வணிகத்தால் பின்பற்றப்படும் கணக்கீட்டு நடைமுறைகள் சிலவாகும்

A நடைமுறையாண்டில் கடன் விற்பனைமீது அடுத்தவருடத்தில் ஏற்படக்கூடிய தீர்க்கமுடியாக்கடனுக்கான ஏற்பாடு செய்தல்

B வணிகத்தில் இருப்பை நிறுவனம் தீர்மானித்த விலைக்கு மிகக் குறுங்காலத்துக்குள் விற்பனை செய்ய முடியும் ஆனாலும் இருப்பின் பெறுமதி வருமானமாக இனங்காண்பதில்லை

C சொத்துகளுக்குத் தேய்விடுவதற்கு முன்வருடத்தில பின்பற்றிய தேய்விடல் முறையை நடைமுறையாண்டிலும் பின்பற்றுதல்.

மேலுள்ள நடைமுறைகளுக்கமைவான கணக்கீட்டு எண்ணக்கருக்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

	A	B	C
(1)	பாதுகாப்பு	தேறல்	SLAS-18(LKAS-16)
(2)	அட்டுறு	தேறல்	பாதுகாப்பு
(3)	இணைத்தல்	அலகுசார்	தொடர்ந்தியங்குதல்
(4)	இணைத்தல்	தேறல்	கொள்கை மாறாமை
(5)	தேறல்	இணைத்தல்	கொள்கை மாறாமை

(....)

• **28லிருந்து 29 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

ஒரு வணிகத்தால் 2008.04.01ல் ரூபா 800000த்துக்கு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. அதன் எஞ்சிய பெறுமானம் ரூபா 300000 பயனுடைய ஆயுட்காலம் 10 எனத் தீர்மானிக்கப்பட்டது.2011.04.01ல் இதன் எஞ்சியபெறுமானம் ரூபா 200000எனவும் பயனுடைய ஆயுட்காலம் 8வருடங்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டது. 2012.04.01ல் இந்த இயந்திரம் ரூபா 700000ஆக மீள்மதிப்பிடப்பட்டது

28 2011.04.01ல் திரண்ட தேய்வின் பெறுமதி என்ன?

(1) ரூபா 150000 (2) ரூபா 240000
(3) ரூபா 200000 (4) ரூபா 320000
(5) ரூபா 50000

(....)

29 2012 மார்ச் 31ல் முடிவடைந்த வருடத்திற்கான தேய்வின் பெறுமதி என்ன?

(1) ரூபா 87500 (2) ரூபா50000
(3) ரூபா 100000 (4) ரூபா 750000
(5) ரூபா 56250

(....)

30. வரையறுத்த துறுலத்தா கம்பனி ஒன்று ரூபா 10 வீதமான சாதாரண பங்குகள் 50000த்தை வழங்கி ஒரே தடவையில் பணத்தைப் பெற்றுக்கொண்டது. மேலதிகமாக இன்னும் சாதாரண பங்குகள் 30000த்தை ஒன்று ரூபா 9 வீதமாக உரிமை வழங்கலாகவும் சாதாரண பங்குகள் 20000த்தை ஒன்று ரூபா 10 வீதமான ஒதுக்கம் மூலதனமாக்கப்பட்டது.

இந்தப்பங்குவழங்கல் எல்லாவற்றினாலும் கம்பனியின் தேறிய சொத்துக்கள் அதிகரித்த தொகை எவ்வளவு?

(1) ரூபா 970000 (2) ரூபா 770000
(3) ரூபா 800000 (4) ரூபா 100000
(5) ரூபா 700000

(....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Unit 05

கே.கே.அரஸ்
சிரேஷ்ட வணிக்கல்வி ஆசிரியர்
மட்டு. அம்பாறை

வணிக அமைப்பு

- உடைமை, நோக்கங்கள்என்பவற்றின் அடிப்படையில் வணிகங்களை தனித்தனியாக வகைப்படுத்துக.



Remarks:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் → / பண்புகள் ↓	தனியுடைமை	பங்குடைமை	கம்பனி	சட்டத்தாபனம்	திணைக்களம்	சட்டவை
உரிமை	தனி ஒருவர் 01	பங்காளர் 2 - 20 பேர்	பங்குதாரர் தனிக்கம்பனி 01 - 50 பொதுக் கம்பனி 01 - வரையறையுறாது	அரசு (கூடியது) 51% தனியார் நிறுவனம்	அரசு 100%	அங்கத்தவர் குறைந்தது 10 பேர் கூடியது வரையறை இல்லை
மூலதனம்	தனி ஒருவர்	பங்காளர் இட்டது	பங்குதாரர் இட்டது	பங்குதாரர் மூலதனம்	திறைசேரி நிதி	அங்கத்தவர் பங்குகள் 100/-
சட்டஆளுமை	இல்லை	இல்லை	உண்டு	உண்டு	இல்லை	உண்டு
பொறுப்பு வரையறை	இல்லை	இல்லை	உண்டு	பொதுவாக வரையறுக்கப்படாதது	இல்லை	உண்டு
முகாமை	உரிமையாளர்	பங்காளர்	பணிப்பாளர் சபை	பணிப்பாளர் சபை	அரச ஊழியர்	பணிப்பாளர் சபை
இலாபநட்ட பகிர்வு	உரிமையாளர்	பங்காளர் களுக்கு	பங்குதாரருக்கு பகிரப்படும்	அரச திறை சேரிக்கு / பங்குதாரருக்கு	திறைசேரி நிதிக்கு	அங்கத்தவர் கொடுக்கல் வாங்கல் அளவுக்குஏற்ப
கணக்குவைப்பு கணக்காய்வு	அவசியம் இல்லை	அவசியம் இல்லை	அவசியம்	அவசியம்	அவசியம்	அவசியம்
பதிவு தொடர்பான சட்டம்	வியாபார பெயர்பதிவுச் சட்டம்	வியாபார பெயர்பதிவுச் சட்டம்	கம்பனிகள் சட்டம்	பாராளுமன்ற பொதுச்சட்டம் விசேட சட்டம்	பாராளுமன்ற இணைவு பொது நிருவாக சட்டம் அரச	கூட்டுறவுச் சட்டம்
பதியும் இடம்	பிரதேச செயலம்	பிரதேச செயலகம்	கம்பனி பதிவாளர் திணைக்களம்	அரச வர்த்த மானியில் வெளியிடல்	வர்த்த மானியில் வெளியிடல்	கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
பதிவு	அவசியம் இல்லை	அவசியம் இல்லை	அவசியம்	அவசியம்	அவசியம்	அவசியம்
தொடர்ந்திருக்கும் நிலை	இல்லை	இல்லை	நிலையானது	நிலையானது	நிலையானது	நிலையானது

தனியுடைமை, பங்குடைமை, வரையறுத்த தனியார் கம்பனி, வரையறுத்த பொதுக்கம்பனி, கூட்டுறவுச் சங்கம் என்பவற்றைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் ஒப்பீட்டு வேறுபடுத்திக் காட்டுக.

	உடமை	தொடர்ந்திருக்கும் நிலை	பொறுப்பு	சட்ட ஆளுமை
தனியுடைமை				
பங்குடைமை				
வறுயறுத்த தனியார் கம்பனி				
வரையறுத்த பொதுக்கம்பனி				
கூட்டுறவு				

சட்ட ஆளுமை	நட்டப் பொறுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் துறை வணிகங்கள்

1) இலாபநோக்குடன் தனியொருவர் அல்லது தனிநபர் குழுவின் உரிமையாக நடைபெறும் முயற்சி _____ எனப்படும்.

2) இலங்கையில் பெருமளவு வணிகம் _____ துறையின் முயற்சியாகவே நடைபெறுகின்றன.

3) பின்வரும் நிறுவன வடிவங்கள் ஒவ்வொன்றையும் தாபிப்பதற்குத் தேவைப்படும் பங்குதாரர் (பங்குரிமையாளர்) அல்லது பங்காளர் அல்லது உறுப்பினர்களின் இழிந்த எண்ணிக்கை யாது?

அ) வரையறுத்த பொதுக் கம்பனி .....
ஆ) வரையறுத்த தனியார் கம்பனி .....
இ) பங்குடமை .....
ஈ) தொழிற்சங்கம் .....
உ) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் .....

4) தனியார் துறை, பொதுத்துறை, என இரு குழுக்களாக வியாபார நிறுவனங்களை வகைப் படுத்துவதற்கான பிரதான அடிப்படை.

1. நோக்கம்
2. உடமை
3. பங்குபற்றுவோரின் எண்ணிக்கை.
4. அரசாங்க கட்டுப்பாடு
5. சட்டத் தேவைகள். [.....]

5) தனியார் துறை வியாபார நிறுவன அமைப்பின் மிகப் பொருத்தமான வரைவிலக்கணத்தைத் தெரிவு செய்க.

1. ஒருவரால் உடமையாக்கப்பட்டு முகாமை செய்யப்படும் வியாபாரம் ஆகும்.
2. இரண்டு அல்லது அதற்கு மேறி பட்டவர்களால் உடமையாக்கப்பட்டு முகாமை செய்யப்படும் வியாபாரம் ஆகும்.
3. அரசாங்கத்தின் செல்வாக்குக்கு உட்படாத வியாபாரம் ஆகும்.
4. தனிப்பட்டவர்களால் அல்லது தனிப்பட்டவர்களின் குழுவால் உடமையாக்கப்பட்ட வியாபாரம் ஆகும்.
5. மக்கள் மயப்படுத்தப்பட்ட வியாபாரம் ஆகும். [.....]

6) வரையறுக்கப்பட்ட பொறுப்பு என்பதன் பொருள்.

1. எல்லாப் பங்குதாரரும், வியாபாரக் கடன்களுக்கு சமமான பொறுப்பு உடையவர்.
2. ஒரு வியாபாரத்தின் ஏற்படக்கூடிய கடனின் அளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.
3. சொந்தக்காரரின் பொறுப்பு அவரது முதலீட்டின் அளவுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.
4. சொந்நக்காரரின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுடள்ளது.
5. வியாபார நடவடிக்கைகளில் சொந்தக்காரரின் ஈடுபாடு வரையறுக்கப்பட்டுள்ளது. [.....]

7) வரையறுக்கப்படாத பொறுப்பு எனப்படுவது.

1. வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதிக்கு உரிமையாளரே பொறுப்பாகும்.
2. வியாபாரத்தின் உரிமைத்துவத்திற்கு வரையறையில்லை
3. வியாபாரத்தின் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு உரிமையாளர் தனது சொந்தச் சொத்துக்களையும் இழக்க நேரிடும்.
4. பங்குதாரர்கள் அவர்களுக்குச் சொந்தமான பங்குகளின் மொத்தப் பெறுமதிக்கு மட்டுமே பொறுப்புடையவர்களாவர்
5. பங்குதாரர்கள் அவர்கள் வாங்குவதற்கு ஒத்துக் கொண்ட பங்குகளின் மொத்தத் தொகைக்கு மட்டுமே பொறுப்புடையவர்களாவர். [.....]

8) ஒரு வியாபாரத்தின் சட்ட ரீதியான ஆள் என்பதன் பொருள்.?

1. சொந்தக் காரரின் பொறுப்பு வரையறுக்கப் பட்டுள்ளது என்பதாகும்.
2. வியாபரத்தின் நடவடிக்கைகள் சொந்தக்காரரின் பெயரில நடாத்தப்பட முடியும் என்பதாகும்.
3. ஒரு குறித்த சட்டத்தின் கீழ் வியாபாரத்தைப் பதிவு செய்வதென்பதாகும்.
4. அந்த வியாபாரத்தின் பெயராலே வியாபாரத்தின் நடவடிக்கைகள் நடத்தப்பட முடியும் என்பதாகும்.
5. தொடர்ந்து இருக்கக்கூடிய தன்மையாகும். [.....]

9) புதிய வியாபாரமொன்றை ஆரம்பிக்கும் போது அது தொடர்பாக வியாபார ஒழுங்கமைப்பு வகையொன்றைத் தெரிவதற்கு கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளையுள் ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1. வியாபாரத்தின் இயல்பு, தேவைப்படும் மூலதனம், அபாயத்தின் இயல்பு.
2. சந்தைப்பங்கு, சட்டத் தேவைகள், வியாபார அபாயம், தேவைப்படும் மூலதனத்தின் அளவு.
3. வியாபாரத்தின் இயல்பு, தேவைப்படும் மூலதனத்தின் இயல்பு, சட்டத்தேவைகள், சந்தைப்பங்கு, அபாயத்தின் அளவு
4. தேவைப்படும் மூலதனம், சட்டத்தேவைகள், சந்தைப்பங்கு, அபாயத்தின் இயல்பு
5. அமைவிடம், தேவைப்படும் மூலதனம், நுகர்வோர் திருப்தி, வியாபாரத்தின் இயல்பு. [.....]

10) வியாபாரங்கள் வெற்றிகரமானதாகக் காணப்படுவது பெரும்பாலும் அவை.

1. உயர்ந்த இலாபத்தை உழைக்கும் போது
2. உயர்ந்த தரமான பொருட்களை வழங்கும் போது
3. மிகச் சிறந்த ஊழியர்களை சம்பளத்திற்கு அமர்த்தும் போது.
4. சமூகத்திற்கு சில பங்களிப்புக்களை மேற்கொள்ளும் போது.
5. மக்கள் விரும்புகின்ற பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்யும் போது [.....]

– . இலங்கையில் பங்குடமைகளை ஆளும் அதிகாரச் சட்டங்கள் பல உள்ளன. அவற்றுள் மூன்றைக் குறிப்பிட்டு, பங்குடமைகள் மீது அவை ஒவ்வொன்றும் ஏற்படுத்தும் விளைவுகளை தனித்தனியே விளக்குக.

_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியுடைமை வணிகம்

01. தனியுடைமை வணிகம் (Sole Proprietor)எனப்படுவது யாது அது இலங்கையில் மிகப் பொருத்தமான ஒழுங்கமைப்பு முறையாக காணப்படுவது ஏன்?

- தனியொருவரால் மூலதனமிடப்பட்டு இலாபங்களை தனியொருவரால் அனுபவிக்கும் வியாபார நடவடிக்கை தனியுடைமை வணிகம் எனப்படும்.

பொதுவான ஒழுங்கமைப்பு

- ஆரம்பித்தல் இலகு
- இலாபத்தை தனியொருவர் அனுபவிக்கலாம்
- குறைந்த மூலதனத்துடன் ஆரம்பிக்கலாம்
- தீர்மானம் எடுத்தல் இலகு
- சட்டக் கட்டுப்பாடுகள் குறைவு
- சொந்த அர்ப்பணிப்பின் மூலம் வியாபாரத்தை முன்னேற்றலாம்
- பதிவு அவசியமில்லை.

02. தனியாள் உடமை வியாபாரங்கள் பொதுவாக உறுதியற்றவையாகும். அவ்வாறான ஓர் சூழ் நிலைக்கான காரணங்கள் யாவை?

_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____

03. பங்குடமையென்றுடன் ஒப்பிடும் பொழுது தனியுடமை வணிகத்தின் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் தனித்தனியே குறிப்பிடுக

அனுகூலம்

_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____

பிரதி கூலம்

_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____
_____

1) தனியுடமை வணிகத்தை தனது பெயரிலன்றி வேறுபெயரில் நடத்துவதானால் 1918ம் ஆண்டு - 06ம் இலக்க _____ சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்

2). தனி வியாபாரி வியாபாரமொன்றினை நிறுவுவதனால் பெறக்கூடிய பிரதான நன்மையாவது?

1. முடிவுகளை விரைவாக எடுப்பதன் மூலம் வியாபாரத்தினை இலாபமடையச் செய்ய முடியும்.
2. சிறிய மூலதனத்தோடு ஆரம்பித்து விருத்தி செய்ய முடியும்.
3. கடும் சட்டங்களின்றி வியாபாரத்தை நடத்தி செல்லும் திறமை
4. தனியார் தொடர்புகளினால் சந்தையை விரிவுபடுத்த முடியும்.
5. தனியார் அர்ப்பணிப்பின் மூலம் வியாபாரத்தினை அபிவிருத்தி செய்ய முடியும்.

[.....]

3) தனி உடமைத்துவ பண்புகள் பற்றிய மிகச் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

1. எப்பொழுதுமே சிறிய அளவு வியாபார முயற்சியில் ஈடுபடல்.
2. வியாபாரப் பதிவு கட்டாயமானது.
3. சட்டத் தடைகள் இல்லை
4. உரிமையாளரின் பொறுப்பனது பயன்படுத்தப்பட்ட மூலதனத்திற்கு வரையறுக்கப்பட்டிருகின்றது.
5. வியாபாரத்தின் பெயரானது சட்டத்தன்மையைக் கொண்டிருப்பதில்லை.

[.....]

4) தனி உரிமைத்துவத்தில் காணப்படும் பிரதான பிரதிகூலம் எது.

1. தீர்மானம் எடுத்தலுக்கான சுதந்திரம்.
2. ஒருவரே உரிமையாளராகவும், தொழில் முகாமையாளராகவும் காணப்படல்
3. வியாபார இலக்குகளை அடைய தனிப்பட்ட முறையில் பாடுபடல்
4. ஒரு சிறிய மூலதனத்துடன் வியாபாரத்தை ஆரம்பிக்கக் கூடியதாக இருத்தல்
5. வியாபாரத்தின் முன்னேற்றம் பிரதானமாக உரிமையாளரின் பலத்தில் தங்கியுள்ளது.

[.....]

5) இலங்கையில் அதிக எண்ணிக்கையில் காணப்படும் நிறுவன வகை.

1. தனியுடமை.
2. கம்பனி
3. திணைக்களம்
4. கூட்டுமுயற்சி
5. பங்குடமை.

[.....]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குடைமை வணிகம்

1) இலாப நோக்குடன் பொதுவான முயற்சி ஒன்றில் ஈடுபடுகின்ற நபர்களுக்கிடையிலான உறவு _____ எனப்படும் (1890ம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டம்)

2) கனக்காளருடைய பங்குடமை, வழக்கறிஞர் பங்குடமை, பங்குப்பரிமாற்று உறுப்பினர் பங்குடமை போன்றவற்றில் _____ இற்கு மேற்பட்டவர்களை பங்காளர்களாக சேர்த்துக்கொள்ள முடியும். வங்கிப் பங்குடமையானால் பங்காளர் எண்ணிக்கை _____ மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

3) பங்குடமையில் சேர்ந்துள்ளவர்கள் _____ எனவும் பங்காளர்களின் சேர்க்கை _____ _____ வணிகம் எனவும் அழைக்கப்படும்.

4) பங்குடமை ஆரம்பிக்க எண்ணம்கொண்டவர்கள் தயாரித்துக்கொள்ளும் சட்ட ரீதியான ஆவணம் _____ எனப்படும்.

5) சட்ட பூர்வமான ஒப்பந்தம் இல்லாவிடில் பங்காளர் உரிமைகளும் கடமைகளும் _____ சட்ட விதிகளின் படி நிச்சயிக்கப்படும்

6) வரையறுத்த பங்குடமையானாலும் ஒரு பங்காளராவது _____ பங்காளராக இருத்தல் வேண்டும்.

11) பங்குடமை பங்காளர்களுக்கிடையிலான உறவில் ஏற்படும் மாற்றம் _____ எனப்படும்.

12) செயற்பட்டு வந்த பங்குடமை இருந்த வணிகத்தை முடிவுக்கு கொண்டுவருதல் அல்லது மூடிவிடுதல் _____ ஆகும்.

13) பங்குடைமையின் முகாமைக் கருமங்களில் ஊக்கமாகச் செயற்படும் பங்காளர் _____ ஆவார்.

14) தனது உயர் தொழில் ரீதியாக அல்லது வணிகராக அடைந்திருக்கும் வெற்றி, நன்மதிப்பு என்பவற்றை பங்குடமைக்காக விட்டிருப்பவர்_____ஆவர்.

15) ரூபா 1000 இற்கு மேல் மூலதனத்தினை ஈடுபடுத்தும் பங்குடைமை ஒன்றை தாபிப்பதற்கு எழுத்து வடிவிலான உடன்படிக்கை தேவையென விதித்த கட்டளைச் சட்டம் எது?

_____

16. பங்குடமை உறுதியொன்றை வைத்திருப்பதால் கிடைக்கும் முக்கிய நன்மை
    1. இலாப நட்டங்களை பகிர்வது தொடர்பாக பிரச்சினைகள் எழுவதில்லை
    2. நாளாந்த வியாபார நடவடிக்கைகளில் ஒவ்வொரு பங்காளரினதும் கடமைப்பங்கினைக் குறைக்கும்.
    3. பங்காளரிடையே கருத்து வேறுபாடு ஏற்படும் சந்தர்ப்பத்தினைக் குறைக்கும்
    4. ஒவ்வொரு பங்காளரினதும் உரிமைகளையும் கடமைகளையும் குறித்து காட்டும்
    5. பங்குடமையின் குறிக்கோள்களை குறித்து காட்டும்.
    [.....]

17. கண்ணியத்தொழில் வியாபாரங்களின் மத்தியில் பங்குடமை பிரபல்யம் பெறுவதற்கான பிரதான காரணம்.
    1. வித்தியாசமான தேர்ச்சிகளோடு கூடிய ஆட்களைச் சேர்க்கக்கூடிய ஆற்றல்
    2. இலாபங்களையும் , நட்டங்களையும் பகிரக்கூடிய ஆற்றல்
    3. குறைவான சட்ட நடைமுறைகள்.
    4. பெரிய அளவு மூலதனம் தேவை இல்லை
    5. வியாபார இடரை இழிவுபடுத்தக்கூடிய ஆற்றல்.
    [.....]

18. (உயர்) தொழில்ரீதியான வணிகம் தொடர்பில் பெரும்பாலும் கைக்கொள்ளப்படும் அமைப்பு முறையாக உள்ளது.
    1. தனியுரிமை வணிகங்கள்.
    2. பங்குடமை வணிகங்கள்
    3. வரையறுத்த தனியார் கம்பனிகள்
    4. மக்கள் கம்பனிகள்
    5. வரையறுத்த பொதுக்கம்பனிகள்.
    [.....]

19. பங்குடமை தொடர்பாக மிகச் சரியான கூற்று எது.
    1. பங்குடமைக் கட்டளைச் சட்டம் 1890 இன் கீழ் பங்குடமைப் பதிவு செய்தல் கட்டாயமானது.
    2. ஒரு வரையறுக்கப்பட்ட பங்குடமையில உள்ள எல்லா பங்காளர்களினதும் பொறுப்பானது வரையறுக் கப்பட்டது.
    3. பெயரளவுப் பங்காளரின் பொறுப்பு வரையறுக் கப்படாதது.
    4. இலாபம் எப்போதும் சமமாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்.
    5. பங்குடமை ஒப்பந்தமானது எப்போதும் எழுத்தில் இருத்தல் வேண்டும்.
    [.....]

20. வியாபாரத்தின் இலாபம் மாற்றம் அடைவதற்கு ஏற்ப தனது மூலதனத்திற்கான வட்டியைப் பெறுபவர்.
    1. அமைதிப் பங்காளர்
    2. இரகசியப் பங்காளர்.
    3. உறங்கும் பங்காளர்.
    4. பெயரளவுப் பங்காளர்
    5. போலிப் பங்காளர் [.....]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1). பங்குடமை ஒன்றின் வாழ்வித்கு இன்றியமையாத நிபந்தனைகள் யாவை

2) பங்குடமை ஒப்பந்தமென்றால் யாது? அவ்வகை ஒப்பந்த மொன்றிலே அடங்கும் 6 பிரதான நிபந்தனைளைக் கூறுக?

பங்குடமை ஒன்றினை செயற்படுத்துவதற்குத் தேவையான விதிகளையும் நிபந்தனைகளையும் உள்ளடக்கியதாக பங்காளர்களிடையேஎழுத்துருவில் ஏற்படுத்தப் படும் உடன்படிக்கை பங்குடமை ஒப்பந்தம் எனப்படும்.

உள்ளடக்கம் :

- வணிகப் பெயர்
- பங்காளர் பெயரும், விலாசமும்
- வணிகத்தின் தன்மை
- பங்குடமையின் கால எல்லை
- ஒவ்வொரு பங்காளரும் மூலதனத்திற்கு பங்களிக்கும் அளவு
- பங்காளர் பற்றுக்கள்
- மூலதனத்திற்கும் பற்றுக்களுக்கும் உரிய வட்டி
- பங்காளர் உரிமை
- பங்காளர் கடமை
- பங்காளர் சம்பளம்
- பங்காளருக்கிடையில் இலாப நட்டம் பகிரும் விகிதம்
- புதிய பங்காளரைச் சேர்க்கும் போது பங்காளரை விலக்கும் போதும் பங்காளர் இறப்பின் போதும் நன்மதிப்புக்கணக்கு ஆரம்பிக்கும் அடிப்பட
- கணக்கு புத்தகம், ஐந்தொகை தயாரித்தல்
- பங்குடமை கலைக்கப்படும் போது கொடுப்பனவுகளை த் தீர்மானிக்கும் முறை
- பங்காளர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு தோன்றினால் அதனை தீர்த்துக்கொள்ளும் முறை

3) பங்காளர் கடமைகள் ஆறினைக் குறிப்பிடுக.

- நல்லெண்ணத்துடன் அவதானித்தல்(to observe good faith)
- வஞ்சக செயற்பினால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்வதற்கு
- உளக்கத்துடன் வணிகக்கருமங்களில் ஈடுபடல்(to attend diligenty)
- கொடுப்பனவுகள் இன்றி பங்குடமைக் கருமங்களில் பங்கு கொள்ள
- நட்டத்தில் பங்கு கொள்ள
- வேண்டுமென்றே செய்த பிழைகளுக்கு இழப்பீடு செய்ய.
- தனிப்பட்ட இலாபம் பெறாதிருக்க (to Account for personal Profits)

4) தனியுடமை வணிகத்துடன் ஒப்பிடும் பொழுது பங்குடமை ஒன்றின் மூன்று அனுகூலங்களையும், மூன்று பிரதி கூலங்களையும் குறிப்பிடுக.

அனுகூலம் :

பிரதிகூலம் :

5) மனோ, தயா ஆகியோர் பங்குடமையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களிடையே எழுத்துவடிவிலான பங்குடமை உடன்படிக்கை ஒன்று காணப்படுகின்றது. அவர்கள் இருவரும் உடன்பட்டு நிரோல் என்பவரைத் தமது பங்குடமையில் சேர்த்துக் கொண்டனர். இச்சூழ்நிலையில் பங்குடமையில் ஏற்படக்கூடிய மாற்றங்களை விளக்குக.

உறங்கும் பங்காளர்

6) பங்குடமை ஒன்றுக்கும் தனியுடமை ஒன்றுக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் தனித்தனியாக விளக்குக.

– ஒற்றுமைகள்

- உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
- பதிவு செய்தல் கட்டாயமில்லை
- நெடுவாழ்வுத்தன்மை அற்றது
- தனியார் உடமை
- சட்ட ஆளுமை அற்றது

தனியுடமை	பங்குடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) செல்வி கேசிக்கா மிக அண்மையில் சிகை அலங்காரம் தொடர்பாக பயிற்சி நெறி ஒன்றை நிறைவு செய்துள்ளார். அவர் சொந்தமாக ஒரு சலூனை ஆரம்பிக்க விரும்புகிறார். இவர் வணிக உலகம் பற்றிப் போதிய அறிவைக் கொண்டிராததுடன் முதலீடு செய்வதற்குப் போதிய பணத்தையும் கொண்டிருக்கவில்லை. இவரின் நண்பியான தனு, அனுபவம் வாய்ந்த கணக்காளராக இருப்பதுடன் இவ்வணிகத்தில் முதலீடு செய்வதற்குப் போதியளவு பணத்தையும் கொண்டுள்ளார். கேசிக்கா தனியே தனுவுடன் பங்குடமை ஒன்றை ஆரம்பிக்க எண்ணுகிறார். தனுவுடன் ஒரு பங்குடமையை உருவாக்குமிடத்து கேசிக்கா அடைந்து கொள்ளக் கூடிய அனுகூலங்களும், பிரதிகூலங்களும் யாவை?

அனுகூலங்கள்	பிரதிகூலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் முதன் முறையாக
உயர்தர மாணவர்களுக்காக
முழுமையான வழிகாட்டல்
இணையத்தளம் உதயமாகிறது...



www.arivuththedal.com

- மூத்த ஆசிரியர்களின் ஆக்கங்களை பெற்றுக்கொள்ள.
- உங்கள் துறைபற்றி தெரிந்துக்கொள்ள.
- நடைமுறை விடயங்களில் தெளிவினை பெற்றுக்கொள்ள.

இணையத்தினூடான கற்கையில்
இன்றே இணையுங்கள்....

நேரலையில் பல்தேர்வு வினாக்களை
பயிற்சி செய்வதற்கான வாய்ப்பு
டிசம்பர் மாதம் முதல் உங்களுக்கு கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ECON BITZ

V. பரமேஸ்வரன்
B.B.A (Hons), MA (Econ)
சிரேஷ்ட்ட பொருளியல் ஆசிரியர்
சென். ஜோசப் கல்லூரி கொழும்பு.

01. பொருளியலில் வரும் சிந்தனைமுறை அல்லது சிறப்பு எடுகோள் தனியாட்கள் தேர்வு செய்யும்போது சுய நன்மையின் பொருட்டு தர்க்கரீதியில் செயற்படுகின்றனர். (rational self - interest) மேலே உள்ள கூற்றில் 'தர்க்கரீதியில் செயற்படுதல்' என்பதன் கருத்து.
1. பல்வேறு மாற்றுத் தெரிவுகளில் ஒன்றைத் தெரிவு செய்யும்போது தனக்கு அதிகூடிய திருப்தியைத் தரும் தெரிவினை மேற்கொள்வதாகும்.
2. பல்வேறு மாற்றுத் தெரிவுகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்வதாகும்.
3. அதிகளவு அத்தியாவசியப்பொருட்களைத் தெரிவு செய்வதாகும்.
4. அதிகளவு ஆடம்பரப் பொருட்களைத்தெரிவு செய்வதாகும்.
5. உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளை நீதியான முறையில் பங்கிட்டு வழங்குவதாகும்.

02. 'தீர்மானம் எடுப்பதற்குரிய பொருளாதார சிந்தனை' என்பது பின்வருவனவற்றில் எதனைத் குறித்து நிற்கும்?
1. எல்லை நலனைவிட எல்லைச்செலவு அதிகமாக இருக்கும் தெரிவினை மேற்கொள்ளல்.
2. எல்லை நலனைவிட எல்லைச்செலவு குறைவாக இருக்கும் தெரிவினை மேற்கொள்ளல்.
3. எல்லை நலனும் எல்லைச்செலவும் சமனாக இருக்கும் தெரிவினை மேற்கொள்ளல்.
4. மொத்த நலனைவிட மொத்த செலவு உயர்வாகவிருக்கும் தெரிவினை மேற்கொள்ளல்.
5. எல்லை நலனைவிட மொத்த செலவு குறைவாகவிருக்கும் தெரிவினை மேற்கொள்ளல்.

03. அருமை என்ற பிரச்சனையை விளக்காத கூற்று பின்வருவனவற்றுள் எது?
1. பொருளாதாரத்தில் போதுமானளவு வளங்கள் இல்லாததனால் தேவையான அளவு பண்டங்களை உற்பத்தி செய்ய முடியாமலிருத்தல்.
2. சந்தையில் பண்டங்களின் பற்றாக்குறை காரணமாக தேவையானளவு பண்டங்களை காசுக்கு கொள்வனவு செய்ய முடியாதிருத்தல்.
3. எல்லா நபர்களுக்கும் பொருளாதார செயற்பாடுகளுக்கான நாளொன்றுக்கு கிடைத்துள்ள உச்ச காலம் 24 மணி நேரமாகும்.
4. எந்த ஒரு பொருளாதாரத்திலும் உற்பத்தி இயலளவானது ஓர் எல்லைக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
5. சில பொருளாதாரங்கள் சர்வதேச பரிமாற்றத்தின் மூலம் சாத்திய வளையிக்கு அப்பால் உள்ள புள்ளியில் நகர்தல்.

04. மனித வளம் (Human resources)
1. நிலமும் மூலதனமும்
2. நிலமும் உழைப்பும்
3. மூலதனமும் முயற்சியாண்மையும்
4. உழைப்பும் மூலதனமும்
5. உழைப்பும் முயற்சியாண்மையும்

05. பின்வருவனவற்றுள் உற்பத்திக் காரணியல்லாதது.
1. நிலம் 2. தொழில் முனைவு 3. பணம் 4. ஊழியம் 5. முதல்

06. பொருளாதாரத்தின் உற்பத்திப்புள்ளியானது B புள்ளியிலிருந்து C புள்ளிக்கு மாறும் பொழுது ஏற்படும் எல்லை அமையச் செலவின் (MOC) பெறுமதி யாது?



1. 30 அலகு y
2. 0.6 அலகு y
3. 10 அலகு y
4. 0.2 அலகு y
5. 40 அலகு y

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. ஒவ்வொரு சமூகத்திலும் அருமைத்தன்மை இருப்பதற்குக் காரணம்
1. வரையறுக்கப்பட்ட விருப்பங்களும் கைவிடப்பட்ட வளங்களும்
2. வரையறுக்கப்பட்ட வளங்களும் வரையறுக்கப்படாத உற்பத்தி ஆற்றலும்.
3. வரையறுக்கப்பட்ட வளங்களும் வரையறுக்கப்படாத விருப்பங்களும்.
4. வரையறுக்கப்பட்ட உற்பத்தி ஆற்றலும் வரையறுக்கப்படாத பொருளாதார வளங்களின் அளவும்.
5. வரையறுக்கப்படாத வளங்களும் வரையறுக்கபட்ட விருப்பங்களும்.

08. வளத்திரட்சி என்பது
1. உற்பத்தி வளங்களின் கிடைப்பனவு அளவினை குறிக்கும்
2. உற்பத்தி வளங்களின் வினைத்திறனை குறிக்கும்
3. இயற்கை வளங்களின் கிடைப்பனவு அளவினை மட்டும் குறிக்கும்
4. மூலதன இருப்பினை மட்டும் குறிக்கும்
5. மனித மூலதனத்தை குறிக்கும்

09. பூச்சிய அமையச்செலவு காணப்படுவது
1. இலவசப் பண்டங்களுக்கு
2. ஒரு பயன்பாட்டை மட்டுமுடைய வளங்களுக்கு
3. பொது வேலையின்மையின் போது
4. மேற்கூறப்பட்ட எல்லாம்.
5. மேற்கூறப்பட்ட எவையுமில்லை

10. ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி இயல்தகவு வளையி பின்வருமாறு தரப்படுகின்றது



இப்பொருளாதாரத்தின் உற்பத்திப் புள்ளியின் எத்தகைய நகர்வு அமையச்செலவினை ஏற்படுத்தும்?
1. U விலிருந்து C
2. U விலிருந்து A
3. U விலிருந்து B
4. C விலிருந்து U
5. A விலிருந்து U

11. உற்பத்தி சாத்திய வரம்பு ஒன்றின் பிரயோக ரீதியான வடிவமும் அதற்கான பிரதான காரணமும் பின்வருவனவற்றில் எதுவாக இருக்கும்?
1. வெளிநோக்கி குழிந்தது - குறையுமெல்லை விளைதிறன்
2. வெளிநோக்கி குவிந்தது - குறையுமெல்லை விளைதிறன்
3. வெளிநோக்கி குவிந்தது - வளங்களின் ஓரினமற்ற தன்மை
4. வெளிநோக்கி குழிந்தது - வளங்களின் ஓரினமற்ற தன்மை
5. வெளிநோக்கி குவிந்தது - அதிகரிக்கும் எல்லை விளைதிறன்

12. ஒரு நாட்டின் உற்பத்தி சாத்திய வளையியின் அட்டவணை பின்வருமாறு தரப்படுகின்றது.

நெல்	தேயிலை
0	140
10	80
20	40
30	15
40	0

அட்டவணையின்படி நெல் உற்பத்திக்கான அமையச்செலவு குறிப்பது
1. அதிகரிக்கும் அமையச்செலவு
2. குறையும் அமையச்செலவு
3. மாறா அமையச்செலவு
4. கலப்பு அமையச்செலவு
5. மேற்கூறப்பட்ட எவையுமன்று

13. ஒரு பொருளாதாரத்தின் அரிசி, தேயிலை ஆகியவற்றின் உற்பத்தி சாத்தியங்களை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

தேயிலை (கிலோ) மில்லியன்	அரிசி (கிலோ) மில்லியன்
0	100
25	90
50	70
75	40
100	0

இப்பொருளாதாரமானது தற்பொழுது 50 மில்லியன் கிலோகிராம் தேயிலையையும் 60 மில்லியன் கிலோகிராம் அரிசியையும் உற்பத்தி செய்கின்றது எனின் இந்நிலமை குறிப்பது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1. இது ஒரு வினைதிறனான உற்பத்தி மட்டமாகும்.
2. 20 கிலோகிராம் அரிசியை மேலதிகமாக உற்பத்தி செய்து வினைத்திறனான உற்பத்தி மட்ட.த்தை அடையலாம்.
3. அரிசியில் குறைந்த அளவையும் தேயிலையில் கூடிய அளவையும் உற்பத்தி செய்து வினைத்திறன் மட்டத்தை அடையலாம்.
4. அரிசியில் 10 கிலோகிராமை மேலதிகமாக உற்பத்தி செய்து வினைத்திறனான உற்பத்தி மட்டத்தை அடையலாம்.
5. தேயிலையில் 25 கிலோகிராமை மேலதிகமாக உற்பத்தி செய்து வினைத்திறனான உற்பத்தி மட்டத்தை அடையலாம்.

14. சந்தைப் பொருளாதாரமொன்றில் விலை முறைமையின் தொழிற்பாடுகளில் ஒன்றாக அமையாதது எது?
1. நுகர்வோருக்கு சைகை செய்தல்.
2. வளங்களை ஒதுக்கீடு செய்தல்.
3. உற்பத்தியாளரை தூண்டுதல்.
4. நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் தகவல் வழங்கல்.
5. விலைச் சமிஞ்ஞைகளுக்கு உற்பத்தியாளரும் நுகர்வோரும் துலங்கல்களை வெளிப்படுத்தாமை.

15. சந்தைப்பொருளாதாரத்தில் யாருக்காக உற்பத்தி செய்தல் எனும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை தீர்க்கப்படுவது
1. காரணிச் சந்தையின் தொழிற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு
2. பொருட்கள் சேவைகளின் விலைகள் தீர்மானிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு
3. திட்டமிடல் பொறிமுறை மூலம்
4. மலிவான, விலைகூடிய பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம்
5. வீட்டுத்துறையினரின் சம்பள வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு

16. பின்வருவனவற்றில் ஆக்க இயல்தகவு எல்லை ஒன்றில் எடுகோளாக கருதப்படாதது.
1. வளங்கள் முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்படல்
2. நிலையான தொழில்நுட்பம்
3. வளங்களின் அளவு மாற்றமடையாதிருத்தல்
4. வளங்களின் தரத்தை மாற்றியமைக்க முடிதல்
5. இருவகையான பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்ய முடிதல்

17. உற்பத்திச் செயற்றிறனுக்கான பிரதான இரு நிபந்தனைகளையும் உள்ளடக்கும் தொகுதி
(a) பேரண்டப் பொருளாதார உறுதி (b) நிறைதொழில் மட்டம்
(c) முழு உற்பத்தி (d) பொருளாதார வளர்ச்சி
(e) விலை எல்லைச் செலவுக்கு சமனாதல்
1. a யும் b யும் 2. b யும் c யும் 3. c யும் d யும்
4. d யும் e யும் 5. c யும் e யும்

18. உற்பத்தி சாத்திய வளைகோட்டின் உட்புற நகர்வை ஏற்படுத்துவது.
(a) ஒரு பொருளின் உற்பத்திக்கான அமையச்செலவு குறைவடைதல்
(b) ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடல்
(c) தொழில்நுட்பத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்படல்.
(d) வேலையற்ற ஊழியம் மீண்டும் வேலைக்கு அழைக்கப்படல்.
(e) வெளிநாட்டு முதலீடுகளின் வருகை
(f) பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் யுத்தத்தினால் அழிக்கப்படல்
(g) வரட்சி காரணமாக மின்சார விநியோகம் சீர்குலைதல்
1. a,b 2. b,c,e 3. d,e 4. e,f 5. c,f,g

19. பின்வரும் அட்டவணை ஒருவர் தனது முழுவளங்களையும் பூரணமாகப் பயன்படுத்தி A,B ஆகிய பொருட்களில் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்திச் சாத்தியங்களை காட்டுகின்றது.

இந்நபர் A பொருளினை 600 அலகுகளில் இருந்து 700 அலகுகளாக அதிகரிப்பதற்கான அமையச்செலவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் A	750	700	600	400	0
பொருள் B	0	25	50	75	100

1. 25 அலகுகள் B பொருள்
2. 100 அலகுகள் B பொருள்
3. 0.25 அலகுகள் B பொருள்
4. 4 அலகுகள் B பொருள்
5. 50 அலகுகள் B பொருள்

20. அருகே உள்ள உற்பத்தி சாத்திய எல்லையின் எந்தப் புள்ளியில் உற்பத்தியை மேற்கொண்டால் குறித்த பொருளாதாரம் எதிர்வரும் காலங்களில் வேகமான பொருளாதார வளர்ச்சியை அடையமுடியும்.



1. A புள்ளி
2. B புள்ளி
3. C புள்ளி
4. D புள்ளி
5. E புள்ளி

21. பின்வருவனவற்றில் தவறான கூற்றுக்களாக நீர் கருதுபவற்றை உள்ளடக்கும் தொகுதியை தெரிவு செய்க.

a. ஒவ்வொரு சமூகமும் எதிர்கொள்ளும் வேறுபட்ட அடிப்படைப்பொருளாதாரப் பிரச்சனைகள் காரணமாகவே உலகில் வெவ்வேறு வகையான பொருளாதார முறைமைகள் தோன்றுகின்றன.

b. அரச முயற்சியாண்மை என்பது அரசுடைமை, அரசமுகாமை எனும் இரு அடிப்படை அம்சங்களை உள்ளடக்கும்.

c. வெளியீட்டிற்கான உள்ளீட்டையும் அதற்குரிய செலவையும் இழிவுபடுத்துவதன் மூலம் உச்ச வெளியீட்டை பெறும் செயற்பாடு உற்பத்தியின் வினைத்திறன் எனப்படும்.

d. நவோற்பாதனம் / புதுப் பொருளாக்கம் என்பதனை மேற்கொள்ளும் ஆக்கக் காரணி ஊழியம் ஆகும்.

1. ab 2. ac 3. ad 4. bc 5. bd

22. ஒரு பண்டம் பொருளாதாரப் பண்டமாக இருப்பதற்கு கீழே தரப்பட்டுள்ளவற்றில் எவ்வெவ் இயல்புகள் இணைந்தவையாகக் காணப்பட வேண்டும்? சரியான தொகுதியைத் தெரிவு செய்க.

a. அதற்கு ஒரு எல்லைச் செலவுண்டு.

b. அது ஒரு மனித தேவையினை திருப்திப்படுத்துகின்றது.

c. அதனுடைய எல்லைப்பயன்பாடு குறைந்து செல்கின்றது.

d. அதனுடைய உற்பத்தியில் ஒரு வளப்பயன்பாட்டுச்செலவு ஏற்படுகிறது.

e. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அதனை எடுத்துச்செல்லலாம்.

1. abc 2. dcd 3. ab 4. bc 5. bd

23. ஒரு பொருளியல் மாணவன் என்ற ரீதியில் நீங்கள் **ஏற்றுக்கொள்ள முடியாத** கூற்றை உள்ளடக்கும் தொகுதியை இனங்காண்க.

a. வரட்சிக் காலத்தில் மழை இல்லாததனால் மழை நீர் ஒரு அருமைப் பொருளாகின்றது. அதனால் அது ஒரு பொருளாதாரப் பண்டம் ஆகின்றது.

b. மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைப்பதனால், பாடசாலைப் பாடப் புத்தகங்களை ஒரு பொருளாதாரப் பண்டமாகக் கருதுவதற்கில்லை.

c. உற்பத்திச் சாத்திய எல்லைக்கு இடது பக்கமாக, ஒரு புள்ளியில் சாதனங்களின் குறைந்த பயன்பாடு காட்டப்படுகின்றது.

d. நகரத்தில் வாழ்க்கின்றவர்களுக்கு குடி தண்ணீர் ஒரு பொருளாதாரப் பண்டமாகும்.

1. ab 2. bc 3. cd 4. ad 5. bd

24. இலவசமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய கீழ்வரும் பொருட்கள் சேவைகளில் அமையச் செலவினைக் கொண்டுள்ளவை யாவை?

a. அரசினால் இலவசமாக வழங்கப்படும் கல்வி

b. துணிகளை உலர்த்துவதற்குப் பயன்படுத்தப்படும் சூரியவெளிச்சம்

c. மாணவர்களுக்கான மகாப்பொல புலமைப்பரிசில்

d. சுற்றுலாப் பயணிகளைக் கவருவதாக அமைந்த ஒரு நீர்வீழ்ச்சி

1. ab 2. bc 3. cd 4. ad 5. ac

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

25. ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையி பின்வருமாறு காட்டப்படுகின்றது இப்பொருளாதாரம் தேயிலை உற்பத்தியில் 300 அலகுகளை உற்பத்தி செய்யும் அதே வேளை அரிசி உற்பத்தியில் எத்தனை அலகுகளை உற்பத்தி செய்ய முடியும்?

1. 625 2. 325 3. 375
4. 675 5. 300



CIMAவின் தேவை

எம்மில் அநேகமானோருக்கு எதிர்காலம் பற்றிய வேட்கை இருக்கவே செய்கின்றது. சிறந்த தொழிலொன்றை பெறவேண்டும் அத்தொழிலில் உச்ச நிலைக்கு செல்லவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எல்லோருக்கும் இருப்பதுண்டு குறிப்பாக இன்றைய மாணவர்கள், இளம் சமுதாயத்தினர் சிறந்த தொழில்வாய்ப்பொன்றை பெயவேண்டும் என்பதில் உறுதி பூண்டுள்ளனர். இன்றைய நிலையில் பெற்றோரும் தமது பிள்ளைகள் சிறந்த உயர் தொழிலில் ஈடுபடவேண்டும் என்ற எதிப்பார்ப்போடும், ஆர்வத்தோடும் பிள்ளைகளுக்கான கல்விக்கு அதிக முதலிட்டினை செய்கின்றனர். இன்றைய போட்டிச் சூழலில் மட்டுப்படுத்தப்பட்ட தொழில்வாய்ப்புக்களே காணப்படுகின்றன. இதனால் தொழில்களை பெறுவதற்கு தொழில் சூழலுக்குள் உள்நுழையும் எவரும் தம்மை வேறுபடுத்தி அடையாளங்காட்ட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இன்றைய வணிகச்சூழலும் உலகமயமாக்கத்திற்கு உட்பட்டிருப்பதால் உலகத்தரம் வாய்ந்த, உலகசந்தைக்கு ஈடுகொடுக்கத்தக்கவகையிலான ஊழியர்களையே எதிர்பார்கின்றனர். இதனாலேயே தொழில்சார் கற்கை நெறிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. இன்று எமது நாட்டில் மாணவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் ஏராளமாக குவிந்து கிடக்கின்றன. இத்தகைய எண்ணற்ற தெரிவுகளில் மாணவர்கள் தமது இலட்சியத்தையும் ஒப்பீடு செய்து ஏதேனும் கல்வியினை தொடர நினைக்கின்றனர். உண்மையில் இத்தகைய தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பல்வேறு விடயங்களையும் சிந்திக்க வேண்டியுள்ளது. நீங்கள் எந்தத்துறைக்கு பிரவேசிக்க வேண்டுமென்றாலும் இன்றைய நிலையில் வணிக அறிவு என்பது மிக அவசியமாகின்றது. ஒரு பொறியியலாளர், மென்பொருள் பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர், சட்டவல்லுனர் ஆகிய எத்தரப்பில் உயர்தொழிலை மேற்கொள்ள விரும்பினாலும் அவருக்கு வணிகங்கள் பற்றிய அறிவு அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி புதிய ஒரு வணிகத்தை தொடங்குவதற்கும் வணிகம் பற்றிய அறிவு அவசியம். இன்றைய நிலையில் எல்லா தொழில்களும் வணிகமயப்பட்டிருப்பதால் வெறுமனே தொழில்நுட்ப அறிவினைக கொண்டு நேரடியாக மிக உயர்தொழிலுக்கு செல்லமுடியாது. ஆகவே இத்தகைய வணிகம் சார்ந்த உலகத்தரம் வாய்ந்த கற்கை நெறியொன்றை தெரிவுசெய்ய வேண்டுமல்லவா?

இலங்கையில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக வணிகத்துறையில் சிறந்த தலைவர்களை உருவாக்கிய சர்வதேச தொழில்சார் தகமையாக CIMA தனக்கென தனியிடம் வகிக்கின்றது. இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச ரீதியாக இன்றளவில் ஏறகுறைய 182 நாடுகளில் சிறந்த வணிகத்தலைவர்களை உருவாக்குவதில் CIMA தனக்கென தனியிடம் வகிக்கின்றது. ஐக்கிய இராச்சியத்தின் (UK) தகமைச்சான்றிதழின பட்டய முகாமைத்துவ கணக்கீட்டு கற்கைநெறி (CIMA) 1948ம் ஆண்டு உருவாக்கப்பட்ட உயர் தொழில்சார் கற்கை நிறுவனமாகும். இன்றளவில் ஐக்கிய இராச்சியத்திற்கு அடுத்தபடியாக இலங்கையே இதன் பாரிய பங்காளராக காணப்படுகின்றது. CIMA கற்கை நெறி போட்டிமிக்க வணிகச் சூழலை எதிர்கொள்ளக்கூடிய மனிதவளங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. உலகின் முன்னணி நிறுவனங்களை முகாமைசெய்யக்கூடிய வல்லமையை CIMA கற்கைநெறி வழங்குகின்றது. இதனாலேயே CIMA கற்கைநெறியை பூர்த்தி செய்கின்ற மாணவர்கள் வணிகம் பற்றிய பூரண அறிவோடு எத்தகைய வணிகச் சவால்களையும் எதிர்கொள்ளக்கூடிய மனித வளங்களாக மாறுகின்றனர். CIMA கற்கை நெறி மாணவர்களுக்கு பிரயோக ரீதியான அறிவினை வழங்குகின்றது. CIMA கற்கைநெறியின் பாடத்திட்டங்களானது முழுக்க முழுக்க பிரயோக ரீதியில் அமைவதோடு 5 வருடங்களுக்கு ஒரு முறையேனும் மீளாய்வு செய்யப்படுகின்றது. இந்த மீளாய்வு வணிகச்சூழலில் அன்றாடம் ஏற்படுகின்ற மாற்றங்களை பல்வேறு ஆய்வுகளின் மூலம் கண்டறிந்து மீளாய்வு செய்கின்றது. இத்தகைய மீளாய்வு செய்யப்படும் முறையினைக் கொண்ட ஒரே தொழில்சார் கற்கை நெறி CIMAவே ஆகும்.

உயர்தரப்பரீட்சைகள் நிறைவடைகின்ற நிலையில் மாணவர்கள் தமது அடுத்தக்கட்ட தீர்மானம் பற்றி சிந்தித்துமிடத்து எத்துறையை தெரிவு செய்தாலும் வணிக ரீதியான அறிவையும் இணைத்தே பெறவேண்டும். இதற்கு CIMA ஒரு சிறந்த வழிமுறையாகும். பெறுபேறுகள் வெளியாகியபின் பல்கலைக்கழகம் செல்லும் எதிர்பார்ப்பிலே இருக்கின்ற மாணவர்கள் பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு முன்பு CIMA கற்கைநெறியை ஆரம்பிக்க முடியும்.

எம்மில் பலர் CIMA கற்கைநெறி ஒரு கணக்கீட்டு கற்கைநெறியென்றும் இது க.பொ.த உயர்தரத்தில் வணிகப்பிரிவில் பயின்ற மாணவருக்கு மாத்திரமே பொருந்தும் என எண்ணுகின்றனர். ஆனால் CIMA கற்கைநெறி முகாமைத்துவ கணக்கீட்டு கற்கைநெறியாகும். இதன்கீழ் கணக்கீட்டு அறிவுடன் இணைத்து முகாமைத்துவ அறிவும் பூரணமாக அவசியமாகின்றது. எனவே இன்றைய நிலையில் எத்துறையினருக்கும் முகாமைத்துவ அறிவுஅவசியமாகின்றது. உதாரணமாக ஒரு வைத்தியர், பொறியியலாளர் அல்லது சட்டத்தரணி தமது தொழிற்சூழலில் எண்ணற்ற வணிக ரீதியிலான சவால்களை எதிர்நோக்க நேரிடும். மனித வளங்களை முகாமை செய்ய வேண்டி ஏற்படும். எதிர்கால செயற்திட்டங்களை உருவாக்க வேண்டி நேரிடும். இத்தகைய விடயங்களில் எத்துறையில் இருப்போருக்கும் முகாமைத்துவ அறிவு என்பது இன்றியமையாததாகின்றது. இத்தகைய பிரயோக ரீதியலான முகாமைத்துவ அறிவினை CIMA கற்கைநெறி வழங்குகின்றது. இன்றைய நிலையில் இலங்கையில் பல்வேறு துறைகளில் பயில்வோரும் CIMA கற்கைநெறியை தெரிவு செய்வதற்கான காரணமும் இதுவே ஆகும். குறிப்பாக பொறியியல், சட்டம் ஆகிய துறையினர் CIMA கற்கைநெறியை தெரிவு செய்கின்றனர். ஆகவே CIMA வணிகப்பிரிவு மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனைய மாணவர்களுக்கும் பொருத்தமான ஒரு கற்கை நெறியாகும். ஆகவே பல்கலைக்கழகம் செல்லுகின்ற மாணவர்கள் கல்விசார் தகமையோடு தொழில்சார் தகமையையும் CIMA பயிலுவதனூடாக பெறமுடியும். இதன் மூலம் தொழிற்சூழலில் உயரிய தெழில்களுக்கு நேரடியாக பிரவேசிக்க முடியும்.

பல்கலைக்கழக வாய்ப்பை தவறவிடும் மாணவர்களும் இன்று பல்வேறு கற்கைநெறிகளில் ஈடுபடுகின்றனர். ஆயினும் CIMA கற்கைநெறி ஒரு முழுமையான, விளைத்திறனான கற்கைநெறி என்பதனால் CIMA கற்கைநெறியை பூர்த்தி செய்வதன் மூலம் சிறந்த உயர்தொழில் வாய்ப்புக்களை பெறமுடியும். பல்கலைக்கழக கனவு நனவாகாத மாணவர்கள் CIMA வை முழுமையாக பூர்த்தி செய்வதனூடாக ஐக்கிய இராச்சியத்தின் முன்னணி பல்கலைக்கழகங்களான Birimingam, Northurmbria, Ballarate என்பனவற்றில் வணிகமானி (BSC) வணிகமுதுமானி (MBA) ஆகிய கல்விசார் தகமைகளை மேலும் ஒரு வருடத்தில் இலகுவாக பெற முடியும். எனவே CIMAவினூடாக கல்விசார் தகமைகளினை தன்தாக்கி கொள்ளக்கூடிய வாய்ப்பும் உண்டு. மேலும் சர்வதேச ரீதியாக உள்ள பல்வேறு முன்னணி நிறுவனங்களும் தமது முகாமை ஊழியங்களை CIMA பயில முதல்வே செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சர்வதேச நாடுகளில் உயர் தொழிலில் ஈடுபட விரும்புவோர் CIMA பயிலுவதனூடாக உலகின் முன்னணி நாடுகளிலுள்ள முன்னணி நிறுவனங்களில் சிறந்த தொழில்வாய்ப்பை பெறமுடியும். இன்றளவில் பேட்டிமிக்க தொழிற்சூழலில் தலைநகரில் இருப்போர் கூடுதலாக இத்தகைய வாய்ப்புக்களை பெற்றுக்கொள்கின்றனர். இந்நிலையினை CIMA கற்கைநெறி பற்றி எல்லா பிரதேசத்திலும் அறிந்துகொள்வதோடு அதன் மூலம் பயன் பெறுவதே சிறந்த நிலையாகும். எத்துறையில் இருப்போராயினும் குறுகிய காலத்தில் சிறந்த வணிகத்தலைவராக மாறவும் வல்லமை CIMA கற்கைநெறிக்கு உண்டு. CIMA கற்கைநெறியின் உங்களது முதலீடு உங்களது, ஒட்டுமொத்த எதிர்காலம் தொடர்பான முதலீடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

H.M.M. பாக்கீர்
B.A(SL) Econ
மட்டு அம்பாறை பிரதம ஆசிரியர்

The MCQ

1. கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றுக்குக் குறைவானால் அதன் கருத்து.
   1. எல்லை வருமானம் மறைப் பெறுமதி கொள்ளும்
   2. எல்லை வருமானம் நேர் பெறுமானம் கொண்ட போதிலும் சராசரி வருமானம் மிகக் குறைவாக இருக்கும்
   3. எல்லை வருமானம் மறைப் பெறுமதி கொண்ட போதிலும் அதிகரித்த வண்ணமிருக்கும்
   4. எல்லை வருமானம் நேர் பெறுமதி கொண்ட போதிலும் அது குறைவாக இருக்கும்
   5. எல்லை வருமானம் நேர் பெறுமதி கொள்ளும்

2. 

வரைபடத்தின் படி விலை 5/= விலிருந்து 4/= வாக குறைவடையும் போது எல்லை வருமானம்
   1. ரூபா 3 2. ரூபா 4 3. ரூபா – 4 4. ரூபா 40
   5. ரூபா44

3. 

பின்வரும் வளையிகளில் எது எல்லா வருமான மட்டத்திலும் நேர்க் கணிய வருமானக் கேள்வி நெகிழ்ச்சியை பிரதிபலிப்பது?
   1. A வளை கோடு 2. B வளை கோடு
   3. C வளை கோடு 4. D வளை கோடு
   5. E வளை கோடு

4. விவசாயப் பண்டம் ஒன்றுக்குரிய சந்தைக் கேள்வி, நிரம்பல் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது. அரசாங்கம் OC விலையை நிர்ணயித்து திறந்த சந்தையில் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கின்றது. வரைபடத்தின் படி அரசாங்கத்தின் கொள்வனவு செலவுப் பகுதியை குறிப்பிடுவது?



   1. ரூபா 3750
   2. ரூபா 9475
   3. ரூபா 1875
   4. ரூபா 5625
   5. ரூபா 1750

5. உழைப்புக்கான சந்தைக் கேள்வி நிரம்பல் வரைபு கீழுள்ளவாறு அமைந்துள்ளபோது உழைக்கப்படும் "பொருளாதார வாடகை" எவ்வளவு?
   1. OCNR
   2. RNMQ
   3. ECNI
   4. RNIQ
   5. NMIP



6. பின்வருவனவற்றுள் நிலையான செலவு வகையை இனங்காண்க
   1. எரி பொருள் கொடுப்பனவு
   2. தொழிலாளர் கூலி
   3. முகாமையாளர், பணியாளருக்கான சம்பளம்
   4. மூலப் பொருள் கொடுப்பனவு
   5. உற்பத்தி அலகு அடிப்படையில் செலுத்தப்படும் வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சிலருரிமைச் சந்தையின் இயல்பினை வேறுபடுத்திக் காட்டுவது?
   1. நிறுவனமே தொழிலாக செயற்படுதல்
   2. நிறுவனம் விலையிடல் தீர்மானங்களில் ஏனையவற்றில் தங்கியிருத்தல்
   3. நிறுவனம் இலாபத்தை உச்சப்படுத்த முனைவதில்லை
   4. நீறுவனம் நெகிழ்ச்சியற்ற கேள்விக் கோட்டை மட்டும் கொண்டிருத்தல்
   5. நிறுவனம் விலை பேதப்படுத்தலில் ஈடுபடல்

8. வேகமூட்டித் தத்துவம் (Acceleration Principle) புலப்படுத்துவது?
   1. வெளியீட்டு மாற்ற வீதம் தேறிய முதலீட்டில் செல்வாக்குச் செலுத்தும்
   2. தேறிய முதலீட்டு மாற்ற வீதம் தேசிய வருமானத்தில் செல்வாக்குச் செலுத்தும்
   3. வட்டி வீத மாற்றம், தேறிய முதலீட்டில் செல்வாக்குச் செலுத்தும்
   4. கேள்வி மாற்றத்தினால் மூலதன வெளியீட்டு விகிதம் மாறும்
   5. வெளியீட்டு மட்டத்தினால் தேறிய முதலீடு மாற்ற வீதம் தீர்மானிக்கப்படும்

9. பின்வருவனவற்றுள் தேசிய சேமிப்பில் உள்ளடக்கப்படும் உறுப்படிகளின் சேர்க்கை எது?
   A – உள்நாட்டு சேமிப்புக்கள்
   B – அரசாங்க சேமிப்புக்கள்
   C – தனியார் சேமிப்புக்கள்
   D – வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள்
   E – அரச கூட்டுத்தாபன முதலீடு
   F - வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம்
   1. A,D,F 2. A,B,C 3. A,C,E 4. B,C,E 5. A,C,F

10. எல்லை சேமிப்பு நாட்டம் MPC = 0.2 சமநிலை வருமானம் 2000 நிறைதொழில் வருமான மட்டம் 2500 எனின் வீக்க அல்லது சுருக்க இடைவெளி?
    1. 100 சுருக்க இடைவெளி 2. 100 வீக்க இடைவெளி 3. 500 வீக்க இடைவெளி
    4. 500 சுருக்க இடைவெளி 5. 250 வீக்க இடைவெளி

11. வரைபடத்தின் படி S கோட்டின் சரிவு குறிப்பது யாது?
    1. APC
    2. APS
    3. MPC
    4. MPS
    5. பெருக்கி (K)



12. பின்வருவனவற்றுள் மொத்த உள்நாட்டு உற்பத்தியை பிரதிபலிப்பது?
    1. மொத்த வளங்கள் + பொருட்கள் காரணியல்லா சேவைகளின் ஏற்றுமதி
    2. மொத்த வளங்கள் - பொருட்கள் காரணியல்லா சேவைகளின் ஏற்றுமதி
    3. மொத்த வளங்கள் - பொருட்கள் காரணியல்லா சேவைகளின் இறக்குமதி
    4. மொத்த வளங்கள் + பொருட்கள் காரணியல்லா சேவைகளின் இறக்குமதி
    5. மொத்த வளங்கள் + பொருட்கள் காரணிச் சேவைகளின் இறக்குமதி

13. பின்வருவனவற்றுள் முறைசாராத பொருளாதார நடவடிக்கையாக கருத முடியாதது?
    1. முறையான ஆவணப்படுத்தல் இல்லாத நடவடிக்கைகள்
    2. குடும்ப உழைப்பில் தங்கியிருத்தல்
    3. வரி செலுத்துவதிலிருந்து தவிர்த்திருத்தல்
    4. கம்பனி இலாபங்கள்
    5. அரசின் சட்ட நிபந்தனைகளுக்கு இணங்க விரும்பாமை

14. பின்வருவனவற்றுள் எது மொத்த உள்நாட்டு உற்பத்திக்குள் சேர்க்கப்படுவதில்லை?
    1. தேறிய வட்டி
    2. விவசாயிகள் உழைக்கும் வருமானம்
    3. வெள்ள அனர்த்தத்திற்கு அரசு வழங்கிய உணவுப் பொதிகள்
    4. அரச ஊழியர்களுக்கான சம்பளம்
    5. ஊழியர் சார்பாக தொழில் வழங்குனர் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தும் கொடுப்பனவுகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

15. 

வரைபின் படி நுகர்வுச் சார்பு?

1. S = 50 + 0.8Y
2. S = 50 + 0.2Y
3. S = -50 + 0.8Y
4. S = -50 + 0.2Y
5. S = -50 + 100Y

16. வணிக வங்கியொன்று 500 மில்லியன் வைப்புக்களையும் 270 மில்லியன் காசு ஒதுக்குகளையும் கொண்டுள்ளன எனக் கருதுக. காசொதுக்குத் தேவைக்கான கடனாக்கப் பெருக்கி 4 எனின் இவ்வங்கியிடமுள்ள மிகையொதுக்கம் எவ்வளவு?

1. 170 மில் 2. 145 மில் 3. 770 மில் 4. 230 மில் 5. 125 மில்

17. பணவீக்கத்தால் உருவாகும் கொடுக்கல் வாங்கல் செலவுகளில் ஒன்றான பட்டியல் செலவுகளாகக் கருதக் கூடியது?

1. விலைகளில் ஏற்படும் தளம்பல்களினால் வாழ்க்கைச் செலவில் ஏற்படும் மாற்றம்
2. வங்கிக்கு அடிக்கடி சென்று வருவதால் ஏற்படும் கால விரயம்
3. வியாபார நிலையங்களில் அடிக்கடி விலைப்பட்டியலை மாற்றுவதற்கான செலவு
4. மெய்வட்டி வீதம் குறைவதால் ஏற்படும் இழப்பு
5. பணத்தை வங்கியிலிருந்து எடுப்பதால் ஏற்படும் வட்டி வருமான இழப்பு

18. இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய கொள்கை வீதங்களில் அமையாதது எது?

1. வட்டி வீதம்
2. வங்கி வீதம்
3. சட்டப்படியான ஒதுக்கு வீதம்
4. மீள் கொள்வனவு வீதம்
5. நேர்மாற்றுக் கொள்வனவு வீதம்

19. மத்திய வங்கியின் சொத்துக்கள் சார்பாக உயர் வலுப் பணத்தினுள் அடங்காதது?

1. வணிக வங்கிகளுக்கான முற்பணம்
2. அரசுக்கான மத்திய வங்கியின் தேறிய கடன்
3. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்
4. மத்திய வங்கியின் தேறிய இதர சொத்துக்கள்
5. வணிக வங்கிகள் மத்திய வங்கியில் பேணுகின்ற ஒதுக்கங்கள்

20. பணச் சந்தையில் பயன்படுத்தப்படும் நிதிசார் கருவி அல்லாதது?

1. அழைப்புக்கடன்
2. திரைசேரி உண்டியல்கள்
3. கடன் அட்டைகள்
4. திரைசேரி முறிகள்
5. மாற்று உண்டியல்கள்

- மூத்த ஆசிரியர்களின் ஆக்கங்களை பெற்றுக்கொள்ள.
- உங்கள் துறைபற்றி தெரிந்துக்கொள்ள.
- நடைமுறை விடயங்களில் தெளிவினை பெற்றுக்கொள்ள.

இணையத்தினூடான கற்கையில்
இன்றே இணையுங்கள்....

www.arivuththedal.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிரேஷ்ட விரிவுரையாளர்
அனில் பொன்னாந்து
கணக்கீட்டு பிரிவு
முகாமைத்துவ நிதிப்பீடம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

சிரேஷ்ட விரிவுரையாளர்
தயானந்த அம்பலாங்கொடகே
கணக்கீட்டு பிரிவு
முகாமைத்துவ நிதிப்பீடம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

கணக்கீடு

01. இலாப நட்டங்களை கணிப்பிட்ட பின் அம்மீதியினை இலாப நட்ட கணக்கிற்கு மாற்றிய பின் பரீட்சை மீதிக்கு பதிவு செய்வது எவ்வாறு?

இந் நிலமையை விளங்கிக் கொள்வதற்கு கணக்கீட்டு செயன்முறையை நன்கு விளங்கி கொள்ளுதல் வேண்டும். இதன் ஒரு கருமமாக பேரேட்டு கணக்குகளில் உரிய தொகையை பதிவு செய்தல், பேரேட்டுக் கணக்கு மீதிகளை வேறு கணக்குகளுக்கு மாற்றுதல் போன்ற கருமங்களை குறிப்பிட முடியும். பேரேட்டில் காணப்படும் கணக்கு மீதியொன்றை தேவைக்கேற்ற வகையில் வேறு கணக்கிற்கு மாற்ற முடியும். உதாரணமாக குறிப்பிட்ட கால முடிவில் சென்மதி மின்சார செலவு அடுத்த ஆண்டில் மின்சார கணக்கிற்கு மாற்றப்பட முடியும். அதே போல் இலாப நட்ட மீதியை இலாப நட்ட கணக்கிற்கு (நிறுத்தி வைத்த இலாபம்) ஒதுக்கம், மிகை, அல்லது வேறெந்தவொரு பெயரில் மாற்றப்படலும் இவ்வடிப்படையிலேயே இடம்பெறுகிறது.

குறிப்பிட்ட கால முடிவில் வருமானம் மற்றும் செலவுகளில் தேறிய பெறுபேறு என்பது உரிமையில் ஏற்படும் தாக்கம் ஆகும். குறிப்பிட்ட கால முடிவில் வருமான கணக்கு 10 (மீதிகளின் கூட்டுத் தொகை 100/-) மற்றும் செலவு கணக்கு 50 (மீதிகளின் கூட்டுத்தொகை 80/-) பேரேட்டில் காணப்படுவதாக கொள்வோம். இவ் வருமான மற்றும் செலவினால் ஏற்படும் தேறிய தாக்கமானது உரிமை 20/- வில் அதிகரிப்பதாகும். (100 - 80) மேற்கூறிய 10 வருமான கணக்குகளின் மீதிகளையும் 5 செலவு கணக்குகளின் மீதிகளையும் இலாபநட்ட கணக்கிற்கு மாற்றியபின், அதன் பின் வருமான செலவு கணக்குகள் இருக்காது. ஆகவே இவற்றின் தேறிய தாக்கம் இலாப நட்ட கணக்கிலேயே இடம்பெறும். (இது ஒரு பேரேட்டு கணக்காகும்) சாதாரணமாக இந்நடவடிக்கை குறிப்பிட்ட காலப்பகுதியின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பரிசீலிக்கப்பட்டு நிதி கூற்றுக்கள் தயாரித்த பின்பே இடம்பெறும்.

ஆயினும் பரீட்சை மீதியை எச்சந்தர்ப்பத்திலும் செய்ய முடியும். பரீட்சை மீதி நிதி கூற்று ஒன்றல்ல என்பதோடு, இது ஒரு கணக்கும் அல்ல. இது ஒரு இணங்காட்டலுக்கும் கண்டறிவதற்கும் ஒரு இலகு வழிமுறையே ஆகும். இது கட்டுப்படுத்தல் நடவடிக்கைக்காகவே மேற்கொள்ளப்படுகின்றது. பரீட்சை மீதியானது ஒரு இணங்காட்டுவதற்கான ஊடகம் என்பதால் குறிப்பிட்ட நேரத்தில் காணப்படும் மீதிகளையே அது காட்டும். இதன் படி பரீட்சை மீதியை நோக்குமிடத்து வருமான கணக்குகள் மற்றும் செலவு கணக்குகள் என்பவற்றின் மீதிகள் இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப் பட்டிருப்பின் பரீட்சை மீதியில் இலாப நட்ட கணக்கு மீதியை மட்டுமே கண்டறிய முடியும். இதன்போது வருமான கணக்கு மீதிகளை செலவு கணக்கு மீதிகளையோ பரீட்சை மீதியில் காணமுடியாது.

எவ்வாறாயினும் முன்பு குறிப்பிட்டவாறு பேரேட்டில் காணப்படும் இலாப நட்ட கணக்கிற்கு வருமான கணக்குகளையும், செலவு கணக்குகளையும் மாற்றல் குறிப்பிட்ட காலப்பகுதியில் கணக்கீட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றபின் என்பதால் சாதாரணமாக குறிப்பிட்ட கால முடிவில் தயாரிக்கப்படும் பரீட்சை மீதி அனைத்து செலவு கணக்குகளையும், வருமான கணக்குகளையும் காட்டும். இதன் மூலம் குறிப்பிட்ட கணக்கும் இன்னும் இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்படவில்லை என்பது புலப்படும்.

மறுபுறத்தில் பரீட்சை மீதியை தயாரித்த பின்பு பேரேடுகளில் காணப்படும். செலவு கணக்குகள், மற்றும் வருமான கணக்குகள் செயழிழக்காது என்பதை விளங்கி கொள்ளுதல் வேண்டும். நிதிக் கூற்றுக்கள் என்பது பேரேடுகளில் காணப்படும் மீதிகளை பயன்படுத்தி தயாரிக்கப்படும் தகவல் வழங்கும் ஊடகமாகும். வருமான கூற்றுக்கு பதிலாக இலாப நோக்கில் இயங்கும் வணிகங்கள் "இலாப நட்ட கணக்கு" என்ற பெயரையும் பயன்படுத்தமுடியும். இங்கு நிதி கூற்றாக தயாரிக்கப்படும் இலாப நட்ட கணக்கு மற்றும் பேரேடுகளில் காணப்படும் இலாப நட்ட கணக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்பன வெவ்வேறானவை என்பதை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். இதன்படி எச் சந்தர்ப்பத்திலும் பரீட்சை மீதியொன்றை உருவாக்க முடியுமென்பதோடு அப்போது காணப்படும் பேரேட்டு மீதிகள் பரீட்சை மீதிகளில் இடம்பெறும்.

02. உடன் காசுக்கு விற்பனையின் போது உட்திரும்பல் இடம்பெற முடியுமா? அவ்வாறு இடம்பெற்றால் அதற்கான பதிவு எவ்வாறு இடம்பெறும்?

உடன் காசுக்கு விற்பனை செய்த பின்பு உட்திரும்பல் இடம் பெறும் என்று கூறுவதை விட பண்டங்கள் மீள பொறுப்பேற்கப்படலே இடம் பெற முடியும். இங்கு பண்டம் மாற்றியே கொடுக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் பண்டமானது கைமாற்றப்பட்ட பின் அது தொடர்பில் பணம் மீளளிக்கப்படுகின்றதா? அல்லது அதற்கு பதிலாக பண்டம் ஒன்று கைமாற்றி கொடுக்கப் படுகின்றதா? என்பதன் அடிப்படையிலேயே இதற்கான பதிவு இடம்பெறும்.

வேறு ஒரு பண்டம் மாற்றி கொடுக்கப்படுமாயின், பேரேடு கணக்குகளில் எந்த வித தாக்கமும் ஏற்படாது. கட்டுப்படுத்தல் நடவடிக்கைக்கென இது தொடர்பான ஆவணங்களை பதிவு செய்தல் வேண்டும். மீளப்பெறப்பட்ட பண்டத்திற்கான பணம் மீளளிக்கப்படுமாயின் அதனை காசு கணக்கில் செலவு வைத்து உட்திரும்பல் கணக்கில் வரவில் பதிவிட வேண்டும். இதன் படி இங்கு கடன் விற்பனையா? அல்லது காசு விற்பனையா? என்பதை கருத்திற் கொள்ளுதல் வேண்டியதில்லை.

03. உற்பத்தி கிரயம் (Product Cost) காலக்கிரயம் (Period Cost) என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் எவை?

உற்பத்தி கிரயம்	காலக்கிரயம்
◆ உற்பத்தி நடவடிக்கை தொடர்பானவை	◆ குறிப்பிட்ட காலம் தொடர்பானவை
◆ இருப்பு கணிப்பீட்டிற்கு கருத்திற் கொள்ளப்படும்.	◆ குறிப்பிட்ட காலத்தின் செலவாக இணங் காணப்படும்.
◆ குறிப்பிட்ட உற்பத்தி விற்பனை செய்யப்படும் வரை சொத்தாக இணங்காணப்படும்.	◆ ஏற்படவுடனேயே செலவாக இணங்காணப்படும்.

04. மூலதனத்தின் கிரயம் என்பதனால் கருதப்படுவது யாது? முதலீட்டு தீர்மானத்தின் போது இதனை கருத்திற் கொள்ளுவது ஏன்?

மூலதனத்தின் கிரயம் என்பதனை பின்வருமாறு எளிமையாக குறிப்பிட முடியும். ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தில் குறிப்பிட்ட மூலதனத்தை ஈடுபடுத்துவதனூடாக அதன் மூலம் எதிர்பார்க்கும் பெறுபேறு எனலாம்.

05. நிறுவனமொன்றில் காணப்படும் இழிவு இருப்பு மட்டம் மற்றும் பாதுகாப்பு இருப்பு என குறிப்பிடப்படும் இரண்டும் ஒன்றா?

சாதாரணமாக பிரயோக ரீதியில் இது வெவ்வேறான இருப்பு மட்டங்களாகும். "இழிவு இருப்பு என்பது வியாபார நடவடிக்கைகள் திட்டமிட்ட வகையில் இடம்பெறும் போது, இருப்புக்களுக்கு கட்டளையிட்ட பிறகு அவை களஞ்சியத்திற்கு கிடைக்கும் காலவரையில் (Lead Time) தேவைப்படும் உச்சளவான இருப்பு ஆகும். இதன்படி இழிவு இருப்பு மட்டத்தை கணிப்பிடும் போது உச்சப்பயன்பாட்டையும், உச்ச கட்டளை காலம் ஆகியவற்றை கருத்திற் கொண்டு கணிப்பிட வேண்டும். இதன்படி இழிவு இருப்பு மட்டம் என்பது நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைக்கு பாதுகாப்பை ஏற்படுத்தும். ஆயினும் பாதுகாப்பு இருப்பு என்பது நிச்சயமற்ற எதிர்பாராத சூழ்நிலையின் போது அவசியமாகும் இருப்பு ஆகும். இவ்வாறான நிச்சயமற்ற சூழ்நிலை காணப்படும் போது இருப்பு அவசியமாகுமிடத்து அவ்விருப்பே பாதுகாப்பு இருப்பு எனப்படுகின்றது. இவ்வாறு நிறுவனங்கள் இவ்விரு இருப்பு மட்டங்களையும் கணிப்பீடு செய்ய தமக்கேற்றவகையில் பல்வேறு அணுகுமுறைகளை பயன்படுத்துவர். இதனை மேலும் சிறப்பாக விளங்கிக் கொள்வதற்கு EOQ வுடன் ஒப்பிடலாம். EOQ அளவினைக் கணிப்பிடும் போது எடுக்கப்படும் ஒரு எடுகோளாக மறு கட்டளைக் காலம் பூச்சியம் என்பது ஆகும்.

இதன்படி

இழிவு இருப்பு மட்டம் = உச்ச கட்டளை காலம் x உச்ச பயன்பாடு
= 0 x X
= 0 ஆகும். இங்கு இழிவு இருப்பு இல்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆயினும் இவ்வெடுகோள் பிரயோகமற்ற சூழ்நிலையில் உற்பத்தியைத் தடையின்றி மேற்கொள்ள பாதுகாப்பு இருப்பு மட்டத்தை பேண முடியும்.

06. உற்பத்தி பொது மேந்தலையை உற்பத்தி நிலையங்களுக்கிடையில் பகிர்வு செய்யும் பொது பகிர்வுக்கான அடிப்படையினை தெரிவு செய்யும் போது கருத்திற் கொள்ளும் காரணிகள் எவை?

உற்பத்தி பொது மேந்தலையை மிகப் பிரயோக ரீதியிலும், சாதாரண வகையிலும் பகிர்வு செய்ய வேண்டும். இங்கு உற்பத்தி நிலையத்தின் தன்மை, உற்பத்தியின் தன்மை, உற்பத்தி செயன்முறை, நிறுவனத்தின் தன்மை, முகாமையாளர்களின் தீர்மானம் என்பன முக்கியம் பெறும். ஆகவே கருத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேறுபடும்.

07. செயல் உருவாக்க கணக்கீடு என்றால் என்ன?

இது ஒரு புதிய விடயமாகக் குறிப்பிட்டாலும் இது பல ஆண்டுகளுக்கு முன்பு நிலவிய நிலையாகும். நிதி கூற்றுக்களை வழங்கும் போது முகாமையாளர்கள் சிந்திக்கும். ஆயினும் நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ற வகையில் தகவல் வழங்கும் கட்சியினருக்கு வழங்குதல் வேண்டும். செயல் உருவாக்கக் கணக்கீட்டில் சாதாரணமாகப் பார்க்குமிடத்து கணக்கீட்டு எண்ணக்கருக்கள், கணக்கீட்டு கோட்பாடுகள் என்பவற்றை கருத்திற் கொண்டு கணக்கீடு மேற்கொள்ளப்படுவதாக புரிந்தாலும், இங்கு இது அடிப்படையில் நிதி கணக்கீட்டு அடிப்படையைத் தாண்டி மேற்கொள்ளப்படும். இதற்கான காரணம் கணக்காளர்கள் தமது நிறுவனம் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியுள்ளது என்பதையே காட்ட விரும்புவர். ஆகவே இதற்கென அவர்கள் சில அணுகுமுறைகளையும் பின்பற்றுவர். இதனை வருமான முகாமைத்துவம் (Income Management) எனவும் அழைப்பர்.

உலகத்தரம் வாய்ந்த உயர் கல்வித் தகமைகளை வழங்கும்
NORTHSHORE COLLEGE OF BUSINESS & TECHNOLOGY

மாணவர்கள் இக்கல்லூரியில் Engineering துறையின் கீழ் பின்வரும் பாடநெறிகளையும்

- BEng (Hons)/ MEng Electrical and Electronic Engineering (BEng 3 Years; MEng 4 years)
- BEng (Hons)/ MEng Civil Engineering (BEng 3 Years; MEng 4 years)

Information Technology துறையின் கீழ் பின்வரும் பாடநெறிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

- BSc (Hons) Software Engineering (3 Years)
- BSc (Hons) Computer Science (3 Years)
- BSc (Hons) Computing (3 Years)
- BSc (Hons) Business Information Technology (3 Years)

Business Management துறையின் கீழ் பின்வரும் பாடநெறிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

- BSc (Hons) Management with Information Systems (3 Years)
- BSc (Hons) Logistics and Transport Management (3 Years)
- BSc (Hons) Human Resource Management (3 Years)
- BSc (Hons) Business Management (3 Years)
- BSc (Hons) Marketing (3 Years)

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
Northshore College of Business & Technology,
141, சேர்ச் ரோட், கொழும்பு 15.
தொலைபேசி : +94 11 4369092.
மின்னஞ்சல் : info@northshore.lk இணையம் : www.northshore.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கீடு

சிரேஷ்ட விரிவுரையாளர்
ஹரேந்திர காரியவசம்
முகாமைத்துவ, வணிக நிதிப்பீடம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

றெக்னோ மற்றும் கருணா ஆகியோரின் பங்குடமை ஒப்பந்தத்தின் விதிகள் வருமாறு.

01. இலாப நட்டங்களை சமனாக பகிர்ந்து கொள்ளல்.
02. கருணாவுக்கு மாதாந்தம் 10,000/- சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.
03. மூலதனத்திற்கு 10% வருடாந்த வட்டி செலுத்தப்படும்.
04. பங்குடமையில் ஏற்படும் மாற்றத்தின் போது நன்மதிப்பு மதிப்பிட வேண்டியதோடு, நன்மதிப்பினை கணக்குகளில் காட்டுதல் வேண்டும்.

2010-01-01 அன்று ரஞ்சன் புதிய பங்காளராக இணைத்துக் கொள்ளப்பட்டார். மூலதனவட்டி தொடர்பில் பழைய ஏற்பாடு பேணப்படுவதோடு, ஏனைய புதிய ஏற்பாடுகள் பின்வருமாறு.

01. இலாப நட்ட விகிதம் 5.3.2
02. றெக்னோ மற்றும் ரஞ்சன் ஆகியோருக்கு மாதாந்த சம்பளமாக 5000/- வழங்கப்படும்.
03. நன்மதிப்பு 200,000/- என மதிப்பிடப்பட்டது.
04. சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படும்.

0210-12-31இல் முடிவுற்ற ஆண்டில் நிதி கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதோடு, ரஞ்சன் இணைக்கப்பட்டதன் பின்னர் தேவையான பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ரஞ்சனின் நடைமுறை கணக்கு சுருக்கம் வருமாறு.

	000
சம்பளம்	60
மூலதன வட்டி	30
இலாப பங்கு	40
பற்று	(10)
2010-12-31ல் மீதி	120

2010-01-01 அன்று றெக்னோ மற்றும் கருணா ஆகியோரின் மூலதன கணக்கு முறையே 500,000 மற்றும் 400,000 ஆகும். அவர்களின் நடைமுறை கணக்கு மீதிகள் 36,000/-, 22,000/- செலவு மீதிகள் காணப்பட்டன. சுரேஷ் 2011-01-01 அன்று 300,000/- மூலதனமிடப்பட்டது.

2010-12-31ல் காணப்பட்ட ஐந்தொகை வருமாறு

	கிரயம்	திரண்ட தேய்வு	தேறிய பெறுமதி
நடைமுறையல்லா சொத்துக்கள்			
காணி	600		600
கட்டிடம்	500	(200)	300
வாகனங்கள்	700	(300)	460
பொறிகள்	400	(250)	150
	2200	750	1450
நடைமுறைச் சொத்து			
இறுதி இருப்பு	120		
கடன்பட்டோர் (10% ஐயக்கடன் நீக்கி)	45		
வங்கி மீதி	85		250
மொத்த சொத்துக்கள்			1700
உரிமை மற்றும் பொறுப்பு			
மூலதன கணக்கு 2010-01-01			
றெக்னோ	500		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணா	400		
ரஞ்சன் (10-01-01)	300		1200
நடைமுறை கணக்கு 2010-12-21			
ரெக்னோ	156		
கருணா	162		
ரஞ்சன்	120		438
நடைமுறைப் பொறுப்பு			
கடன்கொடுனர்	52		
சென்மதி	10		62
			1700

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படவில்லை.

(01) மீள்மதிப்பீட்டு பெறுமுதி பெறுமானத்தேய்விடாது, கிரயத்தின் மீது கட்டிடம் 6%, மோட்டார் வாகனம் 10% பெறுமானத்தேய்விடப்படும். 2010-01-01ரஞ்சன் இணைத்துக் கொள்ளப்பட்ட போது, சொத்துக்கள் பின்வருமாறு மீள்மதிப்பிடப்பட்டன.

காணி	700,000/-
கட்டிடம்	400,000/-
வாகனம்	500,000/-
பொறி	140,000/-

மீள் மதிப்பீட்டின் பின்பும் குறிப்பிட்ட பெறுமதிக்கே தேய்வு செய்யப்படும்.

(02) நன்மதிப்பு புத்தகங்களில் காட்டப்படவில்லை

(03) 30,000/- பெறுமதியான விற்பனை பட்டியல் தவறவிடப்பட்டது.

(04) 16,000/- கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் 2010-12-31 வரையில் வழிசரக்காக உள்ளது.

(05) சென்மதி மின் கட்டணம் 4000/- கருத்திற் கொள்ளப்படவில்லை.

(06) பங்காளர்களின் பண்ட பற்றுகள் தவறவிடப்பட்டன

ரெக்னோ	18,000
கருணா	12,000
ரஞ்சன்	10,000

(07) கணக்குகளில் காட்டப்பட்ட காசு பற்று ரெக்னோ 30,000/-, கருணா 20,000/-

வேண்டப்படுவது,

01. மீள்மதிப்பீட்டு கணக்கு
02. மூலதன கணக்கு மற்றும் நடைமுறை கணக்கு
03. தேறிய இலாபத்தை திருத்தும் கூற்று
04. இலாபநட்ட பகிர்வு
05. 2010-12-31 இல் ஐந்தொகை

எமது இதழ்கள் தொடர்பிலும், எமது புதிய முயற்சிகள் தொடர்பிலும்
உங்களது காத்திரமான விமர்சனங்களை எமக்கு அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி,
தபாலில் : இல 03, சென் கில்டாஸ் வீதி, கொழும்பு 03.
மின்னஞ்சலில் : arivu.editor@gmail.com
தொலைபேசியில் : இதழாசிரியர் - 0719494227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014ம் ஆண்டு மாணவர்களுக்கென சிறப்பாக தயாரிக்கப்பட்டது.

S.K. பிரபாகரன்
B.B.A(Spl) Dip.in.Edu(merit) MEd, Mphil(R)
செயல்திட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்

கணக்குப் பதிவியலும் கணக்கீடும் (Book Keeping & Accounting)

கணக்குப் பதிவியல் :

கணக்கு வைத்தலின் ஆரம்பச் செயற்பாடாக அமைவது கணக்குப் பதிவியல் ஆகும். வணிகச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிதிசார்ந்த கொடுக்கல் வாங்கல்களையும் (Financial Transactions); நிகழ்வுகளையும் (Events) இரட்டைப்பதிவு அல்லது ஒற்றைப் பதிவு ஒழுங்கு முறைகளின் கீழ் பதிவு செய்வது கணக்குப்பதிவியல் எனப்படும். கிரா.ப் (Grapher) என்பவரது கருத்துப்படி, பணம் அல்லது பணத்தின் மதிப்புள்ள நடவடிக்கைகளைத் துல்லியமாகவும், முறையாகவும் கணக்கேடுகளில் பதிவு செய்யும் முறைமை கணக்குப் பதிவியல் எனக் குறிப்பிடுகின்றார். இக் கருமத்தை மேற்கொள்பவர் கணக்குப் பதிவாளர் (Book Keeper) அல்லது கணக்கு எழுதுவினைஞர் (Account Cleark) எனக் குறிப்பிடுகின்றார்.

கணக்குப் பதிவியலின் பணிகளாக பின்வருவன அமையும்.

(i) தகவல் திரட்டுதல் அல்லது இனங்காணல் (Identifying)
(ii) வகைப்படுத்தல் (Classifying)
(iii) பதிவு செய்தல் (Recording)
(iv) முறைமைப்படுத்தல் (Systematizing)
(v) சுருக்குதல் (Summarizing)

கணக்கீடு :

வணிகம் பற்றிய பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான நிதிசார் தகவல்களை உள்ளக, வெளியகப் பயன்பாட்டாளர்களுக்கு வழங்கும் பல்வேறு செயன்முறைகளையுடைய உயர் பணியாக அமைவது கணக்கீடு ஆகும். இதனை மேற்கொள்பவர் கணக்காளர் (Accountant) என அழைக்கப்படுகின்றார். கணக்காளர் உயர்மட்ட அறிவுடையவராகவும், கொள்கை விளக்கமுள்ளவராகவும், பகுத்தாராயும் திறன்மிக்கவராகவும் காணப்படுவார்.

கணக்கீட்டின் பிரதான பணிகள் பின்வருமாறு அமையும்.

(1) ஒதுக்குதல் - Allocation (வருமானங்கள் செலவினங்களை வெவ்வேறு பகுதிகளுக்கு இனங்காணுதல்)
(2) பெறுமானமிடல் - Evaluation (இருப்பு மதிப்பீடு, தேய்மான மதிப்பீடு)
(3) நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் - Preparation of Financial Statement
(4) பகுத்தாய்தல் - Analysing
(5) விமர்சனம் / வியாக்கியானம் செய்தல் - Interpreting
(6) தொடர்பாடல் / சமர்ப்பித்தல் செய்தல் - Communicating / Presenting

பொருளியல் அலகு / கணக்கீட்டு அலகு (Economic unit / Accounting unit)

வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி பொருட்கள், சேவைகளை வழங்கும் அமைப்புக்களே பொருளியல் அலகு அல்லது கணக்கீட்டு அலகு எனப்படும். தனிநபர், நிறுவனம், அரச நிறுவனம், பொது நிறுவனங்கள் என்பன கணக்கீட்டு அலகுகளாகக் கருதப்படுகின்றன.

மேற்குறித்த பொருளியல் அலகுகளில் பின்வரும் வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக அல்லது அருமைத் தன்மை கொண்டவையாகக் கருதப்படுகின்றன. இவை 5 M's எனப்படும்.

(1) Men / Human Resources - மனித வளங்கள்
(2) Materials - பொருட்கள்
(3) Machines - பொறி, உபகரணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4) Methods / Techniques - முறைகள் / நுட்பங்கள்
(5) Money - பணம்

மேற்குறித்த வரையறுக்கப்பட்ட வளங்கள் விளைத்திறனாகப் பயன்படுத்தப்படுவதையும், இவற்றை முகாமை செய்வதையும் கணக்கீடு வெற்றிகரமாக மேற்கொள்கின்றது.

கணக்கீட்டு உள்ளீடுகளும் வெளியீடுகளும் (Accounting Inputs and Outputs)

பொருள் உற்பத்தித் தாபனமொன்றில் முடிவுப் பொருட்களைப் பெறுவதற்குரிய உள்ளீடுகளாக மூலப் பொருட்கள் காணப்படுவது போன்று, வணிக நிறுவனங்கள் தமது நிதியறிக்கைகளான கணக்கீட்டு வெளியீடுகளைப் பெற்றுக் கொள்வதற்குக் கணக்கீட்டுச் செயன்முறைகளில் உட்படுத்துகின்ற தகவல்களே கணக்கீட்டு உள்ளீடுகள் எனப்படும்.

கணக்கீட்டு உள்ளீடுகள் பிரதானமாக இரு வகைப்படும். அவையாவன,
(1) கொடுக்கல் வாங்கல்கள் - Transaction
(2) நிகழ்வுகள் - Events

கொடுக்கல் வாங்கல்கள் :
வணிக நிறுவனங்களில் இடம்பெறும் நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் பின்வரும் சிறப்புப் பண்புகளைக் கொண்டிருக்கும்.
(1) பணப் பெறுமதியில் அளவிடக் கூடியதாக இருத்தல்.
(2) நிறுவனத்தினது சொத்துக்கள், பொறுப்புக்களில் தாக்கங்களை ஏற்படுத்துபவையாக இருத்தல்.
(3) முகாமைத் தீர்மானங்களின் பெறுபேறாக அமைதல்.
உதாரணம் : கொள்வனவு, விற்பனை, சம்பளம், விளம்பரம்.

நிகழ்வுகள் :
வணிக நிறுவனமொன்றில் இடம்பெறும் சம்பவங்களே (Incidents) நிகழ்வுகள் எனப்படும். இவை இரு வகைப்படும். அவையாவன :
(1) உள்ளக நிகழ்வுகள் / அக நிகழ்வுகள் - Internal Events
(2) வெளியக நிகழ்வுகள் / புற நிகழ்வுகள் - External Events

பணரீதியாக அளவிடக்கூடிய நிறுவனத்துடன் நேரடித் தொடர்புடைய சம்பவங்களாக உள்ளக நிகழ்வுகள் அமைகின்றன.
உதாரணம்: (1) மூலப் பொருட்களை முடிவுப் பொருட்களாக்குதல்
(2) வியாபாரக் கடன்பட்டோர் முறிவடைதல்
(3) இருப்புக்கள் அவற்றினது பயன்படுத்தக்கூடிய திகதி காலாவதியாகுவதன் காரணமாகச் சேதமடைதல்.

வெளிநபர்கள் அல்லது நிறுவனங்களது செயற்பாடுகள் காரணமாக நிறுவனத்தினது வாளங்களில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்கள் வெளியக நிகழ்வுகளாகும்.
உதாரணம்: (1) அரசினால் வரிகள் அதிகரிக்கப்படுதல்.
(2) நிறுவனம் விற்பனை செய்யும் பொருளொன்றின் இறக்குமதியை அரசாங்கம் தடை செய்தல்.
(3) வீதி விரிவாக்குதலுக்கென நிறுவனத்தின் ஒரு பகுதி நிலம் அரசினால் சுவீகரிக்கப் படுதல்.

கணக்கீட்டுச் சூழல்கள் (Accounting Environments)

வணிக நிறுவனமொன்றினது செயற்பாடுகளில் தாக்கங்களை ஏற்படுத்துவதனூடாக அவற்றினது கணக்கீட்டுச் செயற்பாடுகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் கணக்கீட்டுச் சூழல்கள் எனப்படும்.

இக்கணக்கீட்டுச் சூழல்களில் சில அனைத்து வணிக அமைப்புக்களிலும் செல்வாக்குச் செலுத்தக் கூடிய "பொதுவான காரணிகளாக" (Common Factors) அமையும். வேறு சில சூழல்கள் குறிப்பிட்ட சில அமைப்புக்களிலேயே கூடியளவு செல்வாக்கு செலுத்துபவையாக அமைந்திருக்கும். கணக்கீட்டுடன் தொடர்புடைய அனைத்து நபர்களும் இச் சூழல்களது மாற்றங்கள் தொடர்பில் சரியான அறிவினைக் கொண்டிருப்பதோடு, இம் மாற்றங்களினால் தோன்றக்கூடிய புதிய தேவைகளுக்கேற்பத் தம்மைச் சீராக்கி கொள்ளும் இயலுமை கொண்டவர்களாக காணப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கணக்கீட்டுச் சூழல்களின் வகைகள்

(1) பொருளியல் சூழல் - Economical Environment
(2) சட்டச் சூழல் - Legal Environment
(3) சமூக காலாசாரச் சூழல் - Social and Cultural Environment
(4) தொழில்நுட்பச் சூழல் - Technological Environment
(5) அரசியல் சூழல் - Political Environment
(6) தொழில்சார் நுட்பச்சூழல் - Technical and Proffessional Environment

பொருளாதாரச் சூழல் :

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்படுகின்ற பொருளாதார மாற்றங்கள் கணக்கீட்டுச் செயன்முறைகள் உட்பட வணிக நிறுவனங்களது செயற்பாடுகளில் விளைவுகளை ஏற்படுத்துமாயின் அவை பொருளாதாரச் சூழல்கள் எனப்படும்.

உதாரணம்: (1) நிலம், உழைப்பு போன்ற உற்பத்தி காரணிகளின் விலை மாற்றங்கள்.
(2) அந்நியச் செலாவணி மாற்றுவீதங்கள் மாற்றமடைதல்.
(3) சர்வதேசரீதியான பொருளாதார நெருக்கடிகள்.
(4) அரசினது வரி விதிப்புக்கள் மாற்றமடைதல்.
(5) வட்டி வீதங்கள் மாற்றமடைதல்

சட்டச் சூழல் :

வணிக நிறுவனங்களைக் குறிப்பான முறையில் கட்டுப்படுத்தக்கூடிய சட்டங்களும் பொதுவான சட்டத் தேவைகளுமே சட்டச் சூழல்கள் எனப்படும். நாட்டில் நடைமுறையிலுள்ள இச் சட்டங்கள் தொடர்பாக கணக்காளர் மிகச் சிறந்த அறிவினைக் கொண்டவராகக் காணப்படல் வேண்டும்.

உதாரணம்: (1) 1890ம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச் சட்டம்.
(2) 2007ம் ஆண்டு 07ம் இலக்க கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் சட்டம்.
(3) பாவனையாளர் பாதுகாப்புச் சட்டங்கள்.
(4) 2006ம் ஆண்டு வருமானவரிச் சட்டங்கள்.
(5) ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிச் சட்டங்கள்.

சமூக கலாசாரச் சூழல் :

நாட்டிலுள்ள மக்களது நம்பிக்கைகள், மனப்பாங்குகள், சுவை, வருமானம், கலாசார விடயங்கள், பழக்க வழக்கங்கள், கல்வி போன்றன நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிறுவனங்களது செயற்பாடுகளிலும் கணக்கீட்டிலும் தாக்கங்களை ஏற்படுத்துவதனால் இவை சமூக கலாச்சார சூழல்கள் எனப்படும். இவை உற்பத்தி; விநியோகம்; சந்தைப்படுத்தல்களில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

உதாரணம்: (1) சிங்கள; தமிழ் புதுவருடப் பண்டிகைகளின் போது உடைகள், உணவுப் பண்டங்களுக்கு கேள்வி அதிகரித்தல்.
(2) கிறிஸ்மஸ் பண்டிகை காலங்களில் அலங்காரப் பொருட்களுக்கும்; பரிசுப் பொருட்களும் கேள்வி ஏற்படுதல்.
(3) இஸ்லாமியர்களின் நோன்பு காலங்களில் பேரிச்சம் பழத்துக்கான கேள்வி அதிகரித்தல்.

தொழில்நுட்பச் சூழல் :

கணினி முறைகளின் அறிமுகம், நவீன பொறி உபகரணங்களின் அறிமுகம் போன்ற தொழில்நுட்ப அபிவிருத்திகள் கணக்கீட்டு நிதியறிக்கைகளைத் தயாரிப்பதில் கூடியளவு சௌகரியமான தன்மைகளை உருவாக்கியுள்ளன. கடனட்டைகள், வரவட்டைகள் போன்ற இலத்திரனியல் அட்டைகளை கையாளுதல், இணையத்தள வலையமைப்புக்கள் போன்றவற்றைப் பயன்படுத்துதல் போன்றன தொழில் நுட்பச் சூழல்களாகும்.

அரசியல் சூழல் :

உள்நாட்டு அரசியலிலும், சக்தி வாய்ந்த சர்வதேச அரசியலிலும் காணப்படக் கூடிய உறுதித் தன்மைகள் மற்றும் உறுதியற்ற தன்மைகளும் அவற்றிலான மாற்றங்களும் போக்குகளும் வணிக அமைப்புக்களின் செயற்பாடுகளில் தாக்கங்களை ஏற்படுத்துவதனூடாக கணக்கீட்டுச் செயன்முறைகளிலும் செல்வாக்குச் செலுத்துவதனால் இவை அரசியல் சூழல் எனப்படும்.

உதாரணம்: (1) அமெரிக்க அரசியலில் ஏற்படும் மாற்றங்கள் ஏனைய நாடுகளிலும் செல்வாக்குச் செலுத்துதல்.
(2) உள்நாட்டில் உறுதியான அரசு காணப்படாதபோது வணிக நடவடிக்கைகள் தளம்பல் அடைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்சார் நுட்பச்சூழல் :

கணக்கீடு என்பது ஒரு தொழிலாக மாறியுள்ள இவ்வுலகில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களையும், இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் கணக்கீட்டு நியமங்களையும் அனுசரித்தே இலங்கையிலுள்ள வணிக நிறுவனங்கள் தமது கணக்கீட்டு நிதியறிக்கைகளை தயாரிப்பதையும் சமர்ப்பித்தலையும் மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் இவை தொழில்சார் நுட்பச்சூழல் எனப்படும்.

- தொடரும்...

CIMA கற்கைநெறியை பயில சிறப்பான வழிகாட்டலை வழங்கும் Imperial கல்லூரி

உலகளாவிய ரீதியில் வணிகத்தலைவர்களை உருவாக்குவதில் வியாபித்திருக்கும் CIMA கற்கை நெறியை இலங்கையிலும் பல மாணவர்கள் தமது தொழில்சார் கற்கைநெறியாக தெரிவு செய்கின்றனர். ஐக்கிய இராச்சியத்திற்கும் அடுத்தபடியாக CIMA கற்கை நெறியில் அதிக மாணவர்களைக் கொண்டுள்ள நாடு இலங்கையே ஆகும். உலகளாவிய ரீதியில் சவால்களை சிறப்பாக எதிர்கொள்ளும் வணிகத்தலைவர்களை உருவாக்கும் CIMA கற்கை நெறியினை சிறப்பாக வழங்குவதில் Imperial கல்லூரி தனக்கென தனியிடம் வகிக்கின்றது. CIMA கற்கை நெறியை வழங்குவதில் இலங்கை காலாகாலமாக தனிச்சிறப்புப் பெற்றுள்ளது. உலகளாவிய ரீதியில் ஒரே பரீட்சை முறையினை பின்பற்றும் CIMA கற்கை நெறியில் ஒவ்வொரு ஆண்டிலும் அதிக புள்ளிகளை பெறுகின்ற சாதனை மாணவர்களை உருவாக்குவதில் இலங்கைக்கு தனியிடம் இருக்கின்றது. CIMA பயிற்றுவிப்பதில் அனுபவமிக்க நிறுவனமாக கடந்த 25 ஆண்டுகாலமாக Imperial கல்லூரி தடம் பதித்துள்ளது.

Imperial கல்லூரியின் தனிச்சிறப்பு யாதெனில் முற்றுமுழுதான அர்ப்பணிப்பான பணியே ஆகும். CIMA கற்கை நெறியானது முழுக்க முழுக்க தலைமைத்துவத்தையும் முகாமை அறிவினையும் வணிக அறிவினையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இதனைக் கற்பிக்கும் போதும் இத்தகைய விடயங்கள் பிரயோக ரீதியான அணுகுமுறைகளைக் கொண்டு வழங்கப்படல் அவசியமாகும். Imperial கல்லூரி பிரயோக ரீதியான விரிவுரை முறையினை பின்பற்றுவதோடு மாணவர்களை பிரயோக ரீதியில் வணிகச் சவால்களை எதிர்கொள்ளத் தக்கவர்களாக மாற்றுகின்றது. வெறுமனே கோட்பாட்டு அறிவு, பாடப்பரப்புக்களில் மாத்திரம் மாணவர்களை வரையறுத்து விடாது மாணவர் ஒரு தொழிற்சூழலில் தம்மை முதன்மைப்படுத்தக்கூடியவாறான வழிகாட்டல்களை Imperial கல்லூரி வழங்குகின்றது. ஒவ்வொரு ஆண்டிலும் இடம்பெறும் CIMA வின் பல்வேறு கட்டத்திலான பரீட்சைகளில் இலங்கையில் பல மாணவர்கள் உயர் புள்ளிகளைப் பெற்று சாதனை படைக்கின்றனர். இதற்கும் Imperial கல்லூரி தமது அளப்பரிய பங்கினை வழங்குகின்றது. சாதனை மாணவர்களில் பெரும்பாலான மாணவர்களை உருவாக்கிய பெருமை Imperial கல்லூரிக்கு உண்டு. இதற்கு Imperial கல்லூரியின் அனுபவமிக்க விரிவுரையாளர்கள் குழாமே காரணமாகும். இலங்கையில் CIMA விரிவுரையாளர்களில் முதன்மை பெற்று விளங்கும் கஜேந்திர லியனராச்சி மற்றும் பிரவீந்த் இராஜரட்ணம் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவ்விருவரும் உலகின் முதன்மை CIMA விரிவுரையாளருக்குரிய CIMA விருதுகளை பெற்றிருப்பதோடு பிரயோக ரீதியில் பாடப்பரப்புக்களை விளக்குவதனூடாக மாணவர்களை சந்தேகமின்றி பரீட்சையில் மிளிர வழிவகுக்கின்றனர். Imperial கல்லூரியின் இயக்குனர்களான பிரவீந்த் இராஜரட்ணம், சிவபாஸ்கரன் ஆகியோர் இலங்கையில் மட்டுமல்லாது பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளில் விரிவுரை அனுபவங்களை கொண்டிருக்கின்றனர். ஏனைய விரிவுரையாளரும் வணிகத் தொழிற் சூழலில் அனுபவமிக்கவர்களாக இருப்பதால் எல்லாப் பாடப்பரப்புக்களையும் நடைமுறை வணிகங்களுக்கு ஏற்ற வகையில் எளிமையாகவும், செம்மையாகவும் வழங்குகின்றனர். இதன் காரணமாகவே Imperial கல்லூரி 100 வீதம் சித்தியெய்தும் வீதத்தைக் கொண்டுள்ளது.

Imperial கல்லூரி CIMA நிறுவனத்தின் தர்ப்பங்காளர் நிறுவனமாக காணப்படுவதோடு தற்போது Exclusive Quality Partner விருதினையும் கொண்டுள்ளது. இதற்கான காரணம் CIMA கற்பித்தலில் Imperial கல்லூரியின் தனித்துவமான பணியே ஆகும். சிறந்த கற்றல் முலங்களையும், சிறந்த விரிவுரைகளையும், சிறந்த மீட்டல் பயிற்சிகளையும் ஒழுங்கான நேர அட்டவணையின் கீழ் பூர்த்தி செய்யப்படுவதோடு மாணவர்களுக்கான தொழில் நேர்காணல்களை சிறப்பாக எதிர்கொள்வதற்கான பயிற்சியும் வழங்கப்படுகிறது. இதன்மூலம் தமது மாணவர்களை தொழிற்துறையில் தனித்துவமிக்க தலைவர்களாக உருவாக்குவதை மையப்படுத்தி Imperial கல்லூரி இயங்கி வருகிறது.

வணிகச் சூழலில் சிறந்த தொழிலைப் பெற CIMA கற்கை நெறியை தெரிவு செய்திருந்தால் அதனை சிறந்த கற்கை நிலையத்தில் பயில வேண்டுமல்லவா? CIMA கற்கை நெறியை அனுபவத்துடனும், பிரயோக ரீதியிலும், வழங்கும் Imperial கல்லூரியில் இணைவதனூடாக நீங்களும் வெற்றிகரமாக வணிகத்தலைவராக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M.J.M. இம்திஹான்
B.Com (Hons), Colombo
பொருளியல், கணக்கீட்டு சிரேஷ்ட விரிவுரையாளர்,
சிரேஷ்ட்ட வரி அதிகாரியும்.
இறைவரித் திணைக்களம் (மே.மா)- கொழும்பு

"சீராக்கங்கள்" தொடர்பிலான கணக்கீடு II இற்கான விளாக்கள் இங்கு தரப்படுகின்றன.

கணக்கீடு - II

01. இந்திரா இலத்திரனியல் கடையில் 25 டிசம்பர் 2011 இல் தீ விபத்து ஏற்பட்டது. ரூபா 28,000 கிரயமுடைய பண்டங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்தும் தீயினால் அழிவடைந்தன. பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

2011.04.01 தொக்கு	ரூபா 260,000
கொள்வனவுகள் (VAT 10% உட்பட)	ரூபா 660,000
விற்பனைகள் (VAT 10% உட்பட)	ரூபா 770,000 (தீயால் அழிவுற்ற பண்ட விற்பனை நீங்கலாக)

மேலதிக தகவல்கள்:

(i) கொள்வனவுகளில் ரூபா 33,000 (VAT உட்பட) பெறுமதியுடையவை தீயழிவு இடம்பெற்ற தினத்தில் வழியிலுள்ள பண்டமாகக் காணப்பட்டன.
(ii) பொதுவான இலாபவீதம் - விற்பனைவிலையில் 15% சதவீதம்.
(iii) மீட்கப்பட்ட இருப்புக்களை சீர்படுத்துவதற்கான செலவு 7,000 ரூபாவாகும்.
(iv) மீட்கப்பட்ட இருப்புக்களில் $^{1}/_{3}$ பங்கானவை 29,700 ரூபா (VAT 10% உட்பட) விற்பனை செய்யப்பட்டது.
(v) அழிவுக்குட்பட்ட கையிருப்பின் கிரயத்தில் காப்புறுதிக் கம்பனி 80 சதவீதத்தினை நட்டாடாக வழங்க உறுதியளித்தது.
(vi) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி 7,000 ரூபாவாகும்.
(vii) இது VAT பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும்.

தேவைப்படுவது:

(i) தீயினால் அழிவடைந்த பண்டங்களின் பெறுமதியினை கணிப்பிடுவதற்கான கூற்று.
(ii) Vat கணக்கு
(iii) தீயால் அழிவுற்ற பண்டக் கணக்கு
(iv) மீட்கப்பட்ட பண்டக் கணக்கு

2) 2012.03.31 இல் முடிவடையும் நிதிவருடத்தில் வியாபாரமொன்றின் இறுதித்தொக்கை கணிக்க முடியவில்லை ஆதலால் 2012.04.10 இல் இத் தொக்கெடுத்தல் மேற்கொள்ளப்பட்டது. 2012.04.10 இல் நிறுவனத்தின் இறுதித் தொக்கு 425,000 ரூபாவாகும். நிறுவனம் கொள்விலையில் 20% கூட்டி விற்பனை விலையினை நிர்ணயிக்கின்றது.

1) 01.04.2012 இற்கும் 10.04.2012 இற்கும் இடையில் இடம்பெற்ற நடவடிக்கைகள் வருமாறு

	ரூபா
கொள்வனவு	70,000
விற்பனை	120,000
உட்திருப்பம்	12,000

2) "விற்பனை இன்றேல் திருப்பி அனுப்புக" எனும் நிபந்தனையில் வாடிக்கையாளருக்கு அனுப்பிய பொருட்களில் 48,000 ரூபா விற்பனை விலையிலான பண்டங்கள் திருப்பியனுப்பக்கூடிய காலத்தறுவாயில் வாடிக்கையாளர் வசமிருந்தன. இவற்றுள் 50% மானவை இக்காலப்பகுதியில் திருப்பப்பட்டன.

3) 30.03.2012 இல் இறக்குமதி செய்யப்பட்ட பண்டமானது ரூபா 35,000 கொள்விலையிலான 15.04.2012 இல் நிறுவனத்தை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

31.03.2012 இல் உள்ள சரியான இறுதித்தொக்கைக் காட்டக்கூடியவாறு இருப்பு சீராக்கற் கூற்றைத் தயாரிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) ஜானக கம்பனியின் பொறியும் இயந்திரங்கள் தொடர்பான தரவுகள்

	இயந்திர வகைகள்			
	அரியும் இயந்திரம்	சீவும் இயந்திரம்	துளையிடும் இயந்திரம்	கடைச்சல் இயந்திரம்
கிரயம் (ரூபா)	280,000	360,000	60,000	140,000
கொள்வனவு திகதி	2009.01.01	2010.01.01	2010.07.01	2009.07.01
எஞ்சிய பெறுமதி (ரூபா)	40,000	60,000	-	20,000
பயன்பாட்டு ஆயுட்காலம்	6 வருடம்	10 வருடம்	10 வருடம்	6 வருடம்

நிதியாண்டு ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 31ல் நிறைவு பெறுகின்றது. பொறியும் இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பொறித் தொகுதியின் மறுசீரமைத்தல் தேவைகள் கருதி 2011 டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டு காலப்பகுதியில் கம்பனி பின்வரும் முடிவுகளை மேற்கொண்டுள்ளது.

1. **அரியும் இயந்திரத்தினது** நுட்பத்திறனை விரிவுபடுத்தும் நோக்கில் 80,000 ரூபாவுக்கு புதுப்பித்தல் வேலையொன்று 2011 ஜனவரி 01 இல் மேற்கொள்ளப்பட்டதனால் இயந்திரத்தின் செயற்றிறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் ஆயுட்காலமோ, எஞ்சிய பெறுமதியே மாற்றமடையவில்லை.

2. **சீவும் இயந்திரமானது** 2011 ஜனவரி 01 இல் 400,000 ரூபாவாக மறுமதிப்பீடு செய்யப்பட்டதுடன் ஆயுட்காலம் 2011 ஜனவரி 01 இல் இருந்து இன்னும் 10 ஆண்டுகளுக்கு விரிவெய்தியதுடன் இறுதிநிலைப் பெறுமதியில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை.

3. **துளையிடும் இயந்திரமானது** 2011 யூன் 30 இல் வழக்கிழந்துள்ளதனால் அது எதுவித மீள்விற்பனைப் பெறுமதியையும் கொண்டிராததால் ஏடுகளிலிருந்து முழுமையாக நீக்க முடிவு செய்யப்பட்டது.

4. **கடைச்சல் இயந்திரமானது** பாவனைக்கு ஒத்துவராததால் அதனை 90,000 ரூபாவுக்கு விற்பனை செய்ய 2011 ஜனவரி 01 இல் முடிவு செய்யப்பட்டது.

வேண்டப்படுவது.

1. 2010.12.31, 2011.12.31 இல் முடிவுற்ற ஆண்டுகளுக்கான பொறித்தொகுதியின் பொறியும் இயந்திரங்களின் மொத்த தேய்மானத்தைக் கணிப்பிடுக.(ஒவ்வொரு இயந்திரங்களினது தேய்வுகள் தனித்தனியே காட்டப்படல் வேண்டும்)

2. 2011 ஆம் நிதியாண்டிற்கான நிறுவனத்தின் பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் [இயந்திரங்கள் அனைத்திற்கும் நிறுவனம் தனியொரு பொறி இயந்திரக் கணக்கை பேணிவருகின்றது]
   1. பொறி இயந்திரக் கணக்கு
   2. பொறி இயந்திர அகற்றல் கணக்கு

4) **வரையறுத்த கதிரவன் கம்பனி ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31இல் தனது புத்தகங்களை மூடி சரிசெய்கின்றது. 2011.12.31இல் முடிவுற்ற ஆண்டிற்கான பின்வரும் தனித்தனியான விடயங்களுக்கு நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.**

(1) இவ்வாண்டிற்கான ரூபா 350 000 கடன்விற்பனையில் 2% சேகரிக்க முடியாதவையென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(2) கம்பனி 2011 ஜனவரி 01 இல் மூன்று வருடத்திற்கான வாடகைச் செலவாக ரூபா 240 000 செலுத்தியுள்ளது. இந்தக் கொடுப்பனவு கொடுத்த வாடகைக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(3) கம்பனி 2011 இல் விளம்பரச் செலவாக ரூபா 400 000 ஐ செலுத்தியுள்ளதுடன் அதனை முற்பண விளம்பரச் செலவுக் கணக்கில் பதிந்துள்ளது. எனினும் 2011.12.31இல் முடிவுற்ற ஆண்டிற்கான விளம்பரச் செலவு ரூபா 260 000 ஆகும்.

(4) இவ்வாண்டிற்கான நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வுத் தொகையானது ரூபா 28 000 ஆகும். தேய்வீட்டுக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அமைய இவ்வாண்டு ஆரம்பத்தில் உள்ள தேய்வு ஏற்பாட்டு மீதியானது ரூபா 3 000 ஐ மிகையாகக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) இவ்வாண்டிற்கான அறவிடமுடியா கடன்தொகையானது ரூபா 9 000 இற்கு அதிகரித்துள்ளது. எனினும் இத்தொகையானது ஏற்கெனவே ஐயக்கடனாகக் கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(6) 2011 ஜனவரி 23இல் 2011ஆம் ஆண்டிற்கான இறைவரி ரூபா 12 000 இற்கு இறைவரி அறிவித்தல் கிடைக்கப் பெற்றது. இத்தொகை முன்பு பதியப்படவோ செலுத்தப்படவோ இல்லை. 2012 மார்ச்31 இற்கு முன்னர் இது செலுத்தப்பட வேண்டியதாகும்.

(7) இவ்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட எழுதுகருவிகளுள் ரூபா 1400 பயன்படுத்தப்படாமல் 2011 டிசம்பர் 31இல் உள்ளது.

(8) கம்பனி 2011 யூலை 01இல் தொடங்குகின்ற இருவருட சேவை ஒப்பந்தம் ஒன்றிற்காக ரூபா 60 000 ஐ வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெற்றுள்ளது. இத்தொகை பெற்ற சேவை வருமானக் கணக்கில் பதியப் பட்டுள்ளது.

(9) 2011 டிசம்பர் 31இல் கையிலுள்ள பௌதிக இருப்பு ரூபா 160 000 ஆக காணப்பட்டது. எனினும் கணக்கீட்டுப் பதிவுகள் ரூபா 180 000ஐ காட்டியது. இவ்வித்தியாசத்திற்கு "வழியிலுள்ள பண்டம்" காரணமாகும். இருப்புத் தொடர்பில் இதுவரை எப்பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.

(10) கம்பனி 2011 ஜனவரி 01இல் இயந்திரமொன்றினை ரூபா 250 000 கிரயத்தில் கொள்வனவு செய்தது. இது புத்தகங்களில் முறையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பிடப்பட்ட உயிருள்ள காலம் 10 வருடங்களாகவும் எஞ்சிய பெறுமதி எதுவும் இல்லாததாகவும் இருக்கின்றது.

5) பின்வரும் தரவுகளைக் கொண்டு 31.03.2012இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிர்வாகச் செலவுக் கணக்கினைத் தயாரிக்க.

அ) நிர்வாகச் செலவினங்கள் தொடர்பில் 31.03.2012 இல் முடிவுற்ற நிதியாண்டில் வரையப்பட்ட காசோலை 257,000 ரூபா.

ஆ) 31.03.2011இல் முடிவுற்ற நிதியாண்டில் காசாகச் செலுத்தப்பட்ட வாடகையில் 2011 / 12 , 2012 / 13 ஆகிய நிதியாண்டுகளுக்கென செலுத்தப்பட்டிருந்த வாடகைகள் முறையே 24.000 ரூபா, 20,000 ரூபா உள்ளடங்கியுள்ளது.

இ) 31.03.2012 இல் முடிவுற்ற நிதியாண்டில் காசாகச் செலுத்தப்பட்ட சம்பளத்தினுள் ரூபா 17,000 மீதியாக முன்கொண்டு செல்லப்படல் வேண்டும்.

ஈ) 31.03.2011 இல் சென்மதியாக இருந்த காப்புறுதிக் கட்டணமும் மின்கட்டணமும் முறையே 11,750 ரூபா, 7,250 ரூபா.

உ) 2011 / 12 நிதியாண்டில் கிடைக்கப்பெற்ற இறையறிவித்தல் 19,000 ரூபா. இவை 30.06.2012 இற்கு முன்னர் செலுத்தப்படவேண்டியவை.

கண்டியில் நடைபெறுகிறது...
On Progress in Kandy...

தொடர்புகளுக்கு
07194 94 227

Account : Business Studies
I.L.A SALAM : B BANUCHANDAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. நீவின்
B.Com (Hons), Dip.in.Ed
சிரேஷ்ட கணக்கீட்டு ஆசிரியர்
புனித சவேரியார் பெண்கள் கல்லூரி
(தேசிய பாடசாலை) - மன்னார்.

The MCQ

01. வணிகம் ஒன்று 1.4.2011ல் பெற்றுள்ள ரூ 600,000 ஆன குத்தகைஆதனம் தொடர்பாக 31.03.2012 ல் நடைமுறைபொறுப்பு, நடைமுறையல்லாத பொறுப்பு என்பனவற்றிக்கு முறையே ரூபா 120,000 மும், ரூ 370,000 மும் வெளிப்படுத்தியது இது எவ் எண்ணக்கருவிற்கு எற்றவகையில் ஆகும்.

(1) அலகு சார் (2) பொருண்மை (3) அட்டுறு நிலுவை
(4) தொடர்ந்தியங்கும் (5) தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியம்

02. வணிகம் ஒன்றில் குறித்த நிதியாண்டு ஒன்றில் நிதிக் கூற்றுத் தயாரித்த போது பினபற்றப்பட்டுள்ள நடைமுறைகள் வருமாறு

X - ஆண்டிறுதியில் விற்கப்படாதிருந்த வியாபார இருப்புக்கள் ஆண்டுக்கான கொள்வனவு கணக்கில் இருந்து கழிக்கப்பட்டு விற்ற சரக்கின் கிரயம் பெறப்பட்டுள்ளது.

Y - எதிர்வரும் நிதியாண்டுக்கான விற்பனை கட்டளை ஒன்றுக்காக பெறப்பட்டுள்ள காசு ஐந்தொகையில் பொறுப்பில் காட்டப்பட்டுள்ளது.

பின்பற்றப்பட்டுள்ள எண்ணக்கருக்களை சரியான முறையில் காட்டும் தொகுதி எது.

(1) X - தேறல் Y - இணைத்தல்
(2) X - அட்டுறு Y - தேறல்.
(3) X - இணைத்தல் Y - தேறல்.
(4) X - இணைத்தல் Y - அட்டுறு.
(5) X - தேறல் Y - தொடர்ந்தியங்கும்.

03. வணிகம் ஒன்றின் M-1, M-2 இருப்பு தொகுதி பற்றிய தகவல்கள் வருமாறு.

இருப்பு தொகுதி	1.1.2011ல் மீதி		2011ல் கொள்வனவுகள்		2011ல் விற்பனைகள்		தேறக்கூடிய
	பெறுமதி (ரூபா)	அலகு	பெறுமதி (ரூபா)	அலகு	பெறுமதி (ரூபா)	அலகு	பெறுமதி ரூபா
M-1	50,000	1,000	300,000	6,000	320,000	4,000	40
M-2	60,000	600	200,000	2,000	360,000	2,400	120

31.12.2011ல் ஐந்தொகையில் காட்டப்பட வேண்டிய தொகுதியடிப்படையிலான இருப்பின் பெறுமதியும், வருமானக்கூற்றில் காட்டப்பட வேண்டிய தேறிய இலாபமும் முறையே எது?

	இருப்பு பெறுமதி (ரூபா)	தேறிய இலாபம் (ரூபா)
(1)	140,000	240,000
(2)	140,000	210,000
(3)	144,000	240,000
(4)	144,000	210,000
(5)	120,000	210,000

04. வணிகமொன்று தனது பாவணை நோக்கில் 1.1.2011 ல் ரூ 400,000 கிரயமான போட்டோ பிரதி செய்யும் இயந்திரமொன்றை கொள்வனவு செய்துள்ளதுடன் அதனை பொருத்துவதற்கு ரூபா 20,000 செலவினையும் மேற்கொண்டுள்ளது. 1.7.2011 ல் அவ் வியந்திரத்திற்கு ஒருவருடத்திற்கான பழுதுபார்த்தல் சேவைக்கான ஒப்பந்தம் ஒன்றை ரூபா 10,000 செலவில் மேற்கொண்டுள்ளது. குறித்த இயந்திரத்தின் பாவனைக்காலம் 5 வருடங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய பெறுமதி எதுவும் காணப்படவில்லை.

31.12.2011 ல் முடிந்த ஆண்டு வருமானக்கூற்றில் காட்டப்பட வேண்டிய இயந்திரம் தொடர்பான மொத்தச் செலவுத் தொகை யாது?

(1) ரூ 84,000 (2) ரூ 86,000 (3) 89,000 (4) 80,000 (5) ரூ 42,000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. 1.4.2011 ல் வணிகமொன்றின் ஏட்டில் காணப்பட்ட இரண்டு ஆதனம்,பொறி உபகரணங்களின் கணக்கு மீதியும், தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு மீதியும் முறையே ரூ 600,000மும், ரூ 255,000 மும் ஆகும்.
1.10.2007 ல் ரூ 300,000 கிரயத்தில் கொள்வனவு செய்த பொறி ஒன்றுக்கு 1.10.2011 ல் ரூபா 140,000 செலவில் புதுப்பித்தல் வேலை மேற்கொள்ளப்பட்டது. அதன் காரணமாக பொறியின் ஆயுட்காலம் அன்றில் இருந்து 8 ஆண்டுகளாக மதிப்பீடு செய்யப்பட்டது. மற்றைய பொறி 31.03.2012 ல் விற்பனை செய்யப்பட்டு ரூபா 150,000 காசும் பெறப்பட்டுள்ளது. வணிகம் பொறிகளுக்கு வழமையாக கிரயத்தில் 10% தேய்விட்டு வந்துள்ளது.

	31.03.2012 ல் முடிந்த ஆண்டுக்கான பொறித் தேய்வு தொகை (ரூபா)	பொறி விற்பனை மூலம் எழுந்துள்ள இலாபம்/நட்டத் தொகை (ரூபா)
(1)	45,000	30,000 இலாபம்
(2)	50,000	30,000 நட்டம்
(3)	65,000	30,000 நட்டம்
(4)	35,000	30,000 இலாபம்
(5)	65,000	30,000 இலாபம்

06.

	2010 ஆம் ஆண்டு ரூபா	2011 ஆம் ஆண்டு ரூபா
31.12 இல் பொறுப்புக்கள்	250,000	?
வருமானம்	150,000	90,000
செலவு	85,000	125,000
பற்று	45,000	25,000
31.12 இல் சொத்து	?	995,000

குறிப்பு : குறித்த வணிக முயற்சி ரூபா 745,000 மூலதனமிட்டு 01.01.2010 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் ரூபா 35,000 மேலதிக மூலதனமிடப்பட்டுள்ளது.
31.12.2010 இல் உரிமை, சொத்து 31.12.2011 இல் உரிமை, பொறுப்பு என்பவற்றின் கணிப்பை சரியாக காட்டுவது எது?

	31.12.2010 இல் உரிமையும் சொக்கமும் (ரூபா)	31.12.2011 இல் உரிமையும் பொறுப்பம் (ரூபா)
(1)	20,000 - 270,000	55,000 - 960,000
(2)	810,000 - 1,015,000	785,000 - 210,000
(3)	810,000 - 1,060,000	1,060,000 - 810,000
(4)	765,000 - 1,015,000	740,000 - 255,000
(5)	765,000 - 1,015,000	705,000 - 290,000

07. வருடம் ஒற்றுக்கு ரூபா 200 சந்தா அறவிடும் கழகம் ஒன்றிலே 100 அங்கத்தவர்கள் 01.01.2011 இல் உறுப்புரிமை பெற்றிருந்தனர். இவர்களில் 10 அங்கத்தவர்கள் குறித்த தினத்தில் 2010 ஆம் ஆண்டுக்குரிய சந்தாவை செலுத்தியிருக்கவில்லை. 07 அங்கத்தவர்கள் 2011 ஆம் ஆண்டுக்குரிய சந்தாவை செலுத்தியிருந்தனர்
2011 ஆம் ஆண்டில் அங்கத்தவர்கள் பின்வருமாறு சந்தாவை செலுத்தினர்
2010, 2011 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்தியோர் 05 அங்கத்தவர்கள்
2011 ஆம் ஆண்டுக்கு மட்டும் செலுத்தியோர் 65 அங்கத்தவர்கள்
2011, 2012 ஆம் ஆண்டுகளுக்காக செலுத்தியோர் 10 அங்கத்தவர்கள்
2010 ஆம் ஆண்டுக்குரிய சந்தாவை 2011 ஆம் ஆண்டிலும் செலுத்தாதிருக்கும் அங்கத்தவர்களின் உறுப்புரிமையை இரத்துச் செய்யவும் அவர்கள் தொடர்பான வருமதியை பதிவழிக்கவும் கழகம் தீர்மானித்துள்ளது

31.12.2011 இல் சந்தா வருமதியும், 31.12.2011 இல் முடிந்த ஆண்டுக்கு காசு அடிப்படையில் சந்தா வருமானமும் முறையே எது?

	சந்தா வருமதி (ரூபா)	காசு அடிப்படையில் சந்தா வருமானம் (ரூபா)
(1)	1,600	18,400
(2)	--	18,400
(3)	1,600	19,000
(4)	2,600	19,000
(5)	2,600	18,400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. அங்கத்தவர் ஒருவர் ரூபா 1,000 செலுத்தி இணையக்கூடிய 05 வருட ஆயுட்சந்தா திட்டமொன்றை கழகமொன்று 01.01.2010 இல் அறிமுகம் செய்தது. அத்தினத்தில் 20 அங்கத்தவர்கள் இத்திட்டத்தில் இணைந்ததுடன் மேலும் 10 அங்கத்தவர்கள் 01.01.2011 இல் இணைந்தனர்

31.12.2011 இல் முடிந்த ஆண்டுக்கு ஆயுட்சந்தா வருமானம், 31.12.2011 இல் ஐந்தொகையில் காட்டப்படும் ஆயுட்சந்தா மீதி என்பவை முறையே எது?

	ஆயட்சந்தா வருமானம் (ரூபா)	ஆயட்சங்கா மீகி (ரூபா)
(1)	6,000	24,000
(2)	2,000	28,000
(3)	4,000	22,000
(4)	10,000	20,000
(5)	6,000	20,000

09. சாந்தன், சுகந்தன் இலாபநட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிரும் பங்காளர். 31.12.2011 இல் காணப்பட்ட மீதிகள்

	மூலதனம் (ரூபா)	நடைமுறை கணக்கு (ரூபா)
சாந்தன்	150,000	20,000
சுகந்தன்	200,000	(10,000)

இப்பங்குடமையில் முகுந்தன் ரூபா 180,000 செலுத்தி 01.01.2012 இல் இணைந்தார். இதனால் இலாபநட்ட விகிதம் சமமாக மாற்றப்பட்டு ஆதனம் பொறி உபகரண மீள்மதிப்பால் எழுந்த குறைவு ரூபா 60,000 மும் நன்மதிப்பு ரூபா 30,000 மும் மூலதனக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டது. மேலும் பொது ஒதுக்கக் கணக்கு மீதி ரூபா 90,000 தொடர்ந்தும் இருக்கும் வகையில் நடைமுறைக் கணக்கில் சீராக்கப்பட்டது

இச்சீராக்கங்களின் பின்னர் பங்குடமை நிறுவனத்தில் சாந்தன், சுகந்தன், முகுந்தன் என்போரின் மொத்த உரிமைத்துவத்தை தனித்தனியே குறிப்பது எது?

	சாந்தன் ரூபா	சுகந்தன் ரூபா	முகுந்தன் ரூபா
(1)	142,000	168,000	170,000
(2)	122,000	178,000	170,000
(3)	196,000	204,000	170,000
(4)	166,000	174,000	140,000
(5)	238,000	222,000	140,000

10. சனாவும் மனாவும் 01.04.2011 இல் முறையே ரூபா 100,000 மும் ரூபா 400,000 மும் மூலதனமிட்டு பங்குடமை ஒன்றை தொடங்கினர். இவர்களின் ஒப்பந்தப்படி ஆண்டின் தொடக்க மூலதனத்திற்கு 10% வருட வட்டியும் பங்காளருக்கு வருடாந்தம் தலா ரூபா 15,000 சம்பளமும் வழங்கப்படும்.

31.03.2012 இல் பங்காளர் நடைமுறைக் கணக்கு சனாவுக்கு ரூபா 5,000 வரவு மீதியையும் மனாவுக்கு ரூபா 45,000 செலவு மீதியையும் காட்டியது. இவ்வாண்டில் பங்காளர் பற்றுதல் எவையும் இடம்பெறவில்லை.

இலாபநட்ட பகிர்வு விகிதமும் 31.03.2012 இல் முடிந்த ஆண்டில் பங்குடமை உழைத்த இலாபம் / நட்டம் முறையே எது?

	இலாபநட்ட விகிதம் சனா : மனா	உழைத்த இலாபம் / நட்டம் ரூபா
(1)	3:1	40,000 இலாபம்
(2)	3:1	80,000 இலாபம்
(3)	4:1	10,000 நட்டம்
(4)	3:1	40,000 நட்டம்
(5)	2:1	40,000 நட்டம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

S.S. குமரன்
B.B.A
சீரேஷ்ட்ட கணக்கீட்டு ஆசிரியர்
மட்டு, ஏறாவூர்

The MCQ

(1)

நிறுவனமொன்று ரூபா 30,000 இற்கு பண்டங்களை கடனுக்கு கொள்வனவு செய்தது. இரண்டு வாரங்களின் பின்னர் ரூபா 1,500 கழிவு நீக்கி ரூபா 13,500 காசு செலுத்தியது.
மேற்தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் முறையே
(1) பட்டியல், நாட்குறிப்புக் கச்சாத்து, கச்சாத்து
(2) பட்டியல், கச்சாத்து, நாட்குறிப்புக் கச்சாத்து
(3) பட்டில், கச்சாத்து
(4) பட்டியல், பற்றுச்சீட்டு
(5) நாட்குறிப்புக் கச்சாத்து, கச்சாத்து

(.....)

(2)

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கு பொருத்தமான கணக்கீட்டுச் சூழல் காரணியை முறையே தெரிவு செய்க
A மூசல் பாவனையால் ஏற்பட்ட பாதக சூழல் தாக்கத்தின் விளைவாக அரசினால் அமுலாக்கப்பட்ட வரிக்கான ஏற்பாடு
B உலகப் பொருளாதார நெருக்கடியால் உண்டான வியாபார செயற்பாடுகளின் சுருக்கம் காரணமாக ஏற்பட்ட ஊழியர் குறைப்புக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு
(1) பொருளாதாரச் சூழல் - இயற்கைச் சூழல்
(2) பொருளாதாரச் சூழல் - சட்டச் சூழல்
(3) சட்டச் சூழல் - பொருளாதாரச் சூழல்
(4) அரசியற் சூழல் - தொழிநுட்பச் சூழல்
(5) தொழிநுட்பச் சூழல் - சட்டச் சூழல்

(.....)

(3)

கம்பனியொன்று ரூபா 25,000 கடனுக்கு பண்டங்களை விற்பனை செய்தது. வாடிக்கையாளரிடம் 10% கழிவு நீக்கி ரூபா 18,000 பணத்தை வசூலித்தது. மிகுதிப் பணத்தை பெறமுடியாதென தீர்மானிக்கப்பட்டது.
இக்கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய முதன்மைப் பதிவேடுகள் முறையே
(1) விற்பனைத் தினசேரி, காசேடு, பொதுநாட்குறிப்பேடு
(2) விற்பனைத் தினசேரி காசேடு
(3) காசேடு, பொதுநாட்குறிப்பேடு
(4) பொதுநாட்குறிப்பேடு, காசேடு
(5) விற்பனைத் தினசேரி, பொதுநாட்குறிப்பேடு, காசேடு

(.....)

(4)

தனிவியாபாரி ஒருவர் தனது வியாபாரத்தில் விற்பனைக் கருமத்தை செயற்படுத்தமுன்னர் வணிகத்திற்காக பின்வரும் கருமங்களை செயற்படுத்தினார்
மோட்டார் வாகனம் ரூபா 100,000 இற்கும் தளபாடங்கள் ரூபா 50,000 இற்கும் கொள்வனவு செய்தார். ரூபா 30,000 பெறுமதியான இருப்புக்களை கொள்வனவு செய்து ரூபா 20,000 பணம் செலுத்தினார் மிகுதி வணிகத்தின் சென்மதியாகும். வணிகத்தின் பெயரில் வங்கிக்கடன் ரூபா 70,000 பெற்றுக்கொண்டார்
வணிகம் தொடர்பாக உரிமையாளர் ஈடுபடுத்திய மூலதனம் யாது?
(1) ரூபா 150,000 (2) ரூபா 170,000 (3) ரூபா 190,000
(4) ரூபா 175,000 (5) ரூபா 180,000

(.....)

(5)

காசோலை வைப்பு ரூபா 45,000 (இதில் ரூபா 20,000 வசூலிக்கப்பட்டது)
காசோலை வரைந்தது ரூபா 85,000 (இதில் ரூபா 40,000 மாற்றப்பட்டது)
காசு வைப்பு ரூபா 50,000
A காசேட்டின்படி வங்கிமீதி யாது?
B காசேட்டு வங்கிமீதிக்கும் வங்கிக் கூற்று மீதிக்கும் இடையிலான வேறுபாடு யாது?

	A	B		A	B
(1)	ரூபா 10,000	ரூபா 20,000	(2)	ரூபா 10,000	ரூபா 30,000
(3)	ரூபா 40,000	ரூபா 20,000	(4)	ரூபா 30,000	ரூபா 10,000
(5)	ரூபா 10,000	ரூபா 10,000			

(.....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(6)
வரையறுக்கப்பட்ட டாட்டா கம்பனி 2011.04.01 இல் ஆரம்பிக்கப்பட்டது. 31.03.2012 இல் கடன்பட்டோர் மீதி ரூபா 85,000 ஆகும். இவ்வாண்டில் கடன்விற்பனையிலும் கடன்கொள்வனவு ரூபா 110,000 குறைவாக இருந்தது. கடன்பட்டோரிடம் பெறப்பட்ட காசிலும் கடன்கொடுத்தோருக்கு செலுத்திய காசு ரூபா 30,000 குறைவாக இருந்தது.
31.03.2012 இல் கடன்கொடுத்தோர் மீதி யாது?
(1) ரூபா 95,000 (2) ரூபா 15,000 (3) ரூபா 210,000
(4) ரூபா 225,000 (5) ரூபா 5,000

(.....)

(7)
உரிமையாளர் ரூபா 50,000 கிரயமான இருப்புக்களை மூலதனமாக ஈடுபடுத்தியதுடன் மேலும் ரூபா 10,000 கிரயமான இருப்புக்களை கடனுக்கு கொள்வனவு செய்தார். இவற்றில் ரூபா 30,000 கிரயமான இருப்புக்களை ரூபா 45,000 காசுக்கு விற்பனை செய்தார்.
இக்கொடுக்கல் வாங்கல்களால் உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றம் யாது?
(1) ரூபா 50,000 அதிகரிப்பு (2) ரூபா 5,000 குறைவு (3) ரூபா 65,000 அதிகரிப்பு
(4) ரூபா 70,000 அதிகரிப்பு (5) ரூபா 10,000 அதிகரிப்பு

(.....)

(8)
நிறுவனத்தின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு ரூபா 120,000 வரவு மீதியாகும். இது தொடர்பாக பின்வரும் வழுக்கல் இனங்காணப்பட்டன
காசேட்டில் கடன்பட்டோர் பகுப்பாய்வு நிரல் ரூபா 10,000 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது. கண்ணனுக்கு கடன் விற்பனை ரூபா 22,000 முழுமையாக ஏடுகளில் பதிவுசெய்யப்படவில்லை. நாதனுக்கு விற்பனை ரூபா 2,000 இறகான துணைப்பேரேட்டுப் பதிவு விடுபட்டிருந்தது.
ஐந்தொகையில் காட்டப்படவேண்டிய சரியான கடன்பட்டோர் தொகை யாது?
(1) ரூபா 152,000 (2) ரூபா 132,000 (3) ரூபா 108,000
(4) ரூபா 88,000 (5) ரூபா 140,000

(.....)

(9)
கணக்காண்டு ஒன்றில் கொள்வனவுக் கணக்கு மீதியைவிட விற்பனைக் கணக்கு மீதி ரூபா 150,000 அதிகமாக இருந்தது. மேலும் வெளித்திரும்பல் கணக்கு மீதியைவிட உட்திரும்பல்க் கணக்கு மீதி ரூபா 10,000 குறைவாக இருந்தது. மேலும் இறுதியிருப்பானது ஆரம்ப இருப்பைவிட ரூபா 25,000 குறைவாக இருந்தது
இவ்வாண்டில் உழைத்த மொத்தலாபம் யாது?
(1) ரூபா 140,000 (2) ரூபா 125,000 (3) ரூபா 165,000
(4) ரூபா 135,000 (5) ரூபா 145,000

(.....)

(10)
கொள்வனவுக்காக செலுத்திய வற்வரி ரூபா 12,000 ஆகவும் விற்பனைமூலம் திரட்டிய வற்வரி ரூபா 18,000 ஆகவும் இருந்ததுடன் விற்பனைக்கிரயம் நீங்கலாக செலுத்திய செலவுகள் ரூபா 15,000 ஆகும். வற்வரி வீதம் 10% எனின் வணிகம் உழைத்த தேறியலாபம் யாது?
(1) ரூபா 50,900 (2) ரூபா 75,000 (3) ரூபா 45,000
(4) ரூபா 60,000 (5) ரூபா 40,800

(.....)

(11)
01.04.2011 இல் ஐயக்கடன் ஏற்பாடு ரூபா 20,000 ஆகும். 31.03.2012 இல் ஐயக்கடன் ஏற்பாடு ரூபா 25,000 ஆகும். 2011/2012 இல் பதிவழிப்புச் செய்த அறவிடமுடியாக்கடன் ரூபா 12,000 ஆகவும் 2010/2011 இல் பதிவழிப்புச் செய்து 2011/2012 இல் மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன் ரூபா 7,000 ஆகவும் இருந்தது.
31.03.2012 இல் முடிந்த ஆண்டுக்கு அறவிடமுடியா ஐயக்கடன் என்பவற்றின் தேறிய தொகை யாது?
(1) ரூபா 7,000 (2) ரூபா 5,000 (3) ரூபா 17,000
(4) ரூபா 10,000 (5) ரூபா 12,000

(.....)

(12)
31.03.2012 இல் முடிந்த ஆண்டுக்கு காசு அடிப்படையில் கணிக்கப்பட்ட தேறிய இலாபம் ரூபா 35,000 ஆகும். பின்வரும் நிலமைகளை கருத்திற் கொள்க
இவ்வாண்டில் 30.06.2012 இல் முடிவடையும் ஒரு வருடத்திற்காக ரூபா 30,000 விளம்பரக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. 31.03.2012 இல் இன்னும் செலுத்தவேண்டியுள்ள வாடகைக் கட்டணம் ரூபா 4,500 ஆகும். 31.03.2012 இல் முடிவடையும் ஆண்டுக்கான தேறிய இலாபம் அட்டறு அடிப்படையில் யாது?
(1) ரூபா 37,500 (2) ரூபா 30,500 (3) ரூபா 32,000
(4) ரூபா 9,500 (5) ரூபா 30,000

(.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13)

இயந்திரமொன்றின் கொள்வனவுக் கிரயம் ரூபா 230,000 ஆகும். இதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட இழிவுப் பெறுமானம் ரூபா 30,000 ஆகும். இரண்டு ஆண்டுகளுக்கு இவ்வியந்திரம் சார்பான திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 50,000 எனின் இயந்திரத்தின் மொத்த பாவனை ஆயுட்காலம் யாது?

(1) 8 ஆண்டுகள் (2) 4 ஆண்டுகள் (3) 6 ஆண்டுகள்
(4) 7 ஆண்டுகள் (5) 4 ஆண்டுகளும் 6 மாதங்களும்

(.....)

(14)

கிரிக்கட் மட்டைகளை உற்பத்திசெய்வது தொடர்பான தகவல்கள்

கிரிக்கட் மட்டை ஒன்றுக்கான பலகையின் கிரயம் ரூபா 200/=. கிரிக்கட் மட்டை ஒன்றுக்கான கூலிக் கிரயம் ரூபா 100/=. மொத்த தொழிற்சாலை மேந்தலைக் கிரயம் ரூபா 10,000 ஆகும். உற்பத்தி செய்த மட்டைகளின் எண்ணிக்கை 200. கிரயத்தில் 50% இலாபத்தை உழைப்பதற்குரிய விற்பனை விலை கிரிக்கட் மட்டை ஒன்றுக்கு யாது?

(1) ரூபா 520/= (2) ரூபா 545/= (3) ரூபா 525/=
(4) ரூபா 510/= (5) ரூபா 530/=

(.....)

(15)

01.01.2011 இல் ஆயுட்சந்தாக் கணக்கு மீதி ரூபா 16,000 ஆகும். ஆயுட்சந்தாத் திட்டமானது 7 வருடங்களுக்கு சமமான தொகைகளாக பதிவழிக்கத்தக்க முறையில் 01.01.2009 இல் அறிமுகப்படுத்தப்பட்டது

31.12.2011 இல் முடிந்த ஆண்டுக்கு ஆயுட்சந்தா வருமானம் எவ்வளவு?

(1) ரூபா 2,220 (2) ரூபா 3,200 (3) ரூபா 2,200
(4) ரூபா 3,000 (5) ரூபா 2,500

(.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ImperialCollege
NURTURING TOMORROW'S LEADERS

www.icbsgroup.com

The Proud Sponsor of Spellmaster with CIMA

Colombo
320 - 1/1, Galle Road,
Colombo 03.
Phone : 011 4 51 52 53/ 0773 918 777
Fax : 011 2 577 780
Email : info@icbsgroup.com

Kandy
No. 15 George E. De. Silva Mawatha,
Kandy.
Phone : 081 4 950 950 / 0773 919 777
Fax : 081 4 950 000
Email :info.kandy@icbsgroup.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CIMA

Chartered Institute of Management Accountants

CIMA gives you the

passport for a

GLOBAL CAREER



across 176 countries

195,000+ students & members

CIMA Colombo T. 2503880
E. colombo@cimaglobal.com

CIMA Kandy T. 081 7393910
E. kandy@cimaglobal.com

www.cimaglobal.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org